இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 129 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 3 – செவ்வாய்க்கிழமை 19 டிசம்பர் 2023 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 129: Thiruvalluvar Year - 2054 - Margazhi 3 - Tuesday 19 December 2023 - Chennai 16 Pages ₹ 5.00


## கழக இளைஞரணி மாநில மாநாடு (24)

# சிங்கத் தமிழன் செண்பக இராமன்!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார்.**

**சேலத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

### கலைஞர் கடிதம்

**உடன்பிறப்பே,**

தாய்மொழிப் பற்றும், தாய் நாட்டுப் பற்றும் - ஒருவர் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அவரது ரத்தத்தில் கலந்த ஒன்றாகவே ஆகிவிடுகிறது. அதிலும் ஒரு தமிழனுக்கு மொழிப் பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று என்பது இரவலாகப் பெறக் கூடியதோ; அல்லது விலை கொடுத்து வாங்கக் கூடிய பொருளோ அல்ல - உயிரோடு, மூச்சோடு, இரத்தத்தோடு, கலந்த உணர்வாகும் அது! அந்த உணர்வைப் பெற்ற ஒருவராக விளங்கி, இந்திய நாட்டின் உரிமைப் போராட்டத்தில் ஒரு வீரராக, ஐக்கியமானவர்தான் செண்பகராமன் - தமிழகத்தின் விடுதலை தளகர்த்தர்களின் வரலாறு என்பது அவரை விடுத்து, குறிக்கப்படுமேயானால் - அது கலசம் வைக்காத கோபுரம் போல்தான் இருக்கும். அதுவும், நெல்லை மாவட்டத்துடன் நெருங்கி ஒட்டியிருக்கிற நாகர்கோவில் பகுதியில் பிறந்த செண்பகராமன். தேச விடுதலைப் போரில் ஒரு திலகம் போன்றார், சுதந்திர தேவியின் நெற்றிக்கும் - அவள் பெற்ற வெற்றிக்கும் - என்றால் அது, மிகையாகாது. அவரைப் பற்றியும், நெல்லையில் கூட இருக்கும் இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்பதால், இதோ, அவரது வாழ்க்கை ஓவியம் வரைந்திடுகிறேன்.

சுதந்திரப் போராட்டத்தில், விடுதலை பெற்ற இந்தியத் திருநாட்டைக் காண முடியாமலே கண் மூடியவர்களில் ஒருவர்தான், செண்பகராமன். இந்தியச் சுதந்திரப் போராட்டத்தை வெளிநாடுகளில் விளம்பரப்படுத்துவதற்கு வாய்ப்பாக விளங்கியவர்களில் அவர் ஒருவர் என்று சொல்வதை விட, அவரே அந்தப் போராட்டத்தில் பிரதான பாத்திரமாக விளங்கியவர் என்றே சொல்லலாம். அவர் வாழ்ந்த காலம் 43 ஆண்டுகள்தான். அதில் 26 ஆண்டுகள் தலைமறைவாகத் திரிந்து, சுதந்திரப் போராட்டத்தை ஊக்குவிக்கும் உந்து சக்தியாக விளங்கியுள்ளார். விரோதிகள் சிலர், அந்த வீரர் மீது பொறாமை கொண்டு மெல்லக் கொல்லும் விஷத்தைக் கலந்து கொடுத்து அற்ப ஆயுளில் அவர் உயிரைத் துடிக்கத் துடிக்க முடித்து விட்டனர்.

நாகர்கோயில் பகுதியிலிருந்த திருவாங்கூரில், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட வெள்ளாளப் பிள்ளைமார் குடும்பத்தில் சின்னசாமி - நாகம்மை தம்பதிகளுக்கு 1891ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் மகனாகப் பிறந்த செண்பகராமன், திருவனந்தபுரத்தில் தனது உயர்கல்வியைத் தொடர்ந்து, அந்தக் கால கட்டத்தில் ராஜத் துரோகக் குற்றத்திற்கு ஆட்பட்டு சிறைப்பட்ட பாலகங்காதர திலகரின், தியாக உள்ளத்தினால் கவரப்பட்டு, அப்போது நடைபெற்ற அணிவகுப்பில் முதன் முதலாக "ஜெய்ஹிந்த்" என்ற முழக்கத்தை எழுப்பியவராவார்.



செண்பக இராமன்



செண்பகராமன் துணைவியார் திருமதி லட்சுமிபாய்

அவரது அறிவாற்றலையும், நாட்டுப் பற்றையும், துணிவையும் கண்டு வியந்த ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த உளவாளியும் - விஞ்ஞானியுமான - திரு. வால்டர் வில்லியம் என்பவர், அவரை ஜெர்மனிக்கே அழைத்துச் சென்று, இத்தாலியில் உள்ள நேபிள்ஸ் நகரத்து "பெர்லிஸ்ட் லாங்வேஜ்" என்ற கல்லூரியில், மேல்படிப்பில் சேர்த்து விட்டார். பின்னர் ஸ்விட்சர்லாந்து "சூரிச்" நகரில் "இஞ்சினீயரிங்" பட்டம் பெற்றார். மாணவனாக இருக்கும்போதே, ஆங்கிலேயர் ஆதிக்கம் இந்தியாவில் கொடி கட்டிப் பறப்பதை இடி முழக்கப் பேச்சினால், எதிர்த்து வந்தார்.

அடுத்து அவர் பெர்லின் சர்வகலாசாலையில், பொறியியல் டாக்டர் பட்டம் பெற்றார். பேரறிஞர் அண்ணா அவர்களுக்கும், செண்பகராமனுக்கும் ஓர் ஒற்றுமை உண்டு. இருவருமே செப்டம்பர் திங்கள் 15ஆம் நாள் பிறந்தவர்களாகும்.

"சர்வதேச இந்திய ஆதரவுக் குழு" (International Pro-Indian Committee) என்றதோர் அமைப்பினை செண்பகராமன் அமைத்தார். இந்த அமைப்பின் சார்பில், இந்திய மக்களை ஆங்கிலேயர் பிடியிலிருந்து மீட்டிட, அகில உலக நாடுகளின் ஆதரவையெல்லாம் கோரிப் பெற்றிட பாடுபட்டார். இந்த அமைப்பின் சார்பில், "ப்ரோ - இண்டியா" (இந்திய ஆதரவு) என்ற இதழினை வெளியிட்ட பெருமையும், செண்பகராமனுக்கு உண்டு. இந்த இதழ், ஜெர்மானிய மொழியிலும், ஆங்கிலத்திலும் ஸ்விட்சர்லாந்து நாட்டில் "சூரிச்" நகரிலிருந்து வெளியானது. வெள்ளைக்காரர்களின் ஆட்சியில் இந்திய நாட்டு மக்கள் அடைந்து வந்த துன்பங்களைப் பற்றியெல்லாம் தொடர்ந்து செண்பகராமன், தனது இதழில் எழுதியதோடு, ஆங்கில அரசின் நடவடிக்கைகளுக்கெல்லாம் தக்க பதில்களை தொடர்ந்து எழுதிய தன் பயனாக இந்த இதழ், ஐரோப்பிய கண்டம் முழுவதும் வலம்வரத் தொடங்கியது.

என் நீண்ட நாள் அன்பிற்கும், மதிப்புக்கும் உரிய அண்ணன் கவி கா.மு.ஷெரீப் அவர்கள், கவிஞர் வானம் பாடி எழுதிய "செண்பகராமன்" என்ற ஒரு சிறு நூலுக்கு பதிப்புரை ஒன்று எழுதியிருக்கிறார். நெல்லை மாநாடு நடைபெறும் நேரத்தில், அந்தப் பகுதியைச் சேர்ந்த வீரன் செண்பகராமன் குறித்து நான் எழுதும் இந்தக் கட்டுரை தொடரில் செண்பகராமன் பற்றி அவர் எழுதிய பதிப்புரையின் ஒரு பகுதியை வருங்கால இளைஞர் சமுதாயம் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். அந்தப் பகுதி இதோ :-

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

# நியாயமான கோரிக்கைகள் விரைந்து நிறைவேற்றப்படும்!

## கோவையில் செம்மொழிப் பூங்கா அடிக்கல் நாட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, டிச. 19-**

**"நியாயமான கோரிக்கைகள் விரைந்து நிறைவேற்றப்படும் என்றும் மக்களின் பிரச்சினைகளுக்கு விடிவு காண்பதே அரசின் நோக்கம்" எனவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கோவையில் செம்மொழிப் பூங்கா அடிக்கல் நாட்டு விழாவில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2023) கோயம்புத்தூரில் நடைபெற்ற செம்மொழிப் பூங்கா அடிக்கல் நாட்டு விழா மற்றும் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை வருமாறு:–

மலை வளங்கள் சூழ்ந்த குளிர்ச்சி பொருந்திய இனிய மாவட்டம், இந்த கோவை மாவட்டம்!

கல்வி வளமும், தொழில் வளமும் கொண்ட தென்னிந்தியாவின் மான்செஸ்டரான இந்தக் கோவை, கொஞ்சும் கொங்குத் தமிழைக் கொண்டது! தமிழ் செம்மொழி மாநாட்டைக் கண்டது!

பலமுறை கோவைக்கு நான் வருகை வந்து பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைத்திருந்தாலும், இன்றைக்கு, "மக்களுடன் முதல்வர்" என்ற ஒரு மகத்தான திட்டத்தை தொடங்கி வைத்திருக்கிறேன்.



### தென் மாவட்டங்களை காப்போம்!

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் கடந்த 4ஆம் தேதி புயலோடு கூடிய பெருமழை பெய்தது. 47 ஆண்டு காலம் இல்லாத அளவிற்கு மழை பெய்தது. அதை முன்னெச்சரிக்கை நடவடிக்கையுடனும், மழைக்குப் பிறகு போர்க்கால அடிப்படையிலும் செயல்பட்டு அரசு எதிர்கொண்டது. கடுமையான மழை ஒருநாள் முழுவதும் பெய்தது. மழை நின்றவுடன், நிவாரணப் பணிகளை நாங்கள் தொடங்கிவிட்டோம்.

மறுநாள் காலையில், முக்கியச் சாலைகளில் போக்குவரத்து சீர்செய்யப்பட்டது. பெரும்பாலான பகுதிக்கு மின்னிணைப்பானது மூன்று நாட்களுக்குள் கிடைத்தது. புறநகர் பகுதிகளில் ஒரு சில பகுதிகள் நீங்கலாக, நான்கைந்து நாட்களில் மற்ற அனைத்துப் பகுதிகளிலும் இயல்பு வாழ்க்கை திரும்பியது. அந்த மாவட்டத்தின் மக்களுக்கு 6000 ரூபாய் இழப்பீடு அறிவித்து நேற்று நானே தொடங்கி வைத்தேன்.

இதற்கிடையில், இரண்டு நாட்களாக, தென் மாவட்டங்களில் கடுமையான மழை பெய்து வருகின்றது. அரசு இயந்திரம் முழுமையாக தென் மாவட்டங்களில் குவிக்கப்பட்டிருக்கிறது. நேற்றைக்கும், இன்று காலையில் இங்கே வருகிற வரைக்கும், அதிகாரிகள், அமைச்சர்களுடன் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தேன். சென்னையில் செயல்பட்டதைப்போல, அந்த அனுபவங்களைக் கொண்டு, இன்னும் சிறப்பாக செயல்பட்டு, தென் மாவட்ட மக்களை காப்போம் இது உறுதி.

### திராவிட மாடல் அரசின் முன்னோடித் திட்டங்கள்

- முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்
- கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்
- மகளிர் விடியல் பயணம்
- இல்லம் தேடிக் கல்வி
- மக்களைத்தேடி மருத்துவம்
- நான் முதல்வன்
- இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48.
- புதுமைப் பெண் திட்டம் என்று

### மக்களின் காவலனாக திராவிட மாடல் அரசு!

பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் மூலமாக, சமுதாயத்தில் ஏழைஎளிய விளிம்பு நிலை மக்கள், மாற்றுத்திறனாளிகள், பெண்கள் என்று நலிவுற்ற எல்லா தரப்பு மக்களுடைய காவலனாக நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது.

இந்த திட்டங்களின் பயன்கள் எல்லாம், கடைக்கோடி மனிதருக்கும் போய் சேர்ந்திருக்காதா? என்ற எண்ணத்துடன் ஆய்வு செய்ய, 'கள ஆய்வில் முதலமைச்சர்' திட்டத்தை தொடங்கி வைத்தேன். நானே, சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று, கள நிலவரங்களை

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்



# இன்று பேராசிரியர் பிறந்தநாள்!

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 19-12-2023

## மக்களோடு மக்களாக

அரசின் சேவைகளை மக்களுக்கு விரைவாகக் கொண்டு சேர்த்திட ‘மக்களுடன் முதல்வர்’ என்ற புதிய – புதுமையான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோவையில் தொடங்கி வைத்துள்ளார். முதல் கட்டமாக நகர்ப்புற உள்ளாட்சிகளில் ஆயிரத்து 745 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. அந்த முகாமை நோக்கி கோரிக்கை மனுக்களோடு வருகிறவர் அனைவர்க்கும் அவர்களது கோரிக்கை நிறைவேற்றித் தரப்பட இருக்கிறது. மக்களுக்கும் அரசுக்குமான – மக்களுக்கும் அரசு நிர்வாகத்துக்குமான – மக்களுக்கும் முதலமைச்சருக்குமான நெருக்கத்தை இந்த முகாம்கள் அதிகம் ஏற்படுத்தப் போகிறது.

**மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கடி பயன்படுத்தும் பொன்மொழி என்பது பேரறிஞர் அண்ணாவின் மொழியாகும். ‘மக்களோடு செல் – மக்களோடு வாழ் – மக்களிடம் கற்றுக் கொள்’ என்பதை உள்ளடக்கமாகக் கொண்டது அந்தப் பொன்மொழி. ஆட்சியில் இல்லாத போது மட்டுமல்ல, ஆட்சிக்கு வந்தபிறகும் தனது நடைமுறைப் பாதையாக இதனையே முதலமைச்சர் அவர்கள் வரித்துக் கொண்டார்கள்.**

**திராவிட மாடல் ஆட்சி அமைந்தபிறகு ஏராளமான திட்டங்களை முதலமைச்சர் அவர்கள் தீட்டி வருகிறார்கள். திட்டம் தீட்டியதோடு தனது கடமை முடிந்ததாக முதலமைச்சர் நினைக்கவில்லை. அந்தத் திட்டம் முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதை தொடர்ச்சியாக கண்காணித்து வருகிறார்கள். ‘டேஸ் போர்டு’ இதற்காகவே தலைமைச் செயலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்ட ஒவ்வொரு திட்டமும் எந்தளவுக்கு நகர்ந்து வருகிறது என்பதை இந்த பலகை காட்டும்.**

**எப்படி நடந்து வருகிறது என்பதை அறிவதற்காக ‘கள ஆய்வில் முதலமைச்சர்’ என்ற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீட்டினார்கள். நேரடியாக மாவட்டங்களுக்குச் செல்லத் தொடங்கினார்கள். இரண்டாம் – மூன்றாம் நிலை அதிகாரிகள் – அலுவலர்கள் வரை அனைவரையும் அழைத்துப் பேசினார்கள். யார் யார் எந்தத் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்களோ அந்த மாவட்ட அதிகாரிகளை நேரடியாக பாராட்டினார்கள். அப்படி மாவட்டங்களுக்குச் செல்லும் போது, பணிகள் நடைபெற்று வரும் இடங்களையும் நேரடியாகப் போய்ப் பார்த்தார் முதலமைச்சர் அவர்கள்.**

குடிநீர் மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள், வருவாய்த் துறை வழங்கக்கூடிய சேவைகள், ஊரக மேம்பாடு, நகர்ப்புற வளர்ச்சி, சாலை மேம்பாடு, வாழ்வாதாரத்தை உயர்த்துதல், இளைஞர் திறன் மேம்பாடு, பொதுக் கட்டமைப்பு வசதிகள், கல்வி, மருத்துவம், குழந்தைகள் ஊட்டச்சத்து போன்ற முக்கிய துறைசார்ந்த திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் அவற்றின் பயன்கள் பொதுமக்களுக்கு முழுமையாகச் சென்றடைவது குறித்தும் ஆய்வு செய்தார் முதலமைச்சர். துறை ரீதியான ஆய்வாக மட்டுமல்லாமல் அதனை சிறப்பாகச் செயல்படுத்தி வருபவர்களை பாராட்டும் களமாகவும் இது அமைந்திருந்ததால் அதிகாரிகள் – அலுவலர்கள் உற்சாகமாக இதில் பங்கெடுத்தார்கள். ‘கள ஆய்வில் முதலமைச்சர்’ என்ற திட்டம், மக்களுக்கான திட்டங்களை அளவிடுவதாக அமைந்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாகத்தான் ‘மக்களுடன் முதல்வர்’ என்ற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார். பொது மக்கள், அரசு அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டிய அவசியமின்றி பெரும்பாலான அடிப்படைச் சேவைகள் இணையதளம் வழியாக வழங்கப்பட்டு வருகின்றன. அந்த இணையத் தளச் சேவையை முறையாகப் பயன்படுத்த முடியாதவர்களுக்காகவே இந்த திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி இருக்கிறார்கள். மின் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சி, நகராட்சி, ஆதிதிரவிடர்நலம், பிற்படுத்தப்பட்டோர் மிகவும்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், காவல், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு, கூட்டுறவு சிறு, குறு நடுத்தரத் தொழில்கள், மாற்றுத்திறனாளிகள் நலம், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமை – ஆகிய துறைகளை நோக்கி வரும் மக்களின் கோரிக்கைகளுக்காக இந்த முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**“அரசின் சேவைகளை மக்களுக்கு நெருக்கமாகக் கொண்டு சென்று அனைத்துப் பொதுமக்களுக்கும் அனைத்து சேவைகளும் எளிதில் கிடைக்கச் செய்வதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதற்காக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அனைவரும் ஒரே குடையின்கீழ் கூடி மக்களின் கோரிக்கைகளைப் பெற்றுப் பதிவு செய்வார்கள். முகாம்களில் பெறப்படும் மனுக்கள் அனைத்தும், சம்பந்தப்பட்ட துறைகளால் 30 தினங்களுக்குள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும். இதை நான் நேரடியாகக் கண்காணிக்க உள்ளேன். இத்திட்டம் என்னுடைய நேரடி கண்காணிப்பில் இருக்கும்” என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.**

**“மக்கள் அளிக்கும் ஒவ்வொரு மனுவுக்கும் முடிவு காண்பதே முக்கியம் என்று நினைக்காமல், விடிவு காண்பதே நோக்கம் என்று செயல்பட்டால்தான் அரசின் மீது ஏழைகள் கொண்டுள்ள நம்பிக்கைகள் வலுவடையும். கண்களில் கண்ணீரோடும், வாடிய முகத்தோடும், இதயத்தில் நம்பிக்கையோடும் தலைமைச் செயலகத்தில் வரிசையாகவும், பொறுமையாகவும் நின்று மனுக்கள் அளிக்கும் அகவை முதிர்ந்தோர் இன்றளவும் வருவதைக் காண முடிகிறது. பொதுமக்கள் கோட்டையை நோக்கி அணிவகுப்பதை மாவட்ட ஆட்சியர்களும், மற்ற அலுவலர்களும் குறைத்திட வேண்டும்; வட்ட அளவில் முடிய வேண்டியதை வட்ட அளவிலும்– மாவட்டத்தில் முடிய வேண்டியதை மாவட்டத்திலும் – முடித்து வைக்க போதிய முயற்சிகள் உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டும்” என்றும் முதலமைச்சர் அவர்கள் கட்டளை பிறப்பித்துள்ளார்கள்.**

**மக்களோடு மக்களாக ஆகிவிட்டது அரசு. மக்களோடு மக்களாக ஆகிவிட்டார் முதலமைச்சர்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2023) கோயம்புத்தூரில் நடைபெற்ற விழாவில், 7945 பயனாளிகளுக்கு 110 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி.ஆர்.நடராஜன், அந்தியூர் செல்வராஜ், கு.சண்முகசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வானதி சீனிவாசன், கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி கல்பனா ஆனந்தகுமார், முதல்வரின் முகவரி திட்ட சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், மக்களுடன் முதல்வர் சிறப்புப் பணி அலுவலர் ப.மதுசூதன் ரெட்டி, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரசின் சேவைகள் பொதுமக்களுக்கு விரைந்து சென்றடைய

# ‘மக்களுடன் முதல்வர்’ திட்டம்!

## கோவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, டிச. 19-**

**அரசின் சேவைகள் பொது மக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்று சேர்ந்திட “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2023) கோயம்புத்தூர் மாவட்டம், ஆவாரம்பாளையத்தில், அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்றுசேரும் வகையிலும், நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு மைல்கல்லாக “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று, மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டு, பதிவு செய்ய வந்த மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார்.

அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருவதுடன், பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணவும், அரசின் நலத்திட்டங்கள் மக்களை சென்றடைவதை உறுதி செய்திடவும், “உங்கள் தொகுதியில் முதலமைச்சர்”, “கள ஆய்வில் முதலமைச்சர்” போன்ற திட்டங்களையும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், பெண்களுக்கான விடியல் பயணத் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், இல்லம் தேடி கல்வி, நான் முதல்வன், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 போன்ற முன்னோடி திட்டங்களையும் இவ்வரசு அறிவித்து சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் மக்களை சென்றடையும் வகையிலும், நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டம் நேற்றையதினம் கோயம்புத்தூரில் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

**அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள்!**

“மக்களுடன் முதல்வர்“” என்ற இப்புதிய திட்டத்தின் கீழ், பொதுமக்கள் அதிகமாக அணுகும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கூட்டுறவுத்துறை, மகளிர் மேம்பாட்டுக் கழகம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, எரிசக்தி துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை ஆகிய 13 அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்று தீர்வு காண்பதற்கு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில், அனைத்து நகர்ப்புற, மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு மற்றும் கிராம ஊராட்சி அளவில், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

அனைத்துத் தரப்பு மக்களுக்கும் மேற்கண்ட 13 அரசுத் துறைகளின் சேவைகள் எளிதில் கிடைத்திடவும், தாமதங்களை தவிர்த்திட வேண்டும் என்பதும் தான் இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

**1745 முகாம்கள்!**

“மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக 18.12.2023 ஆம் தேதி முதல் 6.1.2024 வரை அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் 1745 முகாம்கள் நடத்தப்படும்.

சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் முடிவுற்றவுடன், 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வாரத்திலிருந்து 31.01.2024 வரை சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

முதற்கட்டமாக, நகர்ப்புறங்களில் நடத்தப்படும் முகாம்கள் முடிவுற்ற பின்னர், அடுத்த கட்டமாக, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஊரகப் பகுதிகளில் இந்த முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு முகாம்களில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் அனைவரும் ஒரே குடையின்கீழ் மக்களின் கோரிக்கைகளைப் பெற்று பதிவு செய்வார்கள். முகாம்களில் பெறப்படும் மனுக்கள் அனைத்தும், சம்பந்தப்பட்ட துறைகளால் 30 தினங்களுக்குள் உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, முதல்வரின் முகவரி திட்ட சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், மக்களுடன் முதல்வர் சிறப்புப் பணி அலுவலர் ப.மதுசூதன் ரெட்டி, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கனமழையினால் பாதிக்கப்பட்ட

# தென் மாவட்டங்களுக்கு 190 நடமாடும் மருத்துவ வாகனங்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

*சென்னை, டிச. 19- கனமழையில் பாதிக்கப்பட்ட திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய 4 மாவட்டங்களுக்கு 190 நடமாடும் மருத்துவ வாகனங்கள் அனுப்பப்பட்டுள்ளது என மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.*

*முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி, 190 நடமாடும் மருத்துவ வாகனங்கள் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய 4 மாவட்டங்களுக்கு 17/12/2023 மற்றும் 18/12/2023 ஆகிய இருதினங்களில் பெய்த கனமழையில் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு சிகிச்சை வழங்க அனுப்பப்பட்டுள்ளது.*

*இந்த நடமாடும் மருத்துவ வாகனங்களில் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர் அல்லது மருந்தாளுநர், ஒரு சுகாதார ஆய்வாளர் மற்றும் ஒரு வாகன ஓட்டுநர் கொண்ட குழு உள்ளது. வெள்ளத்திற்கு பிறகு வரும் தொற்று நோய் தடுப்புபணிகளில் இக்குழுக்கள் ஈடுபடும். ஒரு நடமாடும் மருத்துவ வாகனம் நாள் ஒன்றுக்கு 4 முதல் 5 இடங்களில் முகாம் அமைத்து வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு தேவையான சிகிச்சை மற்றும் தொற்று நோய் தடுப்பு பணிகளில் ஈடுபடும்.*

*மேலும் வருகிற 10 நாட்களுக்கு நடமாடும் மருத்துவக்குழு வாகனம் பொது மக்களின் தேவைக்கேற்ப முகாமிட்டு செயல்படும் என்று மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் தெரிவித்தார்.*

### அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கோரிக்கை ஏற்பு!

# ரூ.41 கோடி மதிப்பீட்டில் புதுக்கோட்டையில் நெடுஞ்சாலை விரிவாக்கம்!

## தமிழ்நாடு அரசு உத்தரவு!

*புதுக்கோட்டை, டிச.19*

*புதுக்கோட்டை மாவட்டம் திருச்சி - புதுக்கோட்டை - அறந்தாங்கி - மீமிசல் மாநில நெடுஞ்சாலையை இரு வழிச்சாலையாக விரிவுபடுத்தவும், கீரனூர் நெடுஞ்சாலையை விரிவாக்கம் செய்யவும் தமிழ்நாடு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் கோரிக்கை விடுத்திருந்தார்.*

*அமைச்சரின் கோரிக்கையை ஏற்று மேற்கண்ட நான்கு வழிச்சாலையாக மாற்றும் திட்டம் மற்றும் சாலை விரிவுபடுத்தும் திட்டத்தை மேற்கொள்ள தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது இதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலுவுக்கும், அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் நன்றி தெரிவித்துள்ளார்.*

*தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலைத்துறை அரசாணைப்படி திருச்சி புதுக்கோட்டை அறந்தாங்கி மீமிசல் இருவழிச் சாலையினை நான்கு வழிச்சாலையாக ரூ.37 கோடியே 82 லட்சம் மதிப்பில் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது.*

*இதேபோன்று கீரனூர் சாலை ரூ. 2 கோடியே 93 லட்சம் மதிப்பீட்டில் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது. நீண்ட கால கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் சாலை விரிவாக்கம் மேற்கொள்ளும் பணியை நிறைவேற்ற முயற்சி மேற்கொண்ட அமைச்சர் சிவ. வீ.மெய்யநாதனுக்கு பொது மக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.*

## தலைமைக் கழக அறிவிப்பு

**தென் மாவட்டங்களில் பெய்து வரும் அதி கனமழை காரணமாக, வரும் 24-12-2023 அன்று சேலத்தில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த தி.மு.க. இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு ஒத்திவைக்கப்படுகிறது. தேதி பின்னர் அறிவிக்கப்படும்.**

“அண்ணா அறிவாலயம்”
சென்னை-18.
நாள் : 18-12-2023

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2023) கோயம்புத்தூர் மாவட்டம், ஆவாரம்பாளையத்தில், அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்றுசேரும் வகையில் "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று, மனுக்களைப் பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டார். உடன் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, முதல்வரின் முகவரி திட்ட சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், மக்களுடன் முதல்வர் சிறப்புப் பணி அலுவலர் ப. மதுசூதன் ரெட்டி, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2023) கோயம்புத்தூரில் நடைபெற்ற விழாவில், 7945 பயனாளிகளுக்கு 110 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி.ஆர். நடராஜன், அந்தியூர் செல்வராஜ், கு. சண்முகசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வானதி சீனிவாசன், கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி கல்பனா ஆனந்தகுமார், முதல்வரின் முகவரி திட்ட சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், மக்களுடன் முதல்வர் சிறப்புப் பணி அலுவலர் ப. மதுசூதன் ரெட்டி, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் மா. சிவகுரு பிரபாகரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கடும் மழையிலிருந்து தென் மாவட்ட மக்களை காப்போம் இது உறுதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

ஆய்வு செய்தேன். மண்டல வாரியாக, ஆய்வுக் கூட்டங்களை நடத்தி அறிவுரைகள் வழங்கிக் கொண்டு வருகிறேன். அந்த ஆய்வுகள் மூலமாக பொதுமக்கள் பயனடைவதை பார்க்க முடிகிறது. பொதுமக்கள், அரசு அலுவலகங்களுக்கு செல்ல வேண்டிய அவசியமின்றி, பெரும்பாலான அடிப்படைச் சேவைகள், இணையதளம் வழியாக வழங்கப்பட்டு வருகிறது.

மக்கள் அடிக்கடி அணுகுகின்ற துறைகளான,

- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
- ஊரக வளர்ச்சித்துறை
- நகராட்சி நிர்வாகத்துறை
- ஆதி திராவிடர் நலத்துறை
- பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை
- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை
- தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை
- கூட்டுறவு துறை
- சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் துறை
- மாற்றுத்திறனாளிகள் நலத்துறை
- சமூகநலன் மற்றும் மகளிர் உரிமை துறை
- எரிசக்தித் துறை

ஆகிய இந்த 13 அரசுத் துறைகள் மூலம், மக்களுக்குப் பல்வேறு சேவைகள் வழங்கப்படுகிறது.

இந்தச் சேவைகளைப் பெறுவதில் அடித்தட்டு மக்கள் சில சிரமங்களை எதிர்கொள்வார்கள் என்று அரசுக்குத் தெரிய வந்தது. இந்தச் சேவைகளை இணையத் தளங்களில் பதிவேற்றம் செய்வதில், தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் மக்களுக்குச் சில சிரமங்கள் இருந்தது. இந்த சிரமங்களை போக்கி; மக்களுக்கு உதவுகிற வகையில் உருவாக்கி இருக்கக்கூடிய ஒரு புதிய திட்டமாகத்தான், இந்த "மக்களுடன் முதல்வர்" திட்டம், முதல்வரின் முகவரித் துறையால் இன்றைக்கு தொடங்கி வைக்கப்படுகிறது.

### திட்டத்தின் முக்கிய நோக்கம்!

அரசினுடைய சேவைகளை மக்களுக்கு நெருக்கமாக கொண்டு சென்று, அனைத்து பொது மக்களுக்கும், அனைத்து சேவைகளும் எளிதாக கிடைக்கச் செய்வதுதான் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம்! அதாவது,

- செயல்முறையை விரைவுபடுத்துவது!
- தாமதங்களை குறைப்பது!
- சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களைக் குறைப்பது! என்று

விரைவாகவும், எளிதாகவும் சேவைகளை வழங்குகின்ற நோக்கத்தில்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

மாற்றுத் திறனாளிகள், முதியோர் போன்றவர்களின் சிரமங்களை முன்கூட்டியே கண்டறிந்து, அதையெல்லாம் தீர்த்து வைப்பதில் இந்தத் திட்டம் தனிக்கவனம் செலுத்தும். அனைத்து நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு மற்றும் கிராம ஊராட்சி அளவில் அனைத்து மாவட்டங்களையும் சிறப்பு முகாம்களை நடத்த திட்டமிட்டிருக்கின்றோம். இந்த முகாம்களில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் எல்லோரும் ஒரே குடையின்கீழ் கூடி, மக்களுடைய கோரிக்கைகளை பெற்று பதிவு செய்வார்கள்.

### 2 கட்டங்களாக முகாம்கள்!

முகாம்களில் பெறப்படுகின்ற மனுக்கள் எல்லாம், சம்பந்தப்பட்ட துறைகளால் 30 நாட்களுக்குள்ளாக உரிய முறையில் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும். இந்தத் திட்டம் என்னுடைய நேரடி கண்காணிப்பில் இருக்கும். இந்த முகாம்கள் இரண்டு கட்டங்களாக நடைபெறும்.

முதல் கட்டமாக, புயல் பாதித்த சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களை தவிர, பிற மாவட்டங்களில் இருக்கின்ற அனைத்து நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகர்ப்புறங்களை ஒட்டியிருக்கின்ற கிராம ஊராட்சிகளிலும் ஏறத்தாழ 1745 முகாம்கள் நடத்தப்படும்.

இப்போது கோவையில், நான் இந்த் திட்டத்தை தொடங்கி வைத்திருக்கின்ற இதே சமயத்தில், அமைச்சர் பெருமக்கள் அவர்களுடைய மாவட்டங்களிலும், பொறுப்பு அமைச்சர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களிலும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த முகாம்களை தொடங்கி வைக்கிறார்கள்.

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண உதவித் தொகை வழங்குவது முடிந்ததும், ஜனவரி மாதம் முதல் வாரத்தில் இருந்து ஜனவரி 31ஆம் தேதி வரைக்கும் இந்தச் சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

இரண்டாம் கட்டமாக, அனைத்து மாவட்டங்களிலும் இருக்கின்ற ஊரகப் பகுதிகளில் இந்த முகாம்கள் நடத்தப்பட இருக்கின்றது. இந்த முகாம்களில் பெறப்படுகின்ற அனைத்து கோரிக்கைகளும் அரசால் பரிசீலிக்கப்பட்டு, முறையான கோரிக்கையாக இருந்தால் நிறைவேற்றித் தரப்படும் என்று இங்கே நான் உறுதி அளிக்கின்றேன். பொதுமக்கள் கொடுக்கின்ற கோரிக்கைகள் அனைத்தும் 'மக்களுடன் முதல்வர்' இணையத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். தொடர்புடைய துறை அலுவலர்கள் சேவை வழங்குவதற்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் முகாம்களிலேயே பெற்று பரிசீலிப்பார்கள்.

### ஒவ்வொரு மனுவுக்கும் முடிவு காண்பதே முக்கியம்!

அனைத்து முகாம்களிலும், "தமிழ்நாடு மின் ஆளுமை முகமை" மூலம் இ-சேவை மையங்கள் அமைக்கப்படுகிறது. பொதுமக்கள் இந்த முகாம்களை நல்ல முறையில் பயன்படுத்தி, உரிய சேவைகளை பெற்றுப் பயனடைய வேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தொடர்புடைய அரசு துறை அலுவலர்களுக்கு உங்கள் முதலமைச்சர் அன்போடு கூறிக் கொள்வது, மக்கள் அளிக்கின்ற ஒவ்வொரு மனுவுக்கும் முடிவு காண்பது என்பதே முக்கியம் என்று நினைக்காமல், விடிவு காண்பதே நோக்கம், அதுதான் உண்மை என்று செயல்பட்டாக வேண்டும். அரசு மேல் ஏழைகள் கொண்டிருக்கின்ற நம்பிக்கைகள் வலுவடையும்!

கண்களில் கண்ணீரோடும், வாடிய முகத்தோடும், ஆனால், இதயத்தில் நம்பிக்கையோடும், தலைமைச் செயலகத்தில் வரிசையாக, பொறுமையாக நின்று மனு கொடுக்கின்ற மக்களை இப்போதும் அவர்களை பார்க்க முடிகிறது. பொதுமக்கள் கோட்டையை நோக்கி இப்படி வருவதை மாவட்ட ஆட்சியர்களும், மற்றும் மாவட்ட அலுவலர்களும் குறைக்கவேண்டும்; வட்ட அளவில் முடிய வேண்டியதை, வட்ட அளவிலும், மாவட்டத்தில் முடிய வேண்டியதை மாவட்ட அளவிலும், முடித்து வைக்க போதிய முயற்சிகளை உடனுக்குடன் மேற்கொள்ள வேண்டும்.

> **அரசினுடைய சேவைகளை மக்களுக்கு நெருக்கமாக கொண்டு சென்று, அனைத்து பொதுமக்களுக்கும், அனைத்து சேவைகளும் எளிதாக கிடைக்கச் செய்வதுதான் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம்! அதாவது,**
>
> **• செயல்முறையை விரைவுபடுத்துவது!**
>
> **• தாமதங்களை குறைப்பது!**
>
> **• சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களைக் குறைப்பது! என்று**
>
> **விரைவாகவும், எளிதாகவும் சேவைகளை வழங்குகின்ற நோக்கத்தில்தான் இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.**

நம்மை நாடி வருகின்ற பொதுமக்களுக்கு, அரசின் சட்ட வரையறைக்கு உட்பட்டு, அவர்கள் குறைகளை களைய முழு ஈடுபாட்டோடும், அர்ப்பணிப்பு உணர்வோடும் பணியாற்றவேண்டும் என்று அனைத்து துறை அரசு அலுவலர்களையும் அன்போடும், உரிமையோடும் கேட்டுக் கொள்கிறேன். மக்கள் வழங்குகின்ற விண்ணப்பங்களுக்குப் பதில் கொடுக்கவேண்டும் என்ற கட்டாயத்தில், தற்காலிகமாக, பயனில்லாத பதில்களை கொடுப்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

### நமக்குள்ள பொறுப்பும் கடமையும்!

'காரணம் சொல்பவர், காரியம் செய்ய மாட்டார்' என்பது தமிழ்ப் பழமொழிகளில் ஒன்று! ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி கோரிக்கை மனுக்களை தட்டிக் கழித்துவிடக் கூடாது. மக்களுக்கு நம்பிக்கை என்பது அரசாங்கம்தான். அந்த நம்பிக்கைய காப்பாற்ற வேண்டிய பொறுப்பும், கடமையும் மக்கள் சேவகர்களான நமக்குத் தான் இருக்கிறது.

"மக்களுடன் முதல்வர்" திட்டம் ஒரு சிறப்புத் திட்டம். பெறப்படும் விண்ணப்பங்களை சரியாக பரிசீலனை செய்து, பயனுள்ள வகையில், இறுதியான பதில்களை வழங்கவேண்டும் என்று அனைத்துத் துறை அலுவலர்களையும், மீண்டும் மீண்டும் நான் கேட்டுக் கொண்டு, "மக்களுடன் முதல்வர்" திட்டம் முழுமையான வெற்றி பெற வேண்டும்!

"மக்களுடன் முதல்வர்" திட்ட தொடக்க விழாவிற்காக கோவை வந்திருக்கின்ற எனக்கு கோவைக்கான சிறப்புத் திட்டங்களையும் தொடங்கி வைக்கும் வாய்ப்பும் கிடைத்திருக்கிறது. இந்த விழாவில், "செம்மொழிப் பூங்கா" அமைக்க கால்கோள் (அடிக்கல்) நாட்டப்பட்டிருக்கிறது.

### முத்தமிழறிஞர் கலைஞரின் அறிவிப்பு!

2010ஆம் ஆண்டு ஜூன் 23 முதல் 27 ஆம் நாள் வரை கோவை மாநகரில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு அரசின் சார்பில், "உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு" மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. அந்த மாநாட்டில் 27.6.2010 அன்று நிறைவுரை ஆற்றிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 15 அறிவிப்புகளை வெளியிட்டார். அதில் ஒன்றுதான், கோவை காந்திபுரம் அருகில் செம்மொழிப்பூங்கா அமைக்கப்படும் என்பது!

தாவரவியல் தோட்டத்தை பின்புலமாக வைத்து இந்தப் பூங்கா அமைக்கப்பட இருக்கிறது. பொதுமக்கள் இயற்கையை தெரிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும், அனுபவிக்கவும் ஏற்ற வகையில், தாவர இனங்கள் நிலைக்கத்தக்க வகையில், நீலகிரி உயிர்கோளப் படுகையில் இருக்கின்ற அரிய வகை தாவர இனங்களைப் பாதுகாத்தல் மற்றும் சுற்றுச்சூழல் ஆளுமையை மேம்படுத்தும் நோக்கில், செம்மொழிப் பூங்கா கோவையில் அமைக்கப்படுகிறது.

இத்துடன் முதல்கட்டமாக, 45 ஏக்கர் நிலப்பரப்பிலும், இரண்டாவது கட்டமாக, 120 ஏக்கர் நிலப்பரப்பிலும், இந்தச் செம்மொழிப் பூங்கா அமைய இருக்கிறது. இந்தப் பூங்கா 133 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் உலகத்தரத்துடன் இந்தியாவிலேயே தனித்துவத்துடன் பல சிறப்புகளை உள்ளடக்கியிருக்கும்.

இந்தப் பூங்காவில்

- 'செம்மொழி வனம்',
- 'மகரந்த வனம்',
- 'மூலிகை வனம்',
- 'நட்சத்திர வனம்',
- 'நறுமண வனம்' போன்ற

23 வகையான தோட்டங்கள் அமைக்கப்படும். இப்படியொரு சிறப்புவாய்ந்த திட்டத்திற்கு இன்றைக்கு அடிக்கல் நாட்டியதற்காக நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழா ஏற்பாடுகளை எல்லாம் மிகச் சிறப்பாக செய்திருக்கின்ற நம்முடைய பொறுப்பு அமைச்சர் முத்துசாமி அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், கோவை மாநகராட்சி ஆணையர் அவர்கள் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் என் மனமார்ந்த பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- சென்னையில் கலைஞர் பல்நோக்கு மருத்து வமனை
- மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகம்
- கலைஞர் நூற்றாண்டு ஜல்லிகட்டு அரங்கம்
- சிவகங்கையில் கீழடி அருங்காட்சியகம்
- சேலத்தில் டைடல் பார்க்கும், ஜவுளிப் பூங்காவும்
- திருச்சியில் விளையாட்டு நகரம்
- தஞ்சை, வேலூர், சேலம், தூத்துக்குடியில் மினி டைடல் பார்க்குகள்
- திருநெல்வேலியில் பொருநை அருங்காட்சியகம்
- தூத்துக்குடியில் பன்னாட்டு அறைக் கலன் பூங்கா

இந்த வரிசையில், கோவைக்கு செம்மொழிப் பூங்கா


இப்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பார்த்துப் பார்த்து திட்டங்களை உருவாக்கிக் கொடுத்து வருகிறோம். பேரறிஞர் அண்ணா வழியில், முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், முதலமைச்சர் பொறுப்பை எனக்கு வழங்கியிருக்கின்ற தமிழ்நாட்டு மக்களுக்காக உழைப்பதையே குறிக்கோளாக கொண்டு நான் உழைத்துக் கொண்டு வருகிறேன்.

"மக்களுடன் முதல்வர்" போன்ற திட்டங்கள் மூலமாக அரசுக்கும், மக்களுக்குமான நெருக்கம் அதிகமாகின்றது. அரசு வேறு, மக்கள் வேறு அல்ல என்பதை உணர்த்தும் திட்டம்தான் இது. இது போன்ற திட்டங்கள் மூலமாக மக்களும், மாநிலமும் சேர்ந்து வளரும்!

### உலகமே வியக்கும் மாநிலமாக தமிழ்நாடு!


தமிழ்நாட்டை, இந்தியாவில் சிறந்த மாநிலமாக மட்டும் இல்லை, உலகமே வியந்து பார்க்கின்ற மாநிலமாக உருவாக்குகின்ற இலக்கை எனக்கு நானே உருவாக்கிக் கொண்டு உழைத்து வருகிறேன். இந்தக் காட்சியை நாம் விரைவில் காண்போம் என்பது உறுதி! உறுதி! உறுதி! என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பம்மல் பகுதியில் மிக்ஜாம் புயல், கனமழையால் பாதிக்கப்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட 6000 ரூபாய் நிவாரண நிதியை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், மாநகராட்சி ஆணையர் அழகு மீனா, தலைமை தீர்மான குழு உறுப்பினர் மீ.ஆ.வைத்தியலிங்கம், மண்டல குழு தலைவர் வே.கருணாநிதி, மாமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் உடனிருந்தனர்.

## தலைநிமிர்ந்து வாழ வழி செய்தவர் தந்தை பெரியார்!



தமிழ் மக்களின் தாழ்ந்த நிலைக்கான காரணங்களைத் தமது அறிவைக் கொண்டு இடைவிடாது சிந்தித்துச்சிந்தித்துக் கண்ட உண்மைகளை, அயராது எடுத்துச் சொல்லி, விளக்கி எழுதி, நம்முடைய இனத்தை, சமுதாய மக்களை எண்ணிப் பார்த்திடத் தூண்டி, சிந்திக்கும் ஆற்றல் பெற வைத்து, மனிதனை மனிதனாகத் தலை நிமிர்ந்து வாழ வழி செய்தவர் தந்தை பெரியார்.

பெரியாரின் சிந்தனையும் தொண்டும் வாய்த்திராவிடில், தமிழ்மக்கள் இன்றுள்ள நிலையினும் இழிந்த - தாழ்ந்த நிலையிலேதான் தள்ளப்பட்டிருப்பர்.

**- பேராசிரியர்**



## கழக இளைஞரணி மாநில மாநாடு (24)

# சிங்கத் தமிழன் செண்பக இராமன்!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

“வீரன் செண்பகராமன் - இந்த மாமனிதன் தமிழ்க் குலமகன். சுதந்திரம் விரும்பி. வெளி நாட்டில் இருந்து கொண்டு, வெள்ளை ஏகாதிபத்தி யத்தை கதிகலங்க வைத்த கரும வீரன்.

சுதந்திர வீரர்கள், தலைவர்கள் வரலாறுகள் மட்டுமல்ல, சுதந்திரம் எப்படிப் பெற்றோம் என்கின்ற விவரம் கூட இன்றைய இளைஞர்கட்கு தெரிந்திட வாய்ப்பில்லாமல் உள்ளது. வீரன் செண்பகராமன் வரலாறு, 1945க்குப் பின்னர் மேக மூட்டத்தினின்றும் வெளிப்படுகின்ற இள ஞாயிறொப்ப, சிறிய சிறிய அளவில் வெளிவரத் தொடங்கிற்று. அவருடைய மனைவி லெட்சுமி பாய், ஆதரவற்ற நிலையில் பம்பாய் நகரில், தினம் ஒரு இடமாக அலைந்து கொண்டி ருப்ப தையும் அறிந்திட முடிந்தது. 1952ல் பம்பாய் தாராவியில் உள்ள தமிழரசு கழகத் தோழர்களை ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திடும்படி கூறினேன். அதற்குச் செல்லுங்கால், வானம்பாடி என்கின்ற துரை சுந்தரேசனையும், உடன் அழைத்துச் சென்றேன். அப்பொழுது அவர், தமிழரசுக் கழகத்தின் இளம் பேச்சாளர். கூட்டம் நடைபெற்றது. பம்பாய் மாநிலக் காங்கிரஸ் கமிட்டியில் டெலிபோன் ஆப்பரேட்டராக வேலை செய்த நாகலட்சுமி என்கின்ற பெண் சொற்பொழிவு கேட்டிட வந்திருந்தாள். கூட்டம் முடிந்ததும் தான் யார் எனக் கூறி அறிமுகம் செய்து கொண்டாள். பொதுத் தொண்டில் சிறந்த ஈடுபாடுடைய அப்பெண்ணைக் கொண்டு, லெட்சுமிபாய் செண்பகராமன் இருப்பிடத்தை அறிந்தோம். அவர் முதலில் எங்களுடன் பேசிடவே அஞ்சினார். பின்னர் தெளிவு பெற்று வீரன் செண்பகராமனைப் பற்றிய விவரங்களைச் சுருக்கமாகக் கூறினார். சென்னை திரும்பிய பின்னர், அவர் கூறியதை ஆதாரமாக வைத்து நான் நடத்திய “தமிழ் முழக்கம்” ஏட்டில் வானம்பாடியை எழுதப் பணித்தேன். பின்னர் நானே நூலாக வெளியிட்டேன்.”

உடன்பிறப்பே, “சூரிச்” நகரில் இருந்தவாறு செண்பகராமன் ஆங்கில அரசின் நடவடிக்கைகளை எதிர்த்து வந்தபோது, ஜெர்மனியில் இருந்து செயல்பட்டு வந்த இந்தியத் தீவிரவாதிகளுடன் இவருக்கு நட்பு ஏற்பட்டது. குறிப்பாக “மேடம் காமா” என்ற தீவிரவாதப் பெண்மணி ஒருவரை செண்பகராமன், பெர்லின் நகரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டபோது பார்த்தார். ஆனால் அதற்கு முன்பே அந்தப் பெண்மணியைப் பற்றி செண்பகராமனுக்குத் தெரியும். தன்னைப் போலவே வெளிநாட்டிலே இருந்து கொண்டே, இந்திய விடுதலைக்காக செயல்பட்டு வந்த அந்த அம்மையாருடைய வீரம் செண்பகராமன் அவர்களைப் பெரிதும் ஆச்சரியப்பட வைத்தது.

இதே காலகட்டத்தில், பாரீஸ் மாநகரிலும், பெர்லின் மாநகரிலுமாக இரண்டு இந்தியப் புரட்சியாளர் குழுக்கள் மிக வேகமாக இயங்கி வந்தன. செண்பகராமன் பெர்லின் குழுவில் இணைந்து செயல்பட்டார். அந்தக் குழு தான் பிறகு “இந்தியன் இண்டிபெண்டென்ஸ் கமிட்டி” என்று அழைக்கப்பட்டது. அந்த இந்திய விடுதலைக் குழுவில் வீரேந்திர சட்டோபாத்யாயா, பூபேந்திர நாத், டாக்டர் பிரபாகர், அப்துல் ஹபீஸ் போன்ற இந்திய தீவிரவாதிகள் அங்கம் வகித்தார்கள். உலக நாடுகள் பலவற்றில் அடிமைப்பட்டுக் கிடந்த மக்களையெல்லாம் இந்தக் குழு, தொடர்பு கொண்டு அவர்களையெல்லாம் ஓரணியில் கொண்டு வந்தது. இதுவே Leaque of the oppressed people (ஒடுக்கப்பட்ட மக்கள் இயக்கம்) எனப் பின்னர் பெயர் பெற்றது. செண்பகராமன், ஓரியண்ட் கிளப் என்ற ஒரு அமைப்பையும் தோற்றுவித்து, உலகம் முழுவதும் அதன் கிளைகளை ஏற்படுத்திடச் செய்தார்.

ஜெர்மனியில் அப்போது வாழ்ந்து வந்த புரட்சிவாதி ஹர்தயாள் என்பவருடன் செண்பகராமனுக்கு பின்னர் நட்பு தோன்றியது. இவரது துணை கொண்டு, செண்பகராமன் ஜெர்மானிய மன்னர் கெய்சருக்கும் நெருங்கியவரானார். ஒரு முறை கெய்சரிடம் பேசும்போது, ஆயுத பலம் மூலமாகத்தான் வெள்ளையரை இந்தியாவிலிருந்து வெளியேற்ற முடியும் என்றும், அதற்கான நேரத்தை எதிர்பார்த்துத்தான் சுபாஷ் சந்திர போஸ் அவர்களைப் போல தானும் காத்திருப்பதாகவும் தெரிவித்தாராம்.

செண்பகராமனின் திறமையையும், அவர் பொறியியல் வல்லுநராக பட்டம் பெற்றதையும் மனதிலே கொண்டு கெய்சர், முதலில் செண்பகராமனை தன்னுடைய ஆலோசகராகவே நியமித்துக் கொண்டாராம். பின்னர், ஜெர்மனியில் தனது ராணுவத்தில் சேர்வதற்கும், கெய்சரே செண்பகராமனுக்கு உதவியிருக்கிறார். தொடக்கத்தில் ஒரு சிப்பாயாக ராணுவத்தில் சேர்ந்து, அதிலே அனைத்துப் பயிற்சிகளையும் பெற்று பின்னர் ராணுவத்தின் ஒரு அணிக்கே தலைவராகவும் அமர்த்தப்பட்டிருக்கிறார். இந்தியா விடுதலைபெற வேண்டும் என்பதற்காக, வெளிநாடு ஒன்றிலே சிப்பாயாக சேர்ந்து, அதன் ஓர் அணிக்கே தலைவராக வந்த ஒரே தமிழர் செண்பகராமன் தான்! ஜெர்மனிய கப்பல் படையிலும் செண்பகராமன் பணியாற்றினார்.

“எம்டன்” என்ற வார்த்தை அந்தக் காலத்தில் தமிழகம் முழுவதும் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்ட ஒன்றாகும். மிகவும் வயதானவர்களுக்குத் தான் அதுபற்றிய விவரம் தெரியும். தற்கால இளைஞர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய வார்த்தை அது. குறிப்பாக “எம்டன்” என்பது ஒரு நபரின் பெயரல்ல. அது ஒரு போர்க்கப்பல். எம்டன் என்ற அந்தப் போர்க் கப்பல் ஜெர்மானியருக்குச் சொந்தமானது. பிரிட்டிஷ் அரசாங்கம் அப்போது “கடல்களின் ராணி” என்று அழைக்கப்பட்ட நேரத்தில், அவர்களுடைய கடல் ஆதிக்கத்தை தகர்க்க ஜெர்மனியரால் தயாரிக்கப்பட்டதுதான் எம்டன் போர்க் கப்பல். 1914ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்களில், இந்த எம்டன் போர்க் கப்பல், இந்தியாவை நோக்கி வரத் தொடங்கியது. வரும் வழியிலேயே பல பிரிட்டிஷ் கப்பல்களை கடலில் மூழ்கச் செய்தது எம்டன். 22.9.1914 அன்று இரவு, எம்டன் போர்க்கப்பல் சென்னை கடற்கரையை நோக்கி தன் பீரங்கிகளை வெடிக்கச் செய்தது. அதற்குக் காரணமானவரும், ஜெர்மானிய கப்பல்படை அதிகாரிகளுக்கு தென்னிந்திய கடற்கரைகளைப் பற்றிய விவரங்களைத் தெரிவித்தவரும் செண்பக ராமன்தான். அப்போது கூட சென்னையிலும், மற்ற கடற்கரை பகுதிகளிலும் உள்ள தமிழ் மக்கள் பாதிக்காத வகையில், ஆங்கிலேயரின் ராணுவ இலக் குகளை மட்டுமே தாக்குவதற்கு வழிவகை செய்தவர் செண்பகராமன்.

இந்தத் தாக்குதல் காரணமாக, ஆங்கிலேயருக்குச் சொந்தமான பர்மாஷெல் என்ற எண்ணெய் கம்பெனி, தீப்பிடித்து எரியத் தொடங்கியது. அந்தத் தாக்குதல் குறித்து “இந்து” நாளிதழ் - மூன்று பேர் உயிர் இழந்ததாகவும், 13 பேர் படுகாயமுற்றதாகவும் செய்தி வெளியிட்டது. அடுத்தடுத்த பீரங்கி குண்டுகள் சென்னை உயர் நீதி மன்றத்தின் அருகில் வெடித்தது.

மற்றொரு குண்டு தலைமைச் செயலகம் அமைந்துள்ள சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை அருகிலே விழுந்த போதிலும், அது வெடிக்கவில்லை. அப்போதெல்லாம் பொழுது விடிந்தால் “எம்டன்” குண்டு, அங்கே வெடிக்கப் போகிறது, இங்கே வெடிக்கப்போகிறது என்பது தான் செய்தியாக இருந்தது. அந்தத் தாக்குதலுக்கு அஞ்சி, சென்னை வாழ் மக்கள், ஆயிரக்கணக்கில் இடம் பெயர்ந்தனர். நகர் முழுவதும் பல்வேறு வதந்திகள் பரவின. வதந்திகளைப் பரப்புவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று சென்னை மாநகர காவல் துறை அறிவிப்பு செய்தது.

இந்த நிகழ்வுகளுக்கு பிறகு ஜெர்மனிக்குத் திரும்பினார் செண்பகராமன். ஜெர்மன் ராணுவ உயர் அதிகாரிகள் எல்லாம் செண்பகராமனை ராணுவ மரியாதையோடு வரவேற்றுப் பாராட்டினர். மன்னர் கெய்சர் தனிப்பட்ட முறையில் செண்பக ராமனை புகழ்ந்ததோடு, அவருக்கு மிகப்பெரிய பரிசுப் பொருட்களையெல்லாம் வழங்கிட முன்வந்தார். ஆனால் பெருந்தன்மையோடு மறுத்த செண்பகராமன், தான் போரிலே கலந்து கொண்டு அனைவரும் பாராட்டத்தக்க வகையில் போரிட்ட தெல்லாம், தனது தாய் நாடான இந்தியத் திருநாட்டின் சுதந்திரத்திற்காகத்தான் என்றும், வெள்ளைக்காரர்களிடமிருந்து இந்தியா விடுதலை பெற்று திகழ்ந்திட வேண்டுமென் பதற்காகத்தான் ஜெர்மானிய ராணுவத்தில் இணைந்ததாகவும் கூறினார்.

1931ஆம் ஆண்டு ஜெர்மனியில், செண்பக ராமன் மேடம் காமா அம்மையாரின் வளர்ப்பு மகளான லெட்சுமிபாயை திருமணம் செய்து கொண்டார். அந்தக் காலத்தில், ஜெர்மனிக்குச் சென்ற ஜவகர்லால் நேரு அவர்கள் செண்பக ராமன் வீட்டிலேதான் தங்கினாராம். முதல் உலகப் போர் நடைபெற்ற போது இந்தியர்களை ஒடுக்கு வதற்காக வெள்ளைக்காரர்கள் பயன்படுத்திய படை பலத்தை முறியடிப்பதற்காக செண்பகராமன், இந்திய தேசியத் தொண்டர் படை என்ற ஒரு அமைப்பினை உருவாக்கினார். அதுபோலவே இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானியரிடம் யுத்தக் கைதிகளாக அகப்பட்டுக் கொண்ட இந்தியர்களைக் கொண்டே இந்திய தேசிய ராணுவம் என்ற அமைப்பை சுபாஷ் சந்திரபோஸ் அமைப்பதற்கு முன்னோடியாக இருந்தது செண்பகராமன் உருவாக்கிய இந்தியத் தேசிய தொண்டர் படைதான்.

நான் ஏற்கனவே தொடக்கத்தில் எழுதியிருந்தது போல, எதிரிகளின் துரோகத்திற்கு ஆளாகி 26.5.1934இல் செண்பகராமன் மறைந்தார். ஆனால் மறையும் தருவாயில் தன் மனைவியிடம், இந்தியா விடுதலை பெற்றதும், நம்முடைய சுதந்திரக் கொடி பறக்கும். அதே கப்பலில் எனக்காக, நீ சென்று நான் பிறந்த மண்ணில், என் தாயின் அஸ்தி கரைக்கப்பட்ட கரமனை ஆற்றில், என் அஸ்தியைக் கரைத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டாராம்.

அவரது உடல் தகனம் செய்வதற்காக எடுத்துச் செல்லப்பட்ட நேரத்தில்கூட அவரது துணை வியாருக்கு அந்த உடலைப் பார்க்க அனுமதி வழங்கப்படவில்லை. அவரது உடலை எரிப்பதற்காகத் தயாராக நின்றவரின் காலடியில் வீழ்ந்து, லெட்சுமிபாய் கண்ணீர் வடித்த காட்சி அங்குள்ளவர்கள் இதயங்களைக் கசக்கி பிழிந்ததாம். கல் நெஞ்சம் கொண்ட காவலாளியின் இதயத்தையும் தொட்ட காரணத்தினால், லெட்சுமிபாயின் கோரிக்கைக்கு அவர் கடைசியாக இணங்கினாராம். பின்னர் கணவரின் வேண்டு கோளை நிறைவேற்ற அவரது அஸ்தியைப் பாதுகாக்க எண்ணி பாடுபட்ட லட்சுமிபாயை, எதிரிகள், அவர் பைத்தியம் என்று கூறி பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டார்கள். பின்னர் ஒருசில நண்பர்களின் உதவியால், அங்கிருந்து விடுதலை பெற்றார்.

கணவர் இறந்த போது லட்சுமிபாய் இளமையோடு இருந்த காரணத்தினால், அவரை மறுமணம் செய்து கொள்ள பலர் விரும்பிய போதிலும், அதற்கு அவர் இசையவில்லை. கணவனின் அஸ்தியை சுமந்து கொண்டு, இத்தாலிக்குச் சென்று, பின்னர் ஸ்பெயின் நாட்டிற்குச் சென்று, அங்கிருந்து கப்பல் மூலமாக 1936ஆம் ஆண்டு பம்பாய் வந்து சேர்ந்தார்.

இந்தியா 1947இல் விடுதலை பெற்ற பிறகு, தன் கணவரின் இறுதி கட்டளையை நிறைவேற்ற அவரது துணைவியார் முயற்சிகளை மேற்கொண் டார். 1966ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில்தான் அவரது அந்த எண்ணம் நிறைவேறியது.

செண்பகராமன் பற்றி கவியோகி சுத்தானந்த பாரதியார் எழுதிய ஒரு கவிதையுடன் இன்றைய கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

சண்பகராமன் பிள்ளை - எனில்
சத்திய வீரந் துள்ளும்!
திண்மன வுறுதி கொண்டுழைத்தான்
தேச விடுதலை செழிக்க!
நீண்டுயர் திண்ணுட லுடையோன்!
நேர்மையாய்க் கடமையைக் காப்போன்!
மாண்புறு நேதாஜி தோழன்!
மாநிலம் போற்ற நிவாளன்!
சண்பகச் சங்கம் அமைப்போம்!
சரித்திரப் புகழை யுரைப்போம்!

**அன்புள்ள,**

**மு.க.**

(முரசொலி 01.12.2007)

## “மக்களுடன் முதல்வர்” திட்டம்!

# மக்களின் கோரிக்கைகளுக்கு முப்பது நாட்களுக்குள் தீர்வு காண வழிவகை செய்யும்!


## ‘தினத்தந்தி’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

*சென்னை, டிச. 19-*

“மக்களுடன் முதல்வர்” திட்டத்தில் மக்கள் பல கோரிக்கைகளுக்காக அலுவலகங்களைத் தேடி அலையாமல், அனைத்து அலுவலக அதிகாரிகளையும் ஒரே இடத்தில் சந்தித்து மனு கொடுக்கவும் 30 நாட்களுக்குள் தீர்வு காணவும் வழிவகை செய்துள்ள இத்திட்டம் மக்களுக்கு மிகவும் பலனளிக்கும் திட்டம் என ‘தினத் தந்தி’ நாளேடு தலையங்கத்தில் முதல்வரை பாராட்டியுள்ளது.

அது வருமாறு:-

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சிக்கு வரும் முன்பும், வந்த பிறகும் மக்களிடம் நேரடி தொடர்பில் இருப்பதையே தலையாய கடமையாக கொண்டுள்ளார். எங்கு சென்றாலும் கட்சி தொண்டர்களை மட்டுமல்லாமல், பொது மக்களையும் சந்தித்து வருகிறார். அவர் எப்போதும் காலையில் நடைப் பயிற்சி செல்வதை வழக்கமாக கொண்டுள்ளார். அந்த நேரத்தில் பொதுமக்களிடம் குறைகேட்பது வழக்கம்.




அவரது இந்த அணுகுமுறையை கண்டு கலைஞர் கருணாநிதி தனக்கு வேண்டியவர்களிடம் பேசும்போது மகிழ்வுடனும், பெருமையுடனும் பாராட்டியது உண்டு.

தேர்தலுக்கு முன்பு அனைத்து இடங்களுக்கும் பிரசாரத்துக்கு செல்லும்போது, மேடையில் ‘உங்கள் தொகுதியில் ஸ்டாலின்’ என்று எழுதப்பட்ட பெட்டியை வைத்து, அதில் மக்களின் கோரிக்கை மனுக்களை போடச் சொன்னார். ஆட்சிக்கு வந்தவுடன், அந்த மனுக்களுக்கு தீர்வு காண, உங்கள் தொகுதியில் முதல்அமைச்சர் என்ற துறையை உருவாக்கி, அதற்கு பொறுப்பு அதிகாரியாக ஷில்பா பிரபாகர் சதீஷ் என்ற துடிப்புள்ள பெண் ஐ.ஏ.எஸ். அதிகாரியை நியமித்து, 100 நாட்களில் அனைத்து மனுக்களுக்கும் தீர்வுகண்டு வரலாற்றுச் சாதனையை படைத்தார்.

அதில் கிடைத்த வெற்றியைக்கண்டு, தொடர்ந்து பொது மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முதல்வரின் முகவரித்துறை’ என்ற புதிய துறையை உருவாக்கி, கடந்த 24#2 ஆண்டுகளில் மட்டும் 49 லட்சம் மனுக்கள் பெறப்பட்டு உரிய தீர்வுகாணப்பட்டு வருகிறது.

இப்போது, `கள ஆய்வில் முதல்அமைச்சர்` என்ற திட்டத்தின் மூலம், மக்களுக்காக அறிவிக்கப்பட்ட திட்டங்களின் பலன்கள் அவர்களுக்கு போய்ச் சேருகிறதா? என்பதை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உறுதிப்படுத்தி வருகிறார். மற்றொரு மைல் கல்லாக, ‘மக்களுடன் முதல்வர்’ என்ற மற்றொரு திட்டத்தை உருவாக்கியுள்ளார். அவரது சிந்தையில் உதித்த இந்த திட்டத்தை, இன்று அவர் கோயம்புத்தாரில் தொடங்கிவைக்கிறார்.

பொதுமக்கள் தங்களுடைய கோரிக்கைகளுக்காக அரசின் முக்கியமான பல துறைகளை அணுகி மனுக்கொடுக்க வேண்டியநிலை இருக்கிறது. அவர்கள் இப்படி ஒவ்வொரு துறை அலுவலகங்களாக தேடி அலைவதற்குப் பதிலாக, அவர்களின் கோரிக்கைகளை பெறுவதற்கு வசதியாக அனைத்து நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில், வார்டு மற்றும் கிராம ஊராட்சி அளவில் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்துவது தான் இந்த புதிய திட்டத்தின் நோக்கமாகும். முதல் கட்டமாக இன்று முதல் வருகிற ஜனவரி மாதம் 6ந்தேதி வரை அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகள் என்று 1,745 இடங்களில் முகாம்கள் நடத்தப்படுகின்றன.

அதன்பின், அடுத்தடுத்து அனைத்து இடங்களிலும் இந்த முகாம்கள் நடத்தப்படும். அனைத்து முக்கிய துறைகளும் ஒரே இடத்தில் இருந்து மக்களின் கோரிக்கைகளை பெறும். 30 நாட்களுக்குள் இந்த மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியின் அடிப்படையில் உரிய சேவைகள் மக்களுக்கு வழங்கப்படும். மக்களின் குறைகளைக் களைய, மின்னல் வேகத்தில் நடவடிக்கை எடுக்க உதவும் இந்தத் திட்டம், ஒரு சிறப்பு வாய்ந்த திட்டமாகும்.

சில நேரங்களில், ஒரு மனுவிலுள்ள கோரிக்கைகளுக்கு பல துறைகளின் கருத்து தேவைப்படும். இப்போது அனைத்துத் துறைகளும் ஒரே இடத்தில் இருப்பதால், உடனேயே அந்த துறைகளின் கருத்துகளையும் பெற முடியும். மக்களின் பல கோரிக்கைகளுக்காக பல அலுவலகங்களைத் தேடி அலையாமல், அனைத்து அலுவலக அதிகாரிகளையும் ஒரே இடத்தில் சந்தித்து மனுகொடுக்கவும், 30 நாட்களுக்குள் தீர்வுகாணவும் வழிவகை செய்துள்ள இந்தத் திட்டம், மக்களுக்கு மிகவும் பலனளிக்கும் திட்டமாகும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் மேற்கு ஒன்றியம், கிழக்கு ஒன்றியம், திருவள்ளூர் நகரம் ஆகிய பகுதிகளில் உள்ள நியாய விலைக்கடைகளில் மிக்ஜாம் புயல் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வெள்ள நிவாரண உதவி தொகையாக ரூபாய் 6000/= நேற்று திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி இராஜேந்திரன் வழங்கினார். உடன் கூட்டுறவு துறை சார்ந்த அலுவலர்கள் நியாய விலை கடை ஊழியர்கள், மற்றும் மாவட்ட கழக அவைத்தலைவர் க.திராவிட பக்தன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ. ஆதிசேஷன், கடம்பத்தூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மோ.ரமேஷ், கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.அரிகிருஷ்ணன், திருவள்ளூர் நகர செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன், திருவாலங்காடு கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ். மகாலிங்கம், திருவள்ளூர் நகர்மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமான கழகத் தோழர்கள் பயனாளிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# இனமான ஏந்தலவர்; என்றுமவர் வாழ்கவே!



ஆரிய மாயைதனை
அம்பலப் படுத்திய
பேரறிஞர் அண்ணா
பெரியாரின் வழிநின்று
சீரிய பகுத்தறிவு
சீர்திருத்தம், தன்மானம்
ஊரிலே,நாட்டிலே
ஒவ்வொரு மேடையிலே
பாரிலே உயர்ந்ததாம்
பைந்தமிழ் மொழியிலே
கூரிய சொல்லடுத்துக்
குத்தீட்டி, வில், வாள், வேல்
மாரியாய்ப் பொழிந்துபெரும்
மடமையுடன் அறியாமை
வேரறுத்துக் கொள்கைகள்
விளக்கிய இனமானப்
பேராசிரியப் பெருந்தகை
பிறந்தநாள் நூற்றொன்று;
பேருவகை தந்தின்று
பிறந்தது! விடிவெள்ளி
கார்உலா வானத்தில்
கண்டதுபோல் களிப்புவெள்ளம்
ஊரெல்லாம் வளர்ந்தது;
உள்ளமெலாம் கிளர்ந்தது!

நினைக்கையில் அவரைத்தான்
நெஞ்சிலே எழுகின்ற
முனைப்புள்ள எண்ணங்கள்;
முழுவதும் வண்ணங்கள்!
வனைகின்ற கருத்துகள்;
வளமான குருத்துகள்!
தினையளவும் தளராத
திண்ணிய வீச்சுகள்!
புனைவல்ல கழகமே
பொழுதெலாம் மூச்சுகள்!
சுனையூற்று நீர்போலத்
தூயதமிழ்ப் பேச்சுகள்!
வினையாற்றத் தூண்டிடும்
வெந்தழல் தீத்துகள்!
அனைத்துமே கழகத்தின்
ஆக்கமுறும் போத்துகள்!

அண்ணா மலைக்கழகம்
ஆய்ந்துதமிழ் பயிலுகையில்
அண்ணாவைக் கண்டவர்;
அவர்தலைவர் என்றவர்பின்
நண்ணியவர்; திராவிட
நாடொன்று தேவையென
எண்ணியவர்; சீர்திருத்தம்
இனமானம் எழுப்பியவர்;
கண்ணியம் கடமையுடன்
கட்டுப்பாடு எனமூன்றும்
கொண்டிடுக என அண்ணா
கூறியதை ஏற்றவர்;
கண்டன்று பச்சையப்பன்
கல்லூரி ஆசிரியர்
மண்டுபுகழ் பெற்றவர்!
மாணவர்போல் மக்களுக்குத்
தொண்டாற்ற வேண்டுமென
அண்ணாவின் சொல்கேட்டுத்
திண்டாட்ட அரசியலில்
திகழ்ந்தவர்; முழுநேரம்
விண்டுபல மேடைகளில்
விளக்கங்கள் பொழிந்தவர்!

கண்டபல போராட்டம்
கடுஞ்சிறை எலாம்கடந்து
கொண்டபல பதவிகளால்
கோடிகள் சேர்க்காமல்
துண்டுதறிச் செல்கின்ற
தூயவராய்த் துலங்கியவர்;
வண்டமிழ்த்தேன் வடித்தவர்!
வாரிசாய்த் தளபதியே
எண்டிசையும் போற்றிட
இலகுவார் என்றவர்
திண்ணிய கருத்துடன்
திகழ்ந்தபே ராசிரியர்
எண்ணியது சரியாக
இன்றுண்மை ஆயிற்று!

அண்ணா மதித்திருந்த
அறிவுசால் பேராசிரியர்
எண்ணாமல் ஏதொன்றும்
எப்போதும் செய்ததில்லை!
கண்ணறச் சொல்வதில்
கனிவென்றும்
குறைந்ததில்லை!
புண்படுவார் பிறரென்று
பொய்யுரைக்க முனைந்ததில்லை;
பண்பட்ட மொழியன்றிப்
பகருதல் கேட்டதில்லை;
நண்பராய், நெருக்கமாய்
நாவலர் இருந்தபோதும்
கண்கெட்டுப் போனவழி
கால்வைக்க விழைந்ததில்லை!
அண்டியே கீழோரின்
அடிவீழ்ந்தோர் ஆயிரம்
கொண்டாலும் சிறப்பில்லை;
கொள்கையர்க்கோ
இறப்பில்லை!
பண்பாளர்க்கு என்றுமே
பதவிதான் பெரிதுமில்லை!

தொண்டொன்றே வாழ்வென்று
துலங்கிய பின்னாலே
தண்டூன்றும் காலத்தும்
தறுகண்மை இழப்பதில்லை!
வண்டாகப் பறந்துபெரும்
வளம்சேர்த்துப் பிழைப்பதிலே
உண்டாகும் நிலைமையை
உயர்ந்தவர் மதிப்பதில்லை!

பேராசிரியர்
**மா.செல்வராசன்**

நீரோட்டம் போலவே
நிற்காமல் ஒருகட்சி,
பேரோட்டம் ஓடுபவர்
பெரும்பயன் தேடுபவர்
பாரெட்டும் கிடக்கையில்
பரத்தையாய் நடக்கையில்
ஈரோட்டுப் பட்டறையில்
இனக்காஞ்சிப் பாசறையில்
மார்தட்டி வளர்ந்தவர்
மானமாய்க் கிளர்ந்தவர்
நேராக நிமிர்ந்தவர்
நீசரை உமிழ்ந்தவர்
போராட்டம் கண்டவர்
புன்சிரிப்பைக் கொண்டவர்
தேரோட்டம் சென்றவர்
செம்மலாய் நின்றவர்
பேராசிரியர் என்றே
பேசிடும் உலகுநன்றே!

காலங்கள் எத்தனை
கடந்துதான் போயினும்
நீலவான் கழகத்தின்
நெருப்புநிலா ஆனவர்;
ஆலமரம் போல்படர்ந்த
அண்ணாவின் கழகந்தான்
ஞாலத்தில் நிலைத்திட
நல்லாட்சி புரிந்திட,
சாலவே உழைத்துழைத்துத்
தழைக்கவைத்த கலைஞரின்
வாலறிவு நண்பராய்

வலமிருந்து நடந்தவர்!
நூலறிவு மிக்கவர்;
நோக்கழகு மிளிர்ந்தவர்,
மேலவர்பே ராசிரியர்
மேன்மைமிகு பெருமகனார்!

செந்தமிழ் செந்தமிழர்
செந்தமிழ் நாட்டிற்கு
எந்தவிதம் எதிர்ப்புகள்
எழுந்தாலும் எரிமலையை
முந்துதல்போல் கிளர்ந்தெழுந்து
முறித்தவர்! சமற்கிருதம்
இந்திமொழி யாவுமே
இனம்,மொழி எதிர்காலச்
சந்ததிகள் அழிப்பதற்குத்
தயங்காமல் தடம்போட்டுத்
தந்திரமாய் வருபவை;
தாழ்வுகளே தருபவை!
சிந்தியேனும் குருதியை,
சிறைகளை நிரப்பியேனும்
சிந்துகள் பாடியே
தீமைகளை வெல்வதுதான்
நந்தமிழர் கடமையென
நாளுமே போராட
முந்தியவர்;கழகத்தில்
முன்னின்று முழங்கியவர்!
அந்திவரை பொதுச்செயலர்
ஆனபே ராசிரியர்
இந்தநாள் பிறந்தநாள்!
இனியநாள்; எழுச்சிநாள்!

எழுத்தாலும் பேச்சாலும்
இலக்கணம்போல் செயலாலும்
அழுத்தமாய்க் கருத்துகள்
அயராமல் பதித்தவர்!
செழித்திருந்த உயர்குலச்
செம்மலாய்ப் பிறந்திருந்தும்
புழுத்திருந்த சமுதாயம்
பொலிவுற்று முன்னேற
உழுதுழுது வாழ்வெல்லாம்
உழைத்தவர்; அண்ணாவின்
விழுதாகத் தோன்றியே
மரமாக விளங்கியவர்!

பழுதாக எண்ணுவதோ
பாழாகச் செய்வதோ
ஒழுகாமல் உயர்ந்தவர்;
உரிமையை உவந்தவர்;
மெழுகாக உருகியவர்;
மேன்மையாய் ஒளிர்ந்தவர்;
கழுகாகக் கொத்துகிற
கரவான அரசியலில்
வழுவாகப் போகாமல்
வல்லோர்க்குப் பணியாமல்
தழலாகச் சிலநேரம்
தண்தென்றல் பலநேரம்
நிழல்தந்து வாழ்ந்தவர்!
நிலையான கழகத்தில்
குழுவின்றி வளர்ந்தவர்;
குரிசிலாய் மலர்ந்தவர்!
எழுச்சிப்பே ராசிரியர்
இனியநற் பிறந்தநாள்
வழுத்துவோம்; வையமுள்ள
வரைஅவர் வாழ்கவே!

மண்ணுலகம் புகழ்ந்தவர்;
மாண்புற்றுத் திகழ்ந்தவர்
கண்ணான பிறந்தநாள்;
கழகத்தின் சிறந்தநாள்;
எண்ணிலாது எழுகவே;
இனமானம் வளர்கவே!
வண்டூதும் பூக்களை
வாரிவாரித் தூவியே
கொண்டாடிப் போற்றுவோம்;
கொள்கையின் கோமான்செய்
தொண்டுகள் என்றென்றும்
தொடருவோம்; வாழ்த்துவோம்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் "மக்களுடன் முதல்வர் திட்டத்தினை நேற்று (18.12.2023) தொடங்கி வைத்ததையொட்டி சேலம் மாவட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேலம் மாநகராட்சி தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் "மக்களுடன் முதல்வர் திட்டத்தின்கீழ் நேற்று காலை பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடித் தீர்வு கண்டு பயனாளிகளுக்கான சான்றிதழ்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன்,சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் சீ. பாலச்சந்தர், கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) மரு.அலர்மேல் மங்கை, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, முன்னாள்அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### கடும் மழை: மீட்பு - நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த

## மேலும் நான்கு அமைச்சர்கள் நியமனம்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, டிச. 19 -

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த கூடுதலாக நான்கு அமைச்சர்களை நியமனம் செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

பொதுமக்கள் தங்களுக்கு தேவையான உதவிகள் மற்றும் பாதிப்புகள் குறித்த விவரங்களை தமிழ்நாடுஅரசின் "வாட்ஸ்அப்" எண் மற்றும் "டிவிட்டர்"ல் பதிவுகளில் தெரிவிக்கலாம் - என்று தமிழ்நாடு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் பரவலாக அனைத்து பகுதிகளிலும் பெய்து வரும் கனமழை முதல் அதிகனமழை காரணமாக பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களிலிருந்து அவர்களை மீட்கவும், அவர்களுக்குத் தேவையான உதவிகளை உடனடியாக வழங்கிடவும் தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள பொதுமக்களை மீட்கவும், அவர்களுக்கு அவசரகால உதவிகளை வழங்கிடவும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதா ஜீவன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும்கால் நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், பால்வளத் துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் ஆகிய அமைச்சர்கள் உடனடியாக அனுப்பப்பட்டு, அவர்கள் மீட்பு மற்றும் நிவாரண உதவிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகின்றனர். மேலும், நாடாளுமன்ற கழகக் குழுத் துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி, எஸ். ஞான திரவியம் எம்.பி. மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளை மேலும் துரிதப்படுத்தி பணிகளை விரைவுப்படுத்த கூடுதலாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகிய அமைச்சர்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நியமித்துள்ளார்.

மேலும், கனமழையால் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ள பொதுமக்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள், தேவைப்படும் நிவாரண உதவிகள், மருத்துவ உதவிகள், மீட்பு நடவடிக்கைகள் குறித்து சமூக வலைதளத்தின் (Social Media) மூலம் அரசின் வாட்ஸ்அப் எண்: 8148539914 மற்றும் "டிவிட்டர்" மூலமாக பதிவுகளை தெரிவிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

டிவிட்டர் :http://twitter.com/tn_rescuerelief (Username @tn_rescuerelief)

### மோடி அரசு இதுவரையிலும் முழுமையான ஆய்வறிக்கைகளை வெளியிடவில்லை!

## தீவிரமான வேலையின்மை - வெடிக்கக் காத்திருக்கும் குண்டு!

### 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, டிச.19 -

"இந்திய வேலையின்மை நிலவரம் குறித்து மோடி அரசு, இதுவரையிலும் முழுமை யான ஆய்வறிக்கைகளை வெளியிடவில்லை. தீவிரமான வேலையின்மை, வெடிக்க காத்திருக்கும் குண்டு போன்றதே" என 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.


தீக்கதிர்
2023 டிசம்பர் 18 திங்கட்கிழமை
வெடிக்கக் காத்திருக்கும் குண்டு

இதுகுறித்து 18.12.2023 தேதிய 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது:-

இந்தியாவின் வேலையின்மை நெருக்கடி மேலும் ஆழமாகியுள்ளது என்ற புதிய விபரங்கள் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன. இந்திய இளைஞர்களில் 40 சதவீதம் பேர் எந்த வேலையும் கிடைக்கப்பெறாமல், வேலை வாய்ப்பு வட்டத் திற்கு வெளியில் தள்ளப்பட்டிருக்கிறார்கள். நாட்டின் பல பகுதிகளில் பல்வேறு விதமான தனியார் நிறுவன வேலை வாய்ப்பு முகாம்கள் நடைபெற்றாலும் அதில் பங்கேற்பவர்களில் 10 சதவீதம் பேருக்குக் கூட வேலை உத்தர வாதம் கிடைப்பதில்லை என்று தெரியவந்துள்ளது.

உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட இரண்டு நாடுகளில் இந்தியா தான் இளைஞர்களை மிக அதிகமாகக் கொண்ட நாடு. இந்திய மக்கள்தொகையில் 66சதவீதம் பேர் 35 வய துக்கு கீழே உள்ளவர்கள். அதாவது உலகில் உள்ள மக்களில் 5ல் ஒருவர் இந்தியர் ஆவார். இத்தனை பெரிய இளைய தலைமுறையைக் கொண்டுள்ள நாட்டில் கடந்த 20 ஆண்டு கால மாக வேலையின்மை விகிதம் படிப்படியாக அதி கரித்து தற்போது உச்சத்தை தொட்டுள்ளது.

2010ல் 2 சதவீதமாக இருந்த வேலையின்மை, மோடி ஆட்சிக்கு வந்த பிறகு 2015ல் 5சதவீதமாக அதிகரித்தது. 2018ல் 6.1சதவீதமாக அதிகரித்த வேலையின்மை தற்போது 8 சதவீதமாக மிகப் பெரும் அளவிற்கு வீங்கி நிற்கிறது.

2021, 2022 ஆண்டுகளில் மட்டும் ஒன்றிய அரசுத் துறைகளில் வேலைவாய்ப்புக்காக 1.8 கோடிப் பேர் விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் வெறும் 38,850 பேருக்கு மட்டுமே வேலை கிடைக்கப் பெற்றுள்ளது. அதாவது வெறும் 0.2 சதவீதம். மிகக்குறைந்த கல்வித்தகுதி தேவைப் படும் நான்காம், ஐந்தாம் பிரிவு வேலைகளுக்கு கூட முனைவர் பட்டம் பெற்றவர்கள், பொறியாளர் பட்டம் பெற்றவர்கள், எம்.பி.ஏ. பட்டதாரிகள் உட்பட பல லட்சக்கணக்கானோர் விண்ணப் பித்து வருவது சர்வசாதாரணமாக மாறியுள்ளது.

அரசுத்துறைகளில் உள்ள பல லட்சக்கணக் கான காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு மோடி அரசும் சரி, பல்வேறு மாநில அரசுகளும் சரி தயாராக இல்லை. மாறாக, மிகவும் அத்தி யாவசிய தேவையாக உள்ள பணியிடங்களை மட்டும் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பு வது என்பது தீவிரமடைந்துள்ளது. அந்த வேலை களிலும் கூட மதிப்பூதியம், தொகுப்பூதியம் என்ற அடிப்படையில் வெறும் ரூ.8 ஆயிரம் முதல் ரூ.15 ஆயிரம் வரை மட்டுமே கிடைக்கப் பெறுகிற அவ லம் நீடிக்கிறது. தனியார் துறையில் இதைவிடக் குறைவா கவே ஊதியம் நிர்ணயிக்கப் படுகிறது.

இந்திய வேலையின்மை நிலவரம் இவ்வளவு மோசமாக உள்ள சூழலிலும் இது வரையிலும் மோடி அரசு முழுமையான ஆய்வறிக்கைகளை வெளியிடவில்லை. இந்திய இளைஞர்களில் மூன்றில் ஒரு பகுதியினருக்கு வேலை யில்லை என்றால், அவர்கள் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வியை எழுப்பு கிறது உலகவங்கி. இத்தனை தீவிரமான வேலையின்மை, வெடிக்க காத்திருக்கும் குண்டு போன்றதே.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

## அண்ணாவின் அறிவும், தியாகமும் !



அண்ணாவின் அறிவு, ஆழமும் பரப்பும் மிகுந்தது, பசிபிக் கடலைப் போன்று;

அண்ணாவின் தியாகமும், திண்மையும், உயர்ச்சியும் மிகுந்தது, இமயம் போன்று;

அண்ணாவின் அறிவின் மாட்சி, அறிஞர்கள் புரிந்து கொண்டு பாராட்டப் பெறுவது.

அண்ணாவின் தியாக மாட்சி, பாமரரும் புரிந்து கொண்டு போற்றப் படுவது.

அண்ணாவின் அறிவுத் திறன், எத்தனையோ ஏடுகளில் இன்றும் காணக் கூடியது.

அண்ணாவின் தியாக உணர்வு, அவரது உடம்போடு, உயிரோடு ஒன்றியிருந்தது.

அண்ணாவின் தொண்டும், தியாகமும், அவர் எய்திய புகழ் வடிவில் நிலைத்தன.

ஆம்! அண்ணா அவர்கள், அவர்தம் அறிவாலே 'அறிஞர்' என்னும்சிறப்புப்பெற்றார். ஆனால், அவர்தம்தியாகத்தாலேதான், நாட்டவர்க்கே " அண்ணா" ஆனார்.

**- பேராசிரியர்**








சேலம் மாவட்டம், காரிப்பட்டி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டப்பட்ட வட்டார பொது சுகாதார ஆய்வகக் கட்டடத்தினை நேற்று (18.12.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் டி.எம். செல்வகணபதி, ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.ஹேமலதா விஜயகுமார் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 111வது வார்டு மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஏ.நந்தினி எம்.சி. தலைமையில் நிவாரண பொருட்கள் ஆன அரிசி, மளிகைப் பொருட்கள், போர்வை, பிஸ்கட் போன்ற பொருட்களை சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் வழங்கினர். கழக நிர்வாகிகள் உடனுள்ளனர்.

### சேலம் அரசு மோகன் குமாரமங்கலம்

# மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அதிநவீன மருத்துவக் கருவிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சேலம், டிச. 19-

மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று (18.12.2023) சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அதிநவீன மருத்துவ உபகரணங்கள் மற்றும் புதிய மருத்துவக் கட்டடங்களைத் திறந்து வைத்துப் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மருத்துவத் துறைக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில், இன்றைய தினம் சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நுண்கதிர் துறையில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டடத்துடன் கூடிய அதிநவீன PET-CT Scan கருவி, இருதய சிகிச்சை துறைக்கு ரூ.6.15 கோடி மதிப்பிலான CATH-LAB மற்றும் மகப்பேறு மருத்துவத் துறைக்கு ரூ.39 இலட்சம் மதிப்பிலான குடும்பக் கட்டுப்பாட்டுக்கான அதிநவீன லேப்ராஸ்கோப்பி கருவி என மொத்தம் ரூ.18.54 கோடி மதிப்பிலான வசதிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, புற்றுநோயினை மிகத் துல்லியமாக கண்டறியும் PET-CT Scan கருவி தமிழ்நாட்டில் உள்ள சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மற்றும் மதுரை இராஜாஜி அரசு பொது மருத்துவமனை ஆகிய இரண்டு அரசு மருத்துவமனைகளில் இருந்து வந்த நிலையில், கடந்த மாதம் திருநெல்வேலி, தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் PET-CT Scan கருவி பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இன்றைய தினம் சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் PET-CT Scan கருவி பயன்பாட்டிற்கு கொண்டுவரப் பட்டுள்ளது.

மேலும், இன்றைய தினம் இங்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ள அதிநவீன PET-CT Scan கருவி மூலம் நாளொன்றுக்கு சுமார் 20 நோயாளிகள் வரை பயன்பெறுவர். இந்த ஸ்கேன் பரிசோதனையினை முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இலவசமாக செய்துகொள்ள முடியும். முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டை இல்லாத நோயாளிகள் தோராயமாக ரூ.6,500/- முதல் ரூ.11,000/- வரை மட்டும் பராமரிப்பு செலவிற்காக செலுத்தி இந்த ஸ்கேன் பரிசோதனையினை செய்து கொள்ளலாம்.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சில நாட்களுக்கு முன்னர் சேலம் மாவட்டத்தில் 4 சிறப்பு காப்பீட்டுத் திட்ட பதிவு முகாம்கள் நடத்தப்பட்டது. மேலும் வருகின்ற ஜனவரி மாதத்திலும் இச்சிறப்பு காப்பீட்டு திட்ட பதிவு முகாம்கள் நடத்தப்படவுள்ளன. சேலம் மாவட்டத்தில் 90 சதவிகித மக்கள் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டை வைத்துள்ளனர். காப்பீட்டு அட்டை இல்லாதவர்களும் விண்ணப்பித்தால் விரைவாக முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டை வழங்கப்படும்.

PET-CT Scan கருவி அறிக்கையின் மூலம் புற்றுநோயின் அனைத்து நிலையினையும் அறிந்து கொள்வது மட்டுமல்லாமல், எவ்வித சிகிச்சை அளிக்கலாம் என்பதை தீர்மானிப்பது மற்றும் புற்றுநோய் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு சிகிச்சையின் செயல்திறனையும் அறிந்து கொள்ள முடியும்.

இந்த ஆண்டு ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சேலம், திருவண்ணாமலை, திருவாரூர் ஆகிய பகுதிகளில் CATH-LAB கருவியினை செயல்படுத்த திட்டமிடப்பட்டது. இதில் சேலம் மாவட்டத்தில் இன்றைய தினம் முதலில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இருதய சிகிச்சைக்கான கருவிகளில் மிக முக்கியமானது CATH-LAB கருவி. இதன் மூலம் அருகிலிருக்கும் 8 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களும் Angiogram, AngioPlasty சிகிச்சைப் பெற்று பயனடைவார்கள்.

மேலும், மகப்பேறு மருத்துவத் துறைக்கு வழங்கப்பட்டுள்ள அதிநவீன கேமராவுடன் கூடிய லேப்ராஸ்கோப்பி கருவியின் மூலம் பாதுகாப்பான நிரந்திர குடும்பநல அறுவை சிகிச்சை செய்து கொள்ள முடியும். சிறிய வெட்டு ஏற்படுவதால் குருதிப்போகும் வலியும் வெகுகுறைவாக இருப்பதன் காரணமாக விரைவில் குணமாகும். மருத்துவமனையில் தங்கும் காலம் குறைந்து அறுவை சிகிச்சை செய்த 24 மணி நேரத்தில் வீட்டிற்குச் செல்லலாம். இதன் மூலம் நிரந்தர குடும்பநல அறுவை சிகிச்சை எண்ணிக்கையை மேலும் அதிகரித்து சேலம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கு பெரும் பயனாக அமையும்.

சேலம் மாவட்டத்தில் மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்ச்சியாக பெருமளவில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் இம்மாவட்டத்தைச் சுற்றியுள்ள பல்வேறு மாவட்டங்களும் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் அவர்கள் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் செ. கார்மேகம், மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா. சாரதாதேவி, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. இரா. மணி, மருத்துவக் கண்காணிப்பாளர் மரு.ப.வே. தனபால் உட்பட தொடர்புடைய அலுவலர்கள், மருத்துவர்கள் கலந்துகொண்டனர்.

### இ.ஜோசப் அண்ணாதுரை தலைமை! மேயர் வசந்தகுமாரி - துணை மேயர் கோ.காமராஜ் பங்கேற்பு!

# பல்லாவரம் வடக்கு-தெற்கு பகுதி இளைஞரணி நிர்வாகிகள் கூட்டம்!

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் - இ.கருணாநிதி எம்.எல்.ஏ. சிறப்புரை!

*பல்லவபுரம், டிச.19*

*பல்லாவரம் வடக்கு மற்றும் தெற்கு பகுதி தி.மு.க. சார்பாக இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில் பங்கேற்பது குறித்து வட்ட (பூத்) பாக இளைஞரணி நிர்வாகிகள் பாக முகவர்கள் BLA2 ஆலோசனைக் கூட்டம் பல்லாவரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் மண்டல தலைவர் வடக்கு பகுதி கழக செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை தலைமையில் தெற்கு பகுதி கழக செயலாளர் இ. எஸ். பெர்னாட் வரவேற்பு உரையில் நடைபெற்றது.*

*இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோஅன்பரசன் கலந்து கொண்டு பல்லாவரம் வடக்கு மற்றும் தெற்கு பகுதி கழகத்தின் சார்பில் ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞரணி நிர்வாகிகள் இளைஞர் அணி 2-வது மாநில மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் வர இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் 40க்கு 40 தொகுதிகளை வெற்றி பெற வீடு வீடாக சென்று வாக்காளர்களை சரி பார்த்தல் ஒ.எம்.ஆர் பாரத்தை எவ்வாறு பூர்த்தி செய்தல் போன்ற ஆலோசனை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.*

*அப்பொழுது மாவட்ட துணைச் செயலாளரும், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருமான இ. கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் க. வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்திய பிரபு, துணை அமைப்பாளர் ஜெ.இன்சமாம் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.*

### என். கவிதா நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மாதவரம் 17வது வட்ட தூய்மை பணியாளர்களுக்கு நிவாரண உதவிகள்!

## கே. கருணாகரன், சி. மூர்த்தி, சீ. பாலாஜி முன்னிலையில் புழல் எம். நாராயணன் வழங்கினார்!

*சென்னை,டிச.19-*

*சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 17 வது வட்டம், வடபெரும்பாக்கம் பகுதியில் அடங்கிய, சென்னை மாநகராட்சி ஊழியர்கள், தூய்மை பணியாளர்கள் என அனைவருக்கும் அறுசுவை உணவு மற்றும் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.*

*சமீபத்தில் பெய்து பலத்த சேதத்தை ஏற்படுத்திய புயல் மழை காரணமாக தங்களுடைய இன்னுயிரையும் பொருட்படுத்தாமல் களப்பணியாற்றி தூய்மை பணியில் ஈடுபட்ட தூய்மை பணியாளர்கள், குடிநீர் வடிகால் வாரிய பணியாளர்கள், மின்சார வாரிய பணியாளர்கள், ஒப்பந்த தொழிலாளர்கள் என 200க்கும் மேற்பட்டவர்களுக்கு, 17வது வார்டு முன்னாள் சென்னை மாநகராட்சி கவுன்சிலர் என். கவிதா நாராயணன் ஏற்பாட்டில் அறுசுவை உணவு மற்றும் நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டன. மதிய உணவாக வடபெரும்பாக்கம் சமுதாயக்கூடத்தில் தலைவாழை இலையில் சைவ மற்றும் அசைவ விருந்து பரிமாறப்பட்டது.*

*17வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் சி. மூர்த்தி, சீ. பாலாஜி முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் தூய்மை பணியாளர்களுக்கு கறி விருந்து மற்றும் நிவாரண பொருட்களை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார்.*

*தூய்மை பணியாளர்களுக்கும் மற்றும் முன் களப்பணியாளர்களுக்கும் சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்கள். மேலும் நிவாரண பொருட்களாக அரிசி, போர்வை, கோதுமை மாவு உள்ளிட்ட பொருட்கள் வழங்கப்பட்டது.*

*முன்னதாக திருவண்ணாமலையிலிருந்து வருகை தந்து மக்களுக்கு தொற்று ஏற்படாமல் பாதுகாத்து உழைத்த மருத்துவ குழுவினருக்கு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் சால்வை அணிவித்து கௌரவித்தார். தூய்மை பணியாளர்கள் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளும் வகையில் வடபெரும்பாக்கம் சமுதாயக்கூடத்தில் மாநகராட்சி சார்பில் மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.*

*இந்த முகாமில் நூற்றுக்கணக்கான தூய்மை பணியாளர்கள் தங்களை பரிசோதனை செய்து கொண்டு அரசு வழங்கிய இலவசமான மருந்து மாத்திரைகளை பெற்று பயனடைந்தனர்.*

*இந்த நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள் சி. மூர்த்தி, சீ. பாலாஜி, வி .பார்த்தசாரதி, என். நாகராஜன், எம். ஜான்சன், கே. சண்முக பிரியன், எஸ். சிவகுமார், டி. வினோத், கே. ராஜ்குமார்,எஸ். நாகராஜ், பூபாலன், ஜோசப் ,வட பெரும்பாக்கம் எம். மைக்கேல், எம். கோவிந்தன், பி. செந்தில், கார்த்திக், ஜி .முனிவேல் ,ஜி. செல்வம், கே .அன்பு, ஜி. கமலநாதன், எஸ். தினேஷ், எஸ் .சதீஷ், எலந்தனூர் சிவபிரகாஷ் ,மணலி புதுநகர் பி. கே. கண்ணன், சி .எம். ராஜா, டோமினிக் பிரான்சிஸ் தேவராஜ், செமின் எடிசன், பர்மா நகர் தினேஷ் சங்கர், வக்கீல் எம். என். தளபதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.*

*இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்தவர்களுக்கு மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன் நன்றி கூறினார்*

### சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில்

# மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள்!

*சென்னை,டிச.19-*

*முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினை முன்னிட்டு பொதுமக்களுக்கு நோய்த்தொற்று பாதிப்பு ஏற்படாதவண்ணம் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.*

*பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கடந்த 01.12.2023 முதல் 17.12.2023 வரை 8,294 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 4,95,910 நபர்கள் பயனடைந்துள்ளனர்.*

*மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நேற்று (18.12.2023) 708 இடங்களில் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது. பொதுமக்களின் இருப்பிடத்திற்கு சென்று சிகிச்சை அளிக்கும் வகையில் 590 நடமாடும் மருத்துவ முகாம்கள் நடத்தப் பட்டது. மேலும், 118 நிலையான மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது. இந்த முகாம்களில் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு பணியாளர் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.*

*இந்த மருத்துவ முகாம்களில் பொதுமக்களுக்கு சளி, காய்ச்சல், இருமல், தோல் சம்பந்தப்பட்ட நோய்கள், சேற்றுப்புண் உள்ளிட்ட மழைக்கால நோய்கள் மற்றும் இதர மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.*



மிக்ஜாம் புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.6000/– நிவாரண உதவித்தொகை தொடங்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து, செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 4 மேற்கு தாம்பரம் பாரதியார் நகர், எண் 194 எஸ்.கே. நியாய விலைக் கடையில் தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா பொது மக்களுக்கு புயல் நிவாரணமாக 6000/ ரூபாய் வழங்கினார். நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மாவட்ட கண்காணிப்பு அலுவலர்/வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை அரசு செயலாளர் சமயமூர்த்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், தாம்பரம் மாநகராட்சி ஆணையர் திருமதி அழகுமீனா உதவி ஆட்சியர் (பயிற்சி) ஆனந்த் குமார் சிங், மற்றும் மண்டலத்தலைவர் டி.காமராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.






16ஆம் நாள் படத்திறப்பு நிகழ்ச்சி

நாள் : 19.12.2023 செவ்வாய்க்கிழமை
இடம் : 41/21, சிவராஜபுரம் முதல் தெரு, புளியந்தோப்பு, சென்னை – 12.



தோற்றம் 01.01.1938 நடப்பு 19.12.2023
மறைவு 04.12.2023 காரியம் 20.12.2023

1957 கழகம் சந்தித்த தேர்தல் முதல் இன்று வரை நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் பூத் ஏஜென்டாக (BLA 2) பணிபுரிந்து 63 & 64 பாகத்தை (சிவராஜபுரம்) திமுக வெற்றிகோட்டையாக நிலைநிறுத்தியவரும் கழகம் என்னசெய்தது என்பதை விட கழகத்துக்காக என்ன செய்தோமென்று வாழ்ந்தவர் அவருடைய இல்ல திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் பெருமையடைகிறேன் என்று தமிழ்நாடு முதலமைச்சர் **மு.க.ஸ்டாலின்** அவர்களால் புகழாரம் சூட்டப்பட்டவரும் கழகம் நடத்திய அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைசென்றவரும், பல்வேறு மாநாடுகளிலும் கலந்து கொண்டு கழகத்திற்காக உழைத்தவரும் **தலைவர் கலைஞர்** மீது மிகுந்த பாசம் கொண்டவரும்

தெய்வத்திரு. **E.மாரிகண்ணு** அவர்களின் மனைவியும்
சென்னை கிழக்கு மாவட்ட பிரதிநிதி **மா.காந்தி** அவர்களின் தாயாருமான
திருமதி **M.அமராவதி** வயது : 85 அவர்களின் மறைவையொட்டி

**இரங்கல் கூட்டம் படத்திறப்பு நிகழ்ச்சி நடைபெறுகிறது.**

தலைமை
**இ.பரந்தாமன்** BABL.,MLA
தலைமை கழக சட்டத்துறை இணைச் செயலாளர்
அண்ணா பல்கலைக்கழக செனட் உறுப்பினர்

முன்னிலை **சொ.வேலு** MBA.,MC
சென்னை மாநகராட்சி நியமனக்குழு உறுப்பினர்
எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர்

**வி.சுதாகர்**
எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர்

மாண்புமிகு
படத்தை திறந்து வைத்து இரங்கல் உரை
**பி.கே.சேகர்பாபு**
இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் – சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் தலைவர்
சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர்

உயர்திரு **தயாநிதிமாறன்** MP
மத்திய சென்னை பாராளுமன்ற உறுப்பினர் – முன்னாள் மத்திய அமைச்சர்

**K.S.இரவிச்சந்திரன்** B.Sc.,EX.MLA
கழக சட்டத்துறை இணைச் செயலாளர்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| புலவர் சாமிநாகப்பன் | R.D.சங்கர்நானா | க.வினோத் | V.அபாய் | தி.தயாளன் | கா.எழிலன் | சூளைநேரு | E.காளிதாஸ் | க.கோ.கோமகன் |
| தலைமை கழக பேச்சாளர் | செ.கி.மா.இ.அ.து.அமைப்பாளர் | செ.கி.மா.து.அமைப்பாளர் | 77 (அ) வட்ட செயலாளர் | 77 வது வட்ட செயலாளர் | தலைமை கழக பேச்சாளர் | தலைமை கழக பேச்சாளர் | பகுதி பிரதிநிதி | செயற்குழு உறுப்பினர் |

மற்றும் மாவட்ட கழக, பகுதி கழக, வட்ட கழக, இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு இரங்கல் நிகழ்ச்சியில் பங்கேற்குமாறு அழைக்கின்றோம்.

வருத்தத்துடன் M.காந்தி G.கிளியம்மாள், M.பார்த்திபன் P.சாந்தி, M.கார்த்திகேயன் K.கலைவாணி, M.முருகன் M.மைதிலி,
தெய்வத்திரு M.கண்ணகி தெய்வத்திரு W.பரிமளா வில்சன், S.அனுசுயா சங்கர், N.ஆனந்தி நாகராஜ் E.ஆறுமுகம் மு.அசோக்குமார் S.சான்டிலியன் K.வெங்கடேசன் S.புனிதன் மு.கு.சு.மோசஸ் E.குமரன்
W.பொன்மொழியன் P.பிரபாவதி W.மணிமொழியன் M.பாக்கியம் G.ராஜாத்திவினோத்குமார் M.A.B.L., G.தினகரன் MBA., D.நிஷா G.இளவரசிராமச்சந்திரன் B.Sc., TKS.பிரபாகரன் MBA., K.கனிமொழிகார்த்திக் B.Com.,
N.ராம்கி BBA.,FGL TKS.சூரியா B.E., J.ராஜேஸ்வரிஜெயபிரகாஷ் DCE., P.கவிதாசன் B.Com., P.பிரியதர்ஷினி M.Com., Dr.K.கோகுலகிருஷ்ணன் MPT., N.வெங்கடேசன் B.Com., P.கமலி B.Com., K.நிலா B.Sc.,
M.முரளிகிருஷ்ணன் B.E., M.மித்ரா P.ஸ்ரீமதி B.Com., P.ஸ்ரீராம் B.A., M.சாதனா M.ஆகாஷ் V.கௌதம் K.கௌசிக் R.சம்யுதா V.விக்ரம் K.கிர்த்விக் D.சித்தார்த் P.மகிழினி

சென்னை கிழக்கு மாவட்டம் - எழும்பூர் வடக்கு பகுதி - 77(அ) வட்டம்



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகர தி.மு.க. இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் (BLA2) பூத் இளைஞரணி உறுப்பினர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு உரையாற்றினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன், நகர மன்ற தலைவர் எம்.கே.டி.கார்த்திக், பகுதி செயலாளர் த.ஜெயகுமார், தொகுதி பார்வையாளர் கே.எம்.எஸ். நாதன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், துணை அமைப்பாளர் மணிகண்டன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அதிநவீன CATH Lab வசதியினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (18.12.2023) திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.இராஜேந்திரன், துணை மேயர் திருமதி.எம்.சாரதாதேவி, முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.இரா.மணி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

முதல்வரின் உத்தரவையேற்று நெல்லை - தென்காசி - கன்னியாகுமரி - தூத்துக்குடி மாவட்டங்களில்

# மழை பாதிப்புகளைப் பார்வையிட்டு - முகாம்களில் மக்களைச் சந்தித்து நிவாரணம்!

## அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு - கனிமொழி கருணாநிதி எம்.பி. வழங்கினர்!

தூத்துக்குடி, டிச. 19-

முதல்வரின் உத்தரவையேற்று - தென்காசி - கன்னியாகுமரி - தூத்துக்குடி ஆகிய தென் மாவட்டங்களில் மழை பாதிப்புகளை பார்வையிட்டு முகாம்களில் தங்கியுள்ள மக்களை சந்தித்து நலம் விசாரித்து நிவாரண உதவிகளை நாடாளுமன்ற கழகக் குழுத் துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி, அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி.கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், மனோ தங்கராஜ் ஆகியோர் வழங்கினர்.

### தென்காசி

தென்காசி மாவட்டத்திலும் கனமழை பெய்து வருகிறது. இதனால் குற்றாலம் மெயின் அருவி, கடனாநதி அணை உள்ளிட்ட இடங்களில் தண்ணீர் ஆர்ப்பரித்து செல்கிறது. இந்நிலையில், மாவட்டத்தின் மழை பாதிப்புகள் குறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் ஆய்வு மேற்கொண்டார். முகாமில் தங்க வைக்கப் பட்டுள்ள பொதுமக்களை சந்தித்து அவர் நலம் விசாரித்தார். அப்போது அவர்களுக்கு செய்து கொடுக்கப் பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்து அவர் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வுகளின்போது, தென்காசி மாவட்ட ஆட்சியர் துரை ரவிச்சந்திரன், தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுரேஷ்குமார், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சுன் சோங்கம் ஐடக் சிரு, தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் ஜெயபாலன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### குற்றாலம்

இதேபோல், குற்றாலத்தில் மெயின் அருவி பகுதியில் கனமழையினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் ஆய்வு மேற்கொண்டார். சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினரும், தென்காசி வடக்கு மாவட்டப் பொறுப்பாளருமான ராஜா மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### பாளையங்கோட்டை

பாளையங்கோட்டையில் மழை வெள்ள மீட்பு பணிகள் குறித்து நிதியமைச்சர் தங்கம் தென்னரசு ஆலோசனை மேற்கொண்டார்.

திருநெல்வேலி, தூத்துக்குடி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் வரலாறு காணாத கனமழை பெய்து வருகிறது. தாழ்வான பகுதிகளை மழை வெள்ளம் சூழ்ந்ததால் தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் மீட்பு பணிகளை மேற்கொண்டு வருகிறது. அமைச்சர்களும், அரசு அதிகாரிகளும் தீவிரமாக களப் பணியாற்றும்படி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தி உள்ளார். இந்த நிலையில், திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில், மழை வெள்ள மீட்பு பணிகள் குறித்து நிதியமைச்சர் தங்கம் தென்னரசு ஆலோசனை மேற்கொண்டார். அப்போது மீட்பு பணிகளை துரிதப்படுத்துவது குறித்தும், முகாம்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏற்பாடுகள் குறித்தும் வருவாய்த்துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்தார். இதில், நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், மாவட்ட திமுக செயலாளர் ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி. மைதீன்கான், உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

இதையடுத்து, பாளையங்கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு மேற்கொண்டார். அப்போது முகாமில் தங்க வைக்கப் பட்டுள்ள மக்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தரும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

### கன்னியாகுமரி

கன்னியாகுமரி மாவட்டத்தில் வெள்ளத்தில் சிக்கியுள்ளவர்கள் படகு மூலம் மீட்புமீட்பு பணிகளை துரிதப்படுத்திய அமைச்சர் மனோ தங்கராஜ் கன்னியாகுமரி மாவட்டத்தில் வெள்ளத்தில் சிக்கியுள்ளவர்கள் படகு மூலம் மீட்கப்பட்டு வரும் நிலையில், மீட்பு பணிகளை அமைச்சர் மனோ தங்கராஜ் துரிதப்படுத்தினார். கன்னியாகுமரி மாவட்டத்தில் பெய்து வரும் கனமழை காரணமாக பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகளில் இருந்து வினாடிக்கு 11 ஆயிரம் கன அடி உபநீர் திறந்து விடப் பட்டுள்ளது. இதனால் தாமிரபரணி மற்றும் பரளி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பல்வேறு கிராமங்களை வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. குறிப்பாக மாமுகம் பகுதியில் வெள்ளம் சூழ்ந்ததையடுத்து, இருபதுக்கு மேற்பட்ட வீடுகளில் உள்ளவர்கள் வெள்ளத்தில் சிக்கித்தவித்த மக்களை, படகு மூலம் தீயணைப்புத் துறையினர் மீட்டு, நிவாரண முகாம்களுக்கு அனுப்பி வைத்தனர். மீட்பு பணிகளை அமைச்சர் மனோ தங்கராஜ் நேரில் பார்வையிட்டு துரிதப்படுத்தினார்

### தூத்துக்குடி

கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கனிமொழி எம்.பி.ஆய்வுநிவாரண பொருட்களை வழங்கிய கனிமொழி எம்.பி. மற்றும் அமைச்சர் கீதா ஜீவன் தூத்துக்குடியில் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, மக்களவை திமுக குழு துணைத்தலைவர் கனிமொழி நேரில் பார்வையிட்டு நிவாரண உதவிகளை வழங்கினார்.

இடைவிடாது கொட்டித்தீர்த்த கனமழையால், தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் தேங்கி உள்ளது. இந்த நிலையில் அத்தொகுதி எம்.பியும், மக்களவை திமுக குழு துணைத்தலைவருமான கனிமொழி மற்றும் அமைச்சர் கீதா ஜீவன் ஆகியோர் பேருந்தில் சென்று மழை நீர் தேங்கியுள்ள பகுதிகளை நேரில் பார்வையிட்டனர். பின்னர் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணப் பொருட்களை வழங்கினர்.

### சாத்தான்குளம்

தூத்துக்குடி மாவட்டத்தில் தொடர் கனமழை பெய்து வரும் நிலையில், 100க்கும் மேற்பட்டோர் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை, மீன்வளம் மீனவர்நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் நேரில் பார்வையிட்டு, ரொட்டி, பால் பிஸ்கட், இரவு உணவு, பாய், போர்வை உள்ளிட்டவற்றை வழங்கினார். ஜேசிபி வாகனத்தில் ஏறிச் சென்று மழை நீர் சூழ்ந்துள்ள பகுதிகளை பார்வையிட்டார். மேலும், சாத்தான்குளம் பேருந்து நிலையத்திலிருந்து சொந்த ஊருக்கு செல்ல முடியாமல் தவித்த பயணிகளுக்கு 2 சிறப்பு பேருந்து ஏற்பாடு செய்து அனுப்பி வைத்தார்.



கும்மிடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றியம் ஆரம்பாக்கம் நொச்சிக்குப்பம், பாட்டைகுப்பம், வெங்கடேச பெருமாள் நகர் பெத்தியனா குப்பம், ஜீவா நகரில் ஆகிய பகுதிகளில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட 1600 குடும்பங்களுக்கு அரிசி மற்றும் அத்தியாவசிய பொருட்களை மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார். உடன் மு.மணிபாலன், பா.செ.குணசேகரன், ஆரம்பாக்கம் கே.ஆறுமுகம், மாணவரணி டி.ஜெ.ஜி.தமிழரசன், பரத்குமார், அ.மனோகரன், திருஞானம், உதய கந்தம்மாள், கே.சி.ராஜா, கஜேந்திரன், அங்கமுத்து, செல்வம் சேகர் ரவி, அப்பாஸ், பெருமாள்தேசப்பன், தனசேகர், மஸ்தான், ஏழுமலை, ஜெ.சேகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களுக்கு இணையாக

# கிராமப்புறங்களிலும் உயர்தர மருத்துவ சிகிச்சை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

சேலம், டிச. 19-

சேலம் மாவட்டம், காரிப்பட்டி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் நேற்று (18.12.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையில் ரூ. 4 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 11 கட்டடங்களைத் திறந்து வைத்துப் பேசியதாவது:

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, காரிப்பட்டி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் வட்டார பொது சுகாதார ஆய்வகக் கட்டடங்கள் பொது மக்கள் பயன்பாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டன. இதில் 62 வகையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், இங்கு சேகரிக்கப்படும் மாதிரிகளின் முடிவுகளை எப்பொழுது வேண்டுமானாலும் அறிந்து கொள்ளும் வகையில் பதிவு செய்து கண்காணிக்கப்படுகிறது.

மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களான இளம்பிள்ளை, காரிப்பட்டி மற்றும் பேளூரில் தலா ரூ. 50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார ஆய்வகக் கட்டடங்கள் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டன. மேலும், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கண்டர் குலமாணிக்கம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பண்ணப்பட்டி, நங்கவள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட கோட்டமேடு, வாழப்பாடி ஒன்றியத்திற்குட்பட்ட கண்கட்டி ஆலா மற்றும் புழுதிக்குட்டை ஆகிய பகுதிகளில் தலா ரூ. 30 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்களும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும், வீரபாண்டி ஒன்றியத்திற்குட்பட்ட பெருமாகவுண்டம்பட்டி மற்றும் பெத்தநாயக்கன் பாளையம் ஒன்றியத்திற்குட்பட்ட சின்னம சமுத்திரம் ஆகிய பகுதிகளில் தலா ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்களும், தாரமங்கலம் வட்டார அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் எம்.எஸ்.பி. கன்ஸ்ட்ரக்கன்ஸ் நிறுவனத்தின் பொது நிறுவன சமூக பொறுப்புகள் நிதியிலிருந்து ரூ. 60 இலட்சம் மதிப்பீட்டில் பிரசவ கால கவனிப்பு ஸ்கேன் அறையும் என மொத்தம் ரூ. 4 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 11 மருத்துவக் கட்டடங்கள் இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் மாநில அளவிலான 2 திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. முதலமைச்சர் அவர்கள் கடந்த 29.09.2021 அன்று வாழப்பாடியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் ஏழை எளியோர் வாழும் இடத்திலேயே சிறப்பு மருத்துவச் சேவை அளிக்கும் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டுக்கும் 1,250 சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, இதுவரை 30 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இம்முகாமின் மூலம் பயன்பெற்றுள்ளனர்.

அதேபோன்று, கடந்த 10.07.2023 அன்று காடையாம்பட்டி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக “சிறுநீரகம் காக்கும் சீர்மிகு மருத்துவத் திட்டம்” தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், 22.35 இலட்சம் நபர்களுக்கு அரசு துணை சுகாதார நிலையங்கள் மூலமும், 5.36 இலட்சம் நபர்களுக்கு துணை சுகாதார நிலையம் மூலமும் என மொத்தம் இதுவரை கடந்த 5 மாதங்களில் 27.71 இலட்சம் நபர்களுக்கு சிறுநீரக பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் செயல்படுத்தப்படுகின்றது.

நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனைகளுக்கு நேரடியாகச் சென்று மட்டுமே மருத்துவ ஆலோசனைகள் மற்றும் சிகிச்சைகளை எடுத்துக் கொள்ள முடியும். ஆனால் தமிழ்நாட்டில் மட்டுமே அரசின் மருத்துவச் சேவைகள் பொதுமக்களின் இல்லங்களுக்கேச் சென்று வழங்கப்படுகிறது. அந்தவகையில், மக்களைத் தேடி மருத்துவம் உள்ளிட்ட தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பல்வேறு மருத்துவச் சேவைகள் உலகில் வேறெங்கும் வழங்கப்படுவதில்லை. மேலும், தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களுக்கு இணையாக கிராமப்புறங்களிலும் உயர்தர மருத்துவச் சிகிச்சைகள் கிடைப்பதை உறுதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் செ. கார்மேகம், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன், முன்னாள் அமைச்சர் டி. எம். செல்வகணபதி, அயோத்தியாப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி ஹேமலதா விஜயகுமார், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. இரா. மணி, துணை இயக்குநர்கள் (சுகாதாரப் பணிகள்) மரு.ச. சௌண்டம்மாள், மரு.என். யோகானந்த், உட்பட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

சிறு தானியங்களின் பயன்பாட்டை அதிகரிக்க,

# புத்தாக்க நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிக்க அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா?

## மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, டிச. 19 -


திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் 12டிசம்பர்2023 அன்று மக்களவையில், சிறுதானியங்களின் பயன்பாட்டை அதிகரிக்கவும் புத்தாக்க நிறுவனங்களுக்கு நிதியுதவியை பெருக்கவும் ஒன்றிய அரசினால் ஏதேனும் முன் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளனவா? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் விவசாயத் துறை அமைச்சர் அர்ஜுன் முண்டாவிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் விவசாயத்துறை அமைச்சர் அளித்த பதில் பின்வருமாறு:

உணவுத் துறையின் வளர்ச்சிக்கு வேளாண் புத்தாக்க நிறுவனங்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்றும் சிறுதானியங்களின் மதிப்பு அதிகரித்து வரும் இந்த கால கட்டத்தில், அவற்றினால் தயாரிக்கப்படும் உணவு வகைகள் அனைத்தும், சிறுதானியங்களின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வருகின்றது என்றும் அமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.

மேலும், வேளாண் புத்தாக்க நிறுவனங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் ஒன்றிய அரசின் விவசாயத்துறை அளித்து வருகிறது என்றும், குறிப்பாக வேளாண் துறையில் ஈடுபட்டுள்ள தொழில் முனைவோர்களுக்கு ராஷ்டிரிய கிரிஷி விகாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் பல்வேறு பயிற்சி வகுப்புகளின் வழியாகவும், தொழில் நுட்ப உதவிகளின் மூலம் ஒன்றிய அரசு உதவி அளித்து வருகின்றது என்றும், இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலமும், ஐதராபாத்தில் உள்ள சிறுதானியங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலமும்,135 புத்தாக்க நிறுவனங்களுக்கும் 10 கோடி ரூபாய்க்கு மேல் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது என்று ஒன்றிய அரசின் விவசாயத் துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா மக்களவையில் தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

# கலைஞரின் காலச் சுவடுகள் !



மொழி உரிமை காக்கும்
அறப்போர் முகத்தும்;
இன உணர்வுச் சூடேற்றும்
அறிவுப்போர் முகத்தும்;
சமூக நீதி காத்திடும்
கடமையாற்றும் களத்தும்;
மக்களாட்சிமாண்புறச்செய்யும்
சட்டமன்றக் களத்தும்;
கலை உலகில் மறுமலர்ச்சி மணம் பரப்பும் தடத்தும்;
இலக்கிய உலகில் தமிழ்ச் சுவை பெருக்கும் தடத்தும்;
கலைஞரின் அறிவுத் திறன் படைத்த சாதனை
பலபல !



- பேராசிரியர்



திருநெல்வேலி மாவட்டத்தில் கனமழை காரணமாக தண்ணீர் சூழ்ந்துள்ள பகுதிகளில் முழு வீச்சில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனால் பாதிக்கப்பட்டுள்ள நெல்லை வண்ணாரப்பேட்டை மணிமூர்த்தி நகர் மக்கள், தச்சநல்லூரில் இருக்கும் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சந்தித்து அரிசி, போர்வை உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார்.





ஒரே நாளில் கொட்டித்தீர்த்த கன மழையால் திருநெல்வேலி உள்ளிட்ட தென் மாவட்டங்களில் கடுமையான சூழல் நிலவுகிறது. நெல்லை மாநகரம் உட்பட மழை நீர் சூழ்ந்துள்ள மாவட்டத்தின் பிற பகுதிகளின் தற்போதைய நிலையை அறியும் வண்ணம், நெல்லை மாநகராட்சி அலுவலகத்தில் அமைச்சர்கள் – அரசு உயர் அதிகாரிகள் – அலுவலர்களுடனான ஆலோசனைக்கூட்டத்தில் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்றார். மக்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களை வழங்குவது – பால் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வது – தற்காலிக முகாம்களில் உள்ள மக்களுக்கு உதவுவது – மீட்பு படை வீரர்களை எந்நேரமும் தயார் நிலையில் வைத்திருப்பது – போக்குவரத்திற்கான வசதிகளை ஏற்படுத்துவது என பல்வேறு அம்சங்களை இந்தக்கூட்டத்தின் வாயிலாக வலியுறுத்தினார். மேலும், நெல்லையில் நடைபெற்று வரும் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகள் குறித்து பத்திரிகையாளர்களிடம் விளக்கினார்.

### புகைக் குண்டு வீச்சு பற்றி விளக்கம் அளிக்கக் கோரியதால்

# நாடாளுமன்றத்தில் டி.ஆர்.பாலு உள்பட 80 எம்.பி.க்கள் சஸ்பெண்ட்!

### மசோதாக்களை நிறைவேற்றவே எதிர்க்கட்சி எம்.பி.க்கள் நீக்கம் - டி.ஆர்.பாலு குற்றச்சாட்டு!



புதுடெல்லி, டிச.19-

நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு குளறுபடி குறித்து கேள்வி எழுப்பிய காங்கிரஸ், தி.மு.க., திரிணாமுல் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளை சேர்ந்த மொத்தம் 80 எம்.பி.க்கள் ஒரே நாளில் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். தங்களது மசோதாக்களை நிறைவேற்றப் படவே எதிர்க்கட்சி எம்.பி.க்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளதாக கழக நாடாளுமன்றக் குழுத்தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் குறிப்பிட்டார்.

புகை குண்டுவீச்சு சம்பவம் குறித்து ஒன்றிய அரசு விளக்கம் அளிக்கக் கோரி எதிர்கட்சியினர் தொடர் முழக்கமிட்டதால் நாடாளுமன்றம் நேற்றும் முடங்கியது. கடந்த 13 ஆம் தேதி அன்று நாடாளுமன்றத்தில் நிகழ்ந்த புகை குண்டு வீச்சு சம்பவம் குறித்து ஒன்றிய அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என மக்களவையில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தினர்.

14 உறுப்பினர்களின் சஸ்பெண்டை ரத்து செய்ய வேண்டும் என்றும், நாடாளுமன்ற பாதுகாப்பு குறித்து அவையை ஒத்திவைத்துவிட்டு விவாதம் நடத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். இதற்கு சபாநாயகர் அனுமதி மறுத்தார்.

பின்னர் மக்களவை பகல் 12 மணி வரையிலும் பின்னர், 2 மணி, 3 மணி என மூன்று முறை ஒத்தி வைக்கப்பட்டது.

ஒத்திவைக்கப்பட்ட அவை பிற்பகல் மூன்று மணிக்கு கூடியதும், நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர், மேலும் திமுக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பிக்களை சஸ்பெண்ட் செய்ய கோரும் தீர்மானத்தை முன்மொழிந்தார்.

இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, நாடாளுமன்றதிமுககுழுத்தலைவர் டி.ஆர்.பாலு, திமுக எம்.பி.க்கள் ஆ.ராசா, எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, தமிழச்சி தங்கபாண்டியன், சி என் அண்ணாதுரை, ஜி செல்வம் மற்றும் காங்கிரஸ் கட்சியின் ஆதிர்ரஞ்சன் சவுத்ரி திருநாவுக்கரசர் உள்ளிட்ட 33 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டதாக சபாநாயகர் அறிவித்தார்.

இவர்களில் 30 எம்.பி.க்கள் கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்யப்பட்டதாகவும் மீதமுள்ள 3 பேர், நாடாளுமன்ற கண்காணிப்பு குழு அறிக்கை சமர்ப்பிக்கும் வரை சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் அறிவித்துள்ளார். இதைத்தொடர்ந்து மக்களவை ஒத்திவைக்கப்பட்டது

இதேபோல் மாநிலங்களவையிலும் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் 47 பேர் கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர். புகை குண்டுவீச்சு சம்பவம் குறித்து ஒன்றிய அரசு விளக்கம் அளிக்கக் கோரி எதிர்கட்சி உறுப்பினர்கள் முழக்கமிட்டதால் அவை அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டது.

மாலை நான்கரை மணிக்கு அவை மீண்டும் கூடியதும், பாதுகாப்பு குளறுபடி குறித்து ஒன்றிய பாஜக அரசு விளக்கம் அளிக்க கோரி எதிர்க்கட்சி எம்.பிக்கள் முழக்கமிட்டனர்.

இதனால் காங்கிரஸ் கட்சியின் பிரமோத் திவாரி, கே.சி.வேணுகோபால், ஜெய்ராம் ரமேஷ் மற்றும் ராஷ்ட்ரீய ஜனதா தள கட்சியின் மனோஜ் ஜா உள்ளிட்ட 36 பேர் கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளதாக, குரல் வாக்கெடுப்பு மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனையடுத்து 36 பேர் கூட்டத்தொடர் முழுவதும் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளதாகவும், 11 பேர், நாடாளுமன்ற கண்காணிப்பு குழு, அறிக்கை அளிக்கும் வரை சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளதாக அவைத்தலைவர் அறிவித்தார்.

#### நாடாளுமன்ற தி.மு.க. குழுத்தலைவர் டி.ஆர்.பாலு புகார்!

இதனையொட்டி செய்தியாளர்களிடம் பேசிய தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவர் டி.ஆர். பாலு நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு குளறுபடி குறித்து எதிர்க்கட்சி எம்பிக்கள் கேள்வி எழுப்பியதாகவும், இதனால் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார். 3 மாநில தேர்தல் வெற்றிக்குப் பிறகு பாஜக ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் மிகவும் மோசமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் - மின் நுகர்வோர்

# மின் கட்டணத்தை அபராதத் தொகை இல்லாமல் செலுத்த கால நீட்டிப்பு!

### நிதி - மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!



நெல்லை, டிச.19-

**திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மின் நுகர்வோர்கள் மின்கட்டணத்தை அபராதத் தொகை இல்லாமல் செலுத்த காலநீட்டிப்பு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவித்துள்ளார்.**

கடந்த சில தினங்களாக திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் பெய்த கன மழை மற்றும் அதிகனமழையின் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகளை தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அரசு பல்வேறு மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் கடந்த 2 தினங்களாக மேற்கண்ட மாவட்டங்களைச் சேர்ந்த மின் நுகர்வோர்களுக்கு மின் கட்டணம் செலுத்துவதில் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி மின்நுகர்வோர்கள் தங்களது மின்கட்டணத்தை அபராதத் தொகை இல்லாமல் செலுத்த கீழ்க்கண்டவாறு காலநீட்டிப்பு அளிக்கப்பட்டுள்ளதாக நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

இது குறித்து, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது :-

மின் உபயோகிப்பாளர்களின், மின்கட்டணம் செலுத்தும் கடைசி நாள் 18.12.2023 முதல் 30.12.2023 வரை இருந்த நிலையில், மேற்காணும் சூழலின் காரணமாக அபராதத் தொகை இல்லாமல் 02.01.2024 அன்று வரை மின் உபயோகிப்பாளர்கள் மின்கட்டணம் செலுத்த காலநீட்டிப்பு வழங்கப்படுகிறது.

ஏற்கனவே, மேற்படி மின் உபயோகிப்பாளர்கள் மின்கட்டணத்துடன் 18.12.2023 அன்று அபராதத் தொகை செலுத்தி இருப்பின், அந்த அபராதத் தொகை அடுத்து வரும் மாத மின்கட்டணத் தொகையில் சரிக்கட்டப்படும்.

இந்த காலநீட்டிப்பு வீடு, வணிக பயன்பாடு, தொழிற் சாலைகள், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் மற்றும் பிற மின்நுகர்வோர்கள் அனைவருக்கும் பொருந்தும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

# தென்மாவட்டங்களில் மழை, வெள்ள மீட்புப் பணியில் ராணுவம்!

### அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் அறிக்கை!



சென்னை, டிச.19-

அதிகனமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் தென் மாவட்டங்களில் நடக்கும் மீட்புப் பணிகளில் ராணுவம் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளது. தென் மாவட்டங்களில் அதி கனமழை பொழிவு, போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பது குறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் விரிவான அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:

“வளி மண்டல மேலடுக்குச் சுழற்சி காரணமாக திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களில் அதி கனமழை பெய்யக்கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் (டிச. 17) காலை முதல் திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களில் பரவலாக கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஒரு மணி நேரத்தில், பல பகுதிகளில் அதி கனமழை பதிவாகியுள்ளது. கனமழை எச்சரிக்கையினைத் தொடர்ந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளுக்காக பேரிடர் மீட்புப் படை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், தேசிய பேரிடர் மீட்புப் படையின் 2 குழுக்கள் மீட்பு நடவடிக்கைகளுக்காக வர உள்ளன.

இதுமட்டுமின்றி, இந்திய ராணுவம் மற்றும் கடலோர பாதுகாப்பு படையினரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதிப்புக்குள்ளாகக் கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பொதுவான எச்சரிக்கை நடைமுறை மூலம் மூலம் 62.72 லட்சம் நபர்களுக்கு எச்சரிக்கை குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டுள்ளன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, பாதிப்பிற்குள்ளாகக்கூடிய பகுதிகளில் இருந்து பொதுமக்கள் முன்கூட்டியே நிவாரண முகாம்களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாநில அவசர கால செயல்பாட்டு மையத்திற்கு வரப்பெற்ற 13 புகார்கள் உரிய மேல்நடவடிக்கைக்காக தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அரசு பேருந்துகள் முக்கியத் தடங்களிலும் அவசர கால உதவிக்காகவும் சம்பந்தப்பட்ட மாவட்ட நிருவாகங்களின் உத்தரவுப்படி இயக்கப்படுகின்றன. அமைச்சர்களும் கண்காணிப்பு அலுவலர்களும் முகாமிட்டு முன்னெச்சரிக்கை, மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் திருநெல்வேலி மாவட்டத்திற்கு விரைந்துள்ளார்.

கனமழையின் தாக்கத்தை எதிர்கொள்ள மாவட்ட நிர்வாகத்தால் அனைத்து விதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றி வருகின்றனர்”

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### தென் மாவட்டங்களில் கனமழை!

# பாதிக்கப்பட்ட மக்கள் ‘வாட்ஸ் அப்’ - ‘டிவிட்டர்’ மூலம் தெரிவிக்கலாம்!

### தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, டிச.19-

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் பெய்து வரும் கன மழை முதல் அதிகனமழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வாழும் பொதுமக்கள், தங்களுக்கு தேவையான உதவிகள் மற்றும் பாதிப்புகள் குறித்த விவரங்களை தமிழ்நாடு அரசின் “வாட்ஸ்அப்” எண் மற்றும் “டிவிட்டர்”-ல் பதிவுகளை தெரிவிக்கலாம் என தமிழ்நாடு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் பரவலாக அனைத்து பகுதிகளிலும் பெய்து வரும் கன மழை முதல் அதிகனமழை காரணமாக பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களை அரசு பரிவுடன் தீவிரமாகக் கண்காணித்து வருகிறது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசித்துவரும் பொதுமக்களின் நலன் கருதி, மக்களுக்குத் தேவைப்படும் உதவிகள் அனைத்தையும் உடனுக்குடன் வழங்கிட களத்தில் அதிகாரிகள் ஆயத்தமாக உள்ளனர். எனவே பாதிப்பிற்கு உள்ளாகியுள்ள பொது மக்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள், தேவைப்படும் நிவாரண உதவிகள், மருத்துவ உதவிகள், மீட்பு நடவடிக்கைகள், முதலான விவரங்களை சமூக வலைதளத்தின் (Social Media) மூலம் தமிழ்நாடு அரசின் வாட்ஸ்அப்எண் : 8148539914 மற்றும் “டிவிட்டர்” மூலமாக பதிவுகளை தெரிவிக்குமாறு பொது மக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வாட்ஸ்அப்எண் : 8148539914

டிவிட்டர் :
Username - @tn_rescuerelief, @tnsdma

Facebook id : @tnsdma

இவ்வாறு அரசு செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ”மக்களுடன் முதல்வர் திட்டத்தினை நேற்று (18.12.2023) தொடங்கி வைத்ததையொட்டி சேலம் மாவட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சேலம் மாநகராட்சி தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ”மக்களுடன் முதல்வர் திட்டத்தின்கீழ் நேற்று காலை பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடி தீர்வு கண்டு பயனாளிகளுக்கான சான்றிதழ்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன்,சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் சீ. பாலச்சந்தர், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு.அலர்மேல் மங்கை, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு169, பேர்ன்பேட்டை பகுதியில் கனமழை மற்றும் மிக்ஜாம் புயல் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட 250 நபர்களுக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நிவாரணப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வின் போது துணை மேயர் மு.மகேஷ் குமார் மா.அன்பரசன் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



புதுடெல்லி வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (18.12.2023) புதுடெல்லி விமான நிலையத்தில், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆ. ராசா, தயாநிதிமாறன், திருச்சி சிவா உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் ஆகியோர் மலர்க்கொத்து வழங்கி, சால்வை அணிவித்து வரவேற்றனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2023) புதுடெல்லியிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, தென் மாவட்டங்களில் பெய்து வரும் அதிகனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கா.ப. கார்த்திகேயன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி. லட்சுமிபதி, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் பி.என். ஸ்ரீதர், மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் துரை. ரவிச்சந்திரன், ஆகியோருடன் ஆலோசனை மேற்கொண்டார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில், தலைமைச் செயலகத்திலிருந்து தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், பொதுத்துறைச் செயலாளர் க. நந்தகுமார், ஆகியோரும், காணொலிக் காட்சி வாயிலாக வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே. பிரபாகர், மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

### தென் மாவட்டங்களில் அதி கனமழை : பெரும் பாதிப்புகள்!

# வேகத்தோடு செயல்பட்டு இந்தப் பேரிடரை வென்றிட வேண்டும்!

## புதுடெல்லியிலிருந்து காணொலிக் காட்சி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தல்!

புதுடெல்லி, டிச.19–

**தென் மாவட்டங்களில் பெய்து வரும் அதிகனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து அமைச்சர் பெருமக்கள், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோருடன் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2023) புதுடெல்லியிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, தென் மாவட்டங்களில் பெய்து வரும் அதி கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்தும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.கா.ப. கார்த்திகேயன், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் ஜி. லட்சுமிபதி, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பி.என். ஸ்ரீதர், மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் துரை. ரவிச்சந்திரன், ஆகியோருடன் ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தின் போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், போர்க்கால அடிப்படையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்புடன் முகாம்களில் தங்க வைக்கப்பட வேண்டும் என்றும், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான அனைத்து அத்தியாவசிப் பொருட்களும் தங்குதடையின்றி வழங்கப்பட வேண்டும் என்றும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிட்டார்.

### புதுடெல்லியிலிருந்து முதல்வர் காணொலி உரை!

இந்த ஆலோசனைக் கூட்டத்தின் போது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களில் வெள்ள நிவாரண பணிகளில் ஈடுபட்டுள்ள அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் காவல்துறை அலுவலர்களுக்கு என் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

வரலாறு காணாத இந்த வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை உடனடியாக மீட்டு, நிவாரண உதவிகளை மிகக்குறுகிய காலத்திற்குள் வழங்கிட வேண்டிய சவாலான சூழலில் நாம் இப்பொழுது உள்ளோம்.

தற்போது மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள அணைகளில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டு இருந்தாலும், இந்த இரண்டு நாட்களில் பெய்த பெருவெள்ளம் இன்னும் வடியாமல், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் பல பகுதிகளில் இன்னும் வெள்ளநீரில் மக்கள் சிக்கி உள்ளார்கள்.

இவர்களை உடனடியாக மீட்டெடுத்து உயிரிழப்புகளை தடுக்க வேண்டியது தான் நம் முன் தற்போது இருக்கக்கூடிய தலையாய கடமை. இந்தப் மீட்புப்பணிகளில் இராணுவம், NDRF, SDRF ஆகியவற்றோடு இணைந்து, காவல்துறையும், தீயணைப்பு துறையும், வருவாய்த்துறையும் தொடர்ந்து களப்பணி ஆற்ற வேண்டும்.

பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து மக்களை வெளியேற்றி, முகாம்களில் தங்க வைத்திருந்தாலும், இன்னும் பல பகுதிகளில் சிக்கியுள்ள மக்களை உடனடியாக வெளியேற்றி முகாம்களில் தங்க வைக்க வேண்டும். இதற்கு தேவைப்படும் அனைத்து இடங்களிலும் கூடுதலாக புதிய முகாம்களை அமைத்திட வேண்டும். தற்போது முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான உணவு, உடைகள், போர்வைகள் போன்ற பொருட்களை உடனடியாக வழங்கிட வேண்டும்.

### நிவாரணப் பொருட்களை விரைந்து வழங்குக!

இந்த நிவாரணப் பொருட்களை பக்கத்து மாவட்டங்களில் பெற்று தேவைப்படும் இடங்களுக்கு சரியான நேரத்திற்கு கொண்டு சேர்க்க வேண்டிய பணிகளையும் ஒருங்கிணைத்து செயலாற்ற வேண்டும். நாம் அனைவரும் இணைந்து செயலாற்றி மக்களின் உயிர்களை காப்பாற்றி, அவர்கள் அரசின் மீது வைத்துள்ள நம்பிக்கையை நிலைநாட்டிட வேண்டியது சவாலான நேரமாக இது அமைந்திருக்கிறது.

சென்னையிலும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது நாம் அனைவரும் செயல்பட்ட அதே வேகத்தோடும், ஒருங்கிணைப்போடும் செயல்பட்டு, இந்த பேரிடரையும் நாம் வென்றிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்தப் பணியிலே ஈடுபட்டுள்ள அனைவருக்கும் எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், நன்றி, வணக்கம்.

### முகாம்களிலுள்ள மக்களுக்கு முதல்வர் உறுதி!

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திருநெல்வேலி மாவட்டத்தில் முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்களிடம் அவர்களுக்கு செய்து கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், பாதிப்புகளின் விவரங்கள் குறித்தும் கேட்டறிந்தார். மேலும், அரசு உங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தரும் என்று தெரிவித்தார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், தலைமைச் செயலகத்திலிருந்து தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், இ.கா.ப., பொதுத் துறை செயலாளர் க. நந்தகுமார், ஆகியோரும், காணொலிக் காட்சி வாயிலாக வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கே. பிரபாகர், மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று (18.12.2023) விருதுநகர் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகையில், விருதுநகர் மாவட்டத்திலும் அதிகனமழைக்கு வாய்ப்புள்ளதாக "ரெட் அலர்ட் விடுக்கப்பட்டுள்ள நிலையில், அனைத்து வகையிலும் எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்திடும் வகையில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாசப் பெருமாள் ஆகியோருடன் கலந்தாலோசித்து ஆய்வு மேற்கொண்டார்.

### நெல்லையில் கனமழை!

# கோவை சூலூர் - ராமநாதபுரத்தில் இருந்து ஹெலிகாப்டர் வரவழைப்பு!

## அமைச்சர் தங்கம் தென்னரசு தகவல்!

நெல்லை, டிச.19-

நெல்லைக்கு கோவை சூலூர், ராமநாதபுரத்தில் இருந்து ஹெலிகாப்டர் வரவழைக்கப்பட உள்ளது என நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

நெல்லையில் அமைச்சர் தங்கம் தென்னரசு மாநகராட்சி அலுவலகத்தில் வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

17ஆம் தேதி நேற்று முன்தினம் காலை 8.30 மணி முதல் நேற்று 18ஆம் தேதி காலை 630 மணி வரை திருநெல்வேலி மாவட்டத்தில் 39.12 செண்டிமீட்டர் மழை அளவு பதிவாகி உள்ளது. தூத்துக்குடியில் 37.96 செண்டிமீட்டர் மழை அளவு பதிவாகியுள்ளது. தென்காசி மாவட்டத்தில் 20.68 செண்டிமீட்டர் கன்னியாகுமரி 11.87 செண்டி மீட்டர் மழை அளவு பதிவாகி உள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தில் வரலாறு காணாத வகையில் சரித்திர நிகழ்வாக 94 .6 செண்டிமீட்டர் மழை பொழிந்து இருக்கிறது அருகில் திருச்செந்தூரில் 66 செண்டிமீட்டர் திருவைகுண்டத்தில் 62 செண்டிமீட்டரும், கோவில்பட்டியில் 52 செண்டிமீட்டர் மழை பெய்திருக்கிறது. குறிப்பாக நெல்லையிலே மூளைக்கரைப்பட்டியில் 61.5 செண்டி மீட்டர் மழை பெய்திருக்கிறது. கனமழை எச்சரிக்கைகளை தொடர்ந்து மீட்பு மற்றும் நிவாரண பணிகளுக்காக பேரிடர் மீட்புப்படை வரவழைக்கப் பட்டுள்ளது.அந்த வகையில் திருநெல்வேலிக்கு தமிழ்நாடு பேரிடர் மீட்பு படையினர் சார்பில் 150 வீரர்கள் 6 குழுக்கள் ஆகவும், தேசிய பேரிடர் மீட்பு படையினர் 100 வீரர்கள் 4 குழுக்கள் ஆகவும்,மொத்தம் 250 வீரர்கள் 10 குழுக்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

கோவை சூலூர், ராமநாதபுரத்தில் இருந்து ஹெலிகாப்டர் வரவழைக்கப் பட்டுள்ளது. இந்திய ராணுவத்திற்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதிப்புக்கு உள்ளாக கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பொதுவான எச்சரிக்கை நடைமுறை மூலம் 62.72 லட்சம் நபர்களுக்கு எச்சரிக்கை குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டுள்ளன.திருநெல்வேலி மாவட்டத்தில் 35 படகுகள் மூலம் மீட்பு பணிகள் ஈடுபடுத்தப்படுகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் 19 படகுகளும்,தூத்துக்குடி மாவட்டத்தில் 24 படகுகளிலும், தென்காசி மாவட்டத்தில் 6 படகுகளிலும் மொத்தம் 84 படகுகள் மூலம் நான்கு மாவட்டங்களிலும் மீட்பு பணியில் படகுகள் ஈடுபட வரவழைக்கப் பட்டுள்ளது. மழை குறைந்து விட்டது என எண்ண வேண்டாம். இன்னும் 12 மணி நேரத்திற்கு மழை இருக்கும். மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் அப்துல்வகாப், மாநகராட்சி உறுப்பினர்கள்,ஒன்றிய குழு தலைவர்கள்,உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவரும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்களை தொடர்ந்து வழங்கி வருகின்றனர்.

இந்த அதி கனமழையை தொடர்ந்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அதேபோல் வெள்ள மீட்பு நடவடிக்கை களை அதற்காக உடனடியாக செயல்படுத்தவும் நேற்று என்னை உடனடியாக இங்கே அனுப்பி வைத்து இந்த வெள்ள நிவாரண பணிகளை மேற்பார்வையிட சொல்லி இருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல், நம்முடைய கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் மாநில நிர்வாக ஆணையர் அவர்களையும் உடனடியாக முதலமைச்சர் அவர்கள் இங்கே அனுப்பி அவர்களுடைய தலைமையில் அவர்களுடைய உயர் அதிகாரிகள் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நெல்லை மாவட்டத்தில் கனமழை காரணமாக இது வரை இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

அப்போது அரசு செயலாளர்தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை டாக்டர் இரா. செல்வராஜ்,கூடுதல் வருவாய் நிர்வாக ஆணையர் கோ.பிரகாஷ், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான், ஞானதிரவியம் எம்.பி.,மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. மேயர் சரவணன், துணை மேயர் ராஜ், ஒன்றிய குழு தலைவர் தங்கபாண்டியன் உள்பட அரசு அலுவலர்கள், கழகத்தினர் பலர் இருந்தனர்.

### மழை வெள்ள நீரை அகற்றுவதில்

# முன்னுதாரணமான தமிழ்நாடு அரசு!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, டிச. 19-

தமிழ்நாட்டில் சென்ற டிசம்பர் 3 மற்றும் 4 ஆகிய தேதிகளில் கனமழை மற்றும் புயல் காரணமாக சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்தது. தமிழக அரசின் உடனடி நடவடிக்கையால் மழை நீர் உடனடியாக அகற்றப்பட்டது. இதேபோல் இரண்டு நாட்களாக நெல்லை, தூத்துக்குடி போன்ற பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது. இதனையும் தமிழக அரசு முன்னெச்சரிக்கையுடன் எதிர்கொள்ளும் என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறியுள்ளது



தினகரன்

டிசம்பர் 18, 2023 திங்கட்கிழமை

முன்னுதாரண அரசு

பருவநிலை மாற்றம் காரணமாக, இயற்கை பேரிடரை உலகின் பல்வேறு நாடுகளும் சந்தித்து வருகின்றன. இந்தியாவிலும் இதன் பாதிப்பை மக்கள் சந்திப்பது தவிர்க்க முடியாததாகி வருகிறது. இதன் விளைவாக தமிழகத்தில் சென்னையை தொடர்ந்து, நெல்லை, தூத்துக்குடியில் கனமழை கொட்டித்தீர்த்துள்ளது. 31 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்பட்ட கனமழை இது. தென்காசி, குமரி மாவட்டத்திலும் விடிய விடிய மழை பெய்தது.

அது வருமாறு:-

பருவநிலை மாற்றம் காரணமாக, இயற்கை பேரிடரை உலகின் பல்வேறு நாடுகளும் சந்தித்து வருகின்றன. இந்தியாவிலும் இதன் பாதிப்பை மக்கள் சந்திப்பது தவிர்க்க முடியாததாகி வருகிறது. இதன் விளைவாக தமிழகத்தில் சென்னையை தொடர்ந்து, நெல்லை, தூத்துக்குடியில் கனமழை கொட்டித்தீர்த்துள்ளது. 31 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்பட்ட கனமழை இது. தென்காசி, குமரி மாவட்டத்திலும் விடிய விடிய மழை பெய்தது. இதனால் சாலைகள், வீடுகளில் வெள்ளம் புகுந்தது. பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர். நெல்லை மாநகரின் தாழ்வான பகுதிகளில் வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது.

இதையடுத்து குடியிருப்பு வாசிகள் தீயணைப்புத்துறையினர், போலீசார் உதவியுடன் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இதேபோல் தென்காசி, தூத்துக்குடி மாவட்டத்திலும் கன மழை கொட்டி தீர்த்தது. இதனால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. நெல்லை மாவட்டத்தில் நேற்று பெரும்பாலான பகுதிகளில் 20 செ.மீக்கும் அதிகமாக மழை பெய்துள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் இதுநாள் வரை 20.1 செ.மீ மட்டுமே மழை அளவு பதிவாகி இருந்தது. ஆனால் நேற்று சாத்தான்குளத்தில் அதிகபட்சமாக 25.8 செ.மீ மழை பெய்து அப்பகுதியை வெள்ளக்காடாக்கியது. மலை பகுதிகளில் உள்ள அருவிகள் அனைத்தும் வெள்ளப் பெருக்கால் மூழ்கியது.

இதுபோல் நாகர்கோவில் மாநகர பகுதியில் பெய்த கன மழை காரணமாக சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இந்திய வானிலை ஆய்வு மையத்தின் கனமழை எச்சரிக்கையை தொடர்ந்து, நெல்லை, தென்காசி, தூத்துக்குடி, குமரி ஆகிய மாவட்டங்களில் மக்களுக்கு தேவையான உதவிகளை செய்யவும், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். முன்னெச்சரிக்கை மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள அமைச்சர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் பல்வேறு துறை உயர் அலுவலர்களுடன் காணொலி வாயிலாக ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, அதி கனமழையினை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், அந்த 4 மாவட்டங்களில் மழை வெள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்காகவும், பொது மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லவும், மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்தவும், மழை நீர் விரைவில் வடிவதை உறுதி செய்யவும், அனைத்துத் துறைகளின் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காகவும் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் கண்காணிப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிவாரண முகாம்களை தயார் நிலையில் வைப்பது, பாதிப்புக்கு ஆளாகக் கூடிய பகுதிகளில் இருந்து மக்களை முன்கூட்டியே வெளியேற்றி நிவாரண முகாம்களில் தங்க வைப்பது, உணவு, பாதுகாப்பான குடிநீர், குழந்தைகளுக்கு தேவையான பால் மற்றும் மருத்துவ வசதிகள் செய்து தருவது, பாதிப்பிற்குள்ளாகக் கூடிய பகுதிகளில் பல்துறை மண்டலக் குழுக்களையும், போதுமான படகுகளையும் நிலைநிறுத்துவது என எந்த வகையிலெல்லாம் பாதிப்பை தடுத்து மக்களை காப்பாற்ற முடியுமோ அந்த வகையிலெல்லாம் அரசு திட்டமிட்டு செயல்பட்டுள்ளது. இயற்கை பேரிடர்கள் தவிர்க்க முடியாதது என்றாலும், இதனை எதிர்கொள்ள அரசு எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமாக, உடனடி நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்திருக்கிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



மாதவரம் சட்டமன்றத் தொகுதி 17வது வட்ட தூய்மை பணியாளர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு முன்னாள் மாமன்ற உறுப்பினர் என். கவிதா நாராயணன் ஏற்பாட்டில் அறுசுவை உணவு மற்றும் நிவாரண பொருட்களை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார். வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் சி. மூர்த்தி, சீ. பாலாஜி வி. பார்த்தசாரதி, எஸ். சிவகுமார், கே. சண்முக பிரியன், எம் கோவிந்தன்,எம். மைக்கேல், பி. செந்தில் ,கார்த்திக், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என் .அஜய் தென்னவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

# இனமான ஏந்தல் பேராசிரியர் வாழ்க!

"வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்" என்ற வள்ளுவரின் வாக்குக்கு ஏற்ப தனது வாழ்க்கை நெறியை தகவமைத்து வாழ்வாங்கு வாழ்ந்தவர் இனமானப் பேராசிரியர் அன்பழகன் ஆவார்.

குறளுக்கு பொருள்:

வாழும்போது கெட்ட பெயர் இல்லாமல் வாழ்பவர்களையே வாழ்பவர்கள் என்று சொல்ல முடியும். நல்ல பெயர் பெறாமல் வாழ்பவர்களை வாழ்பவர்கள் என்று சொல்ல முடியாது.



101 வது பிறந்தநாள் (1922-2023) கானும் இனமானப் பேராசிரியரின் நினைவு நாளில் அவரின் ஆடம்பரமற்ற எளிய பொதுவாழ்வும், தமிழ்ப் பற்று, தமிழர் பற்று, தமிழ்நாட்டுப்பற்று என்று நம்மிடையே குறிக்கோளுடன் வாழ்ந்த பேராசிரியரை, கழக இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் இளையோர் அறிந்து கொண்டு அவர் வழி நடந்து செல்ல முற்பட வேண்டும், அதற்கு முதற்கண் அவர் இயக்கத்துக்கு அளித்த பங்களிப்பை அறிதல் அவசியம்.

எந்த சூழலிலும் தம்மை முன்னிலைப்படுத்திக் கொள்ளாத தன்னடக்கம் கொண்டவர் இனமானப் பேராசிரியர் அவர்கள் ஆவார்.

தாம் பிறந்த வீட்டிற்கும், நாட்டிற்கும் பெருமை சேர்க்கும் வகையில் பேரறிஞர் அண்ணா வகுத்தளித்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு கோட்பாட்டின் படி இயக்கத் தொண்டாற்றியவர் இனமானப் பேராசிரியர் ஆவார்கள்.

இக்கொள்கைகளை கழகத்தவர் தங்களது உயிர் மூச்சாகக் கொள்ள வேண்டும் என்று வாழ்நாள் பூராவும் வலியுறுத்தியவர் பேராசிரியர் அவர்கள்.

கொள்கை, குறிக்கோளுக்கு உழைப்பதில் "கடமை" தவறாமை,

பொதுவெளியில், தத்தமது செயல்களில் "கண்ணியம்" இழக்காமை,

கழகக் குடும்பத்தில் பங்கேற்பதில் "கட்டுப்பாடு" மீறாமை,

கழகத் தோழர்க்கு இவையாவும் இயல்பாக வேண்டும் என்பது அவரது தீராத அவா.

நூற்றாண்டை கடந்த நீதிக்கட்சியின் மூலவர்களான டாக்டர் நடேசனார், வெள்ளுடை வேந்தரான சர் பிட்டி தியாகராயர், டாக்டர் டி.எம். நாயர் ஏனைய நீதிக்கட்சிகளின் முன்னோடிகள் போன்றோர்,

சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவித்த தந்தை பெரியார்,

தி.மு.க. என்ற அரசியல் இயக்கத்தை தோற்றுவித்த தென்னாட்டின் ஈடு இணையற்ற அரசியல் விஞ்ஞானி பேரறிஞர் அண்ணா ஆகியோரின் சமூகநீதிக் கொள்கை வென்றிட, சமதர்ம சமுதாயம் அமைந்திட, திராவிடர்க்கு எதிரான சக்திகளின் பிடியிலிருந்து தமிழர்களை மீட்டு, திராவிடர்களின் காவல் அரனாக திகழ தி.மு.க.வை தோற்றுவித்த ஆண்டு 1949. தற்சமயம் (2023) இயக்கத்தின் வயது 74 வயது, பவழ விழாவை நோக்கி நகர்கிறது இயக்கம்.

மேற்கூறிய தலைவர்கள் அனைவரின் வழிநின்று, முத்தமிழறிஞர் கலைஞரின் தோன்றாத் துணையாக விளங்கி திராவிட கருத்தியிலை துளிர வழி வகுத்து தருவாகுவதற்கு ஏற்ற கருத்து உரத்தினை நல்கியவர் இனமானப் பேராசிரியர்.

உலகம் பூராவும் பல, பல இயக்கங்கள் தோன்றுவதும், மறைவதை காண்கிறோம் நாம், ஆனால் இன்றளவும் கழகம் பொலிவுடன் திகழவதற்கு காரணம் அதன் கொள்கை கோட்பாடுகளும், தூய தொண்டர்களின் தொண்டறமேயாகும்.

1969ல் பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பின்னர் கலைஞரை இயற்கை நம்மிடமிருந்து பிரிக்கும் வரையில் நீண்ட நெடுங்காலமாக இயக்கத்தினை நிலைத்திட வைக்க முத்திரையோடு தியாகங்கள் பல புரிந்து, தன்னுடைய பன்முக ஆற்றலைக் கொண்டு இயக்கத் தொண்டாற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

தந்தை பெரியாரின் பாராட்டைப் பெற்று, பேரறிஞர் அண்ணாவின் நம்பிக்கைக்கு உகர்ந்தவராகி, அரசை நிர்வகித்த பொழுது ஏழைக்களுக்கான பல திட்டங்களை தீட்டி ஜெயப்பிரகாஷ் நாராயணனின் பாராட்டைப் பெற்று, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகம் முன்னேறுவதற்கான பணிகளைப் செய்து முடித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

கலைஞரை தனது தலைவராக வரித்து கொண்டவர் இனமானப் பேராசிரியர் அவர்கள்.

கழகம் என்னும் எஃகு கோட்டைக்கு ஏதேனும் ஊறு ஏற்பட்டால், காட்டை காக்கும் அரிமாவைப் போல கழகத்திற்கு ஊறு ஏற்படாமல் காத்தவர் இனமானப் பேராசிரியர். துரோக சிந்தனைகளுக்கு சிறிதும் இடங் கொடுக்காமல் கலைஞருக்கு தனது தோள் வலிமையை ஈந்தவர் இனமானப் பேராசிரியர்.

கழகத்தின் துணை அமைப்பாக கழக இளைஞர் அணி அமைய கலைஞரை ஊக்குவித்தவர் இனமானப் பேராசிரியர் அவர்கள்.

1980ல் மதுரை ஜான்சி ராணிப் பூங்காவில் இளைஞர் அணித் துவக்க விழாவில் அவர் ஆற்றிய உரை இன்றளவும் இளைஞர்கள் படித்து பயன்பெற வேண்டும்.

இன்றைய நம் தலைவரை 1980 ஆம் ஆண்டே கழகத்தை எதிர்காலத்தில் வழிநடத்த வல்லவராக தளபதி ஸ்டாலினை அடையாளங் கண்டு அவரை முன்னிறுத்தியவர் இனமானப் பேராசிரியர் ஆவார்கள்.

மூத்தோர் - இளையோரின் மீது வைக்கும் ஒப்பற்ற நம்பிக்கையை பிசிராந்தையரின் புறநானூற்று பாடலான "யான் கண்டனையர் என் இளையரும்" என்று கூறுவார்.

மூத்த தலைமுறையினர் தம் நாட்டின் வருங்காலம் எப்படி இருக்க வேண்டும் எனக் கனவு காண்பார்களோ, அந்த கனவை நிறைவேற்றும் தகுதிபெற்ற இளைஞர்கள் நிறைந்திருக்கும் நாடே,வலிமை மிக்கதாகத் திகழ முடியும் எனபதின் கருப்பொருளாகும் இப்பாடல். இதன் வழிநின்று தளபதியை இளைஞர் அணிச் செயலாளராக முன்னிறுத்தி, கழகப் பொருளாராக்கி, கலைஞர் நலிவுற்றிருந்த பொழுது தளபதியை கழகத்தின் செயல் தலைவராக, பின்னர் கழகத் தலைவராக்கி அழகுப் பார்த்தவர் இனமானப் பேராசிரியர்.

இன்றைய இளைஞர்கள், தந்தை பெரியாருடைய அடிப்படைக் கொள்கையான சுயசிந்தனை வழியிலே தம்மை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என்று என் நாளும் விழைந்தவர் ஆவார் நம் இனமானப் பேராசிரியர்.

குறிக்கோளில் துணிவுடையார்க்கு அச்சமில்லை! உலகை உணர்ந்தவர்களுக்குத் தோல்வி இல்லை! வெற்றி நமதே! என்ற எண்ணம் கொண்டு - நாட்டில் இளைஞர்கள் வலம் வருவீராக! என்று உரைத்தவர் இனமானப் பேராசிரியர்

"அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்" என்ற குறளுக்கு ஏற்ப துரோகிகளிடமிருந்தும், எதிரிகளிடமிருந்தும் நம்மை காக்க அறிவாயுதும் பயன்பட வேண்டும் என்ற குறளை அடிக்கடி மேற்கோள் காட்டியுள்ளார்.

குறளின் பொருள் :

அற்றுப்போவதிலிருந்து நம்மை காப்பாற்றும் ஆயுதம் அறிவுதான். பகைவர்களாலும் கூட அழிக்க முடியாத அக அரண் அது.

தற்சமயம் ஒன்றிய பாஜக அரசாங்கம், அரசியல் சட்டத்தில் உறுதி கூறப்பட்டுள்ள மதச்சார்பின்மை உரிமையினை பறித்து இந்துத்வா தத்துவத்தை நிலை நிறுத்தி மதங்களுக்கிடையே வேற்றுமையை வளர்த்து இந்தியாவின் பன்முகத்தன்மையை சிதைக்க ஒன்றிய அரசு உறுதிபூண்டுள்ளது.

ஒற்றை கலாச்சாரத்திற்கு வழி கோலுகிறது.

பாசிச எண்ணத்துடன் அரசை நடத்த முனைகிறது, இச்சூழலில் இருந்து மதச்சார்பின்மையை பாதுகாக்கவும், அரசியல் அமைப்பை சிதையாமல் காக்கவும், கூட்டாட்சி தத்துவத்தை நிலை நிறுத்தவும், எதிர்க்கட்சிகளிடையே வேற்றுமைகளை களைந்து, வாக்குகள் சிதறாமல் இருக்கும் வகையில் எதிர்கட்சிகளின் ஒற்றுமையை பேணவும், அரசியல் அமைப்பை காப்பற்ற முயலும் திராவிட மாடல் நாயகர் திரு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் கரத்தை இளைஞர்களும், கழக மூத்த முன்னோடிகளும் தியாக உணர்வுடன் வலுப்படுத்தி, எதிர் வரும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா கூட்டணியின் வெற்றிக்கு வழி காண வேண்டும்.

கொள்கை தங்கம் கழகத்தின் இன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இளஞ்சிங்கம் அமைச்சர் உதயநிதியின் சமரசமில்லா திராவிட இயக்க கொள்கை பிடிப்பை கண்டு உச்சி மோந்திருப்பார், இனமானப் பேராசிரியர்.

இளைஞர் அணிச் செயலாளரின் அரிய முயற்ச்சியால் வெல்க சேலத்தில் நடைபெறவுள்ள இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு வெல்ல நாம் அனைவரும் பாடுபட வேண்டும்.

இம்மாநாட்டை முன்னின்று நடத்தும் இளைஞர் அணிச்செயலாளர் மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டுத்துறை மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் முயல்வுகள் வெற்றி பெற வாழ்த்துவோம், பெருந்திராளக சங்கமிப்போம் சேலத்தில்.

எதிர் வரும் பாராளுமன்றத் தேர்தலில், நாடும் நமதே, நாற்பதும் நமதே என்று கழகத்தின் வெற்றிக் கூட்டணி வெல்ல உறுதியேற்போம்.

இவைகளே இனமானப் பேராசிரியருக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடனாக அமையும்.

வெல்க பேராசிரியரின் கொள்கைப் பற்று,

வாழ்க வெல்க திமுக.

வெல்க சேலத்தில் டிசம்பர் திங்கள் 24 ல் நடைபெறப் போகும் இளைஞர் அணி மாநாடு,

மனிதக்கடலை உருவாக்குவோம் சேலத்தில்.

**சி.சேரன்,**
பேராசிரியரின் முன்னாள் உதவியாளர்
பேராசிரியர் நற்றமிழ்த் தொண்டகம் செயலாளர்

அரசு அலுவலகங்களை நாடி மக்கள் செல்லும் நிலையை மாற்றி

# மக்களைத் தேடி அரசுத் துறைகள் செல்லும் நிலையை உருவாக்கியுள்ளார் நமது முதல்வர்!

## கடலூர் மாவட்டத்தில் 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தைத் துவக்கி வைத்து- அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் பேச்சு!

கடலூர், டிச. 19-

முதலமைச்சர் அவர்கள் மக்களுடன் முதல்வர் திட்டத்தை துவக்கி வைத்ததை தொடர்ந்து, கடலூர் மாவட்டம், கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாதிரிக்குப்பம் ஊராட்சி, கூத்தப்பாக்கம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், முன்னிலையில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மக்களுடன் முதல்வர் திட்டத்தை நேற்று துவக்கி வைத்தார்.

இதில் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது,

முதலமைச்சர் அவர்கள் பொது மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செம்மையாக செயல்படுத்தி வருகிறார். மகளிருக்கு இலவச பேருந்து பயணம் திட்டம், அரசு பள்ளியில் பயின்ற பெண் குழந்தைகள் உயர்கல்வி பயில ஏதுவாக புதுமைப் பெண் திட்டம், மக்களைதேடி மருத்துவம் திட்டம், அரசு பள்ளி மாணவர்களின் நலன் கருதி காலை உணவு வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 'மக்களுடன் முதல்வர்" என்ற சிறப்புத் திட்டத்தினை பொதுமக்கள் பயன்பெறும் வகையில் துவக்கிவைத்துள்ளார். அரசு அலுவலகங்களை நாடி மக்கள் செல்லும் நிலையை மாற்றி மக்களை தேடி அரசுத் துறைகள் சென்று முகாம்கள் நடத்தி அவர்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று உடனடியாக தீர்வு காணும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.



அதற்கிணங்க, கடலூர் மாவட்டத்தில், கடலூர் மாநகராட்சி, 6 நகராட்சிகள், 14 பேரூராட்சிகள் மற்றும் மாநகராட்சி ஒட்டிய 17 புறநகர் பகுதிகளில் நேற்று (18.12.2023) முதல் தொடங்கப்பட்டு 2024 ஜனவரி 5ஆம் தேதி வரை 60 முகாம்கள் நடைபெறவுள்ளது.

கடலூர் மாநகராட்சியில் 11 முகாம்களும், நெல்லிக்குப்பம் நகராட்சியில் 3 முகாம்களும், பண்ருட்டி நகராட்சியில் 5 முகாம்களும், சிதம்பரம் நகராட்சியில் 5 முகாம்களும், விருத்தாசலம் நகராட்சியில் 5 முகாம்களும், வடலூர் நகராட்சியில் 3 முகாம்களும், திட்டக்குடி நகராட்சியில் 3 முகாம்களும், பேரூராட்சிகளில் 14 முகாம்களும். மாநகராட்சி ஒட்டிய புறநகர் பகுதிகளில் 14 முகாம்களும் ஆக மொத்தம் 60 முகாம்கள் நடைபெறவுள்ளன.

பொதுமக்கள் தங்கள் பகுதியில் நடைபெறும் முகாமிற்கு சென்று கோரிக்கை மனுக்களை உரிய ஆவணங்களுடன் அளித்து பயன்பெறலாம். இம்முகாம்களில் எரிசக்தி துறை தமிழ்நாடு மின்சார வாரியம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழுங்கல் துறை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, காவல் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, ஆதிதிராவிடர் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, வாழ்வாதார கடன் உதவிகள் முதலான துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து மனுக்களை பெறுகின்றனர். இம்முகாம்களில் இசேவை வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இம்முகாம்களில் பெறப்படும் மனுக்களின் மீது சம்மந்தப்பட்ட துறைகளின் மூலம் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் முடித்திட அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திட்ட இயக்குநர் திருமதி இரா.சரண்யா, உதவி இயக்குநர் ஊராட்சிகள் திருமதி ஷபானா அஞ்சும் அவர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி சுதா, வீரமணி மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வைகுண்ட ஏகாதசி அன்று - திருவல்லிக்கேணி

# பார்த்தசாரதி கோயிலில் - சிறப்பு தரிசனக் கட்டணம் முழுமையாக ரத்து!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, டிச.19-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (18.12.2023), வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்து இந்து சமய அறநிலையத்துறை, காவல்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, மின்சார வாரியம், சென்னை குடிநீர் வாரியம், தீயணைப்புத்துறை உள்ளிட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

பின்னர், அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வைணவத் திருக்கோயில்களிலும் வருகின்ற 23-ஆம் தேதி வைகுண்ட ஏகாதசி கொண்டாடப்படுகிறது. திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலில் கடந்த ஆண்டு வைகுண்ட ஏகாதசிக்கு சுமார் 50,000 மேற்பட்ட பக்தர்கள் சொர்க்கவாசல் வழியாக சுவாமி தரிசனம் மேற்கொண்டார்கள். இந்தாண்டு கூடுதலாக 20 சதவீத பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த வகையில் இந்தாண்டு வைகுண்ட ஏகாதசிக்கு செய்ய வேண்டிய முன்னேற்பாடு பணிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் போன்றவற்றைச் செய்து தருவதற்காக ஆலோசனை செய்து இன்றைய தினம் ஆய்வு மேற்கொண்டோம்.

வைகுண்ட ஏகாதசி அன்று திருக்கோயிலுக்கு கிழக்கு கோபுர வாசல் வழியாக பொது தரிசனமும், மேற்கு கோபுர வாசல் வழியாக சொர்க்க வாசல் சேவைக்கு வருபவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் 70 வயது நிரம்பிய முதியோர்களும் அனுமதிக்கப்படுவார்கள். டி.பி. கோயில் தெரு வழியாக மாற்றுத்திறனாளிகள் மற்றும் 70 வயது நிரம்பிய முதியோர்களுக்கு தனி வரிசை இந்தாண்டு புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. சொர்க்க வாசல் திறப்புக்கு அதிகாலை இரண்டரை மணிக்கு 1,500 பக்தர்கள் அனுமதிப்பதென்றும், உபயதாரர்கள்/ கட்டளைதாரர்கள் 850 நபர்கள் அனுமதிப்பதென்றும் முடிவு எடுக்கப்பட்டு இருக்கின்றது. அதன் பிறகு காலை ஆறு மணி முதல் இரவு நடை மூடுகின்ற வரையில் பொது தரிசனம் தான் இந்த ஆண்டு கடைபிடிக்கப்பட இருக்கின்றது. அன்றைய தினம் சிறப்பு தரிசனக் கட்டணம் முழுமையாக ரத்து செய்யப்படுகின்றது.

இத்திருக்கோயிலில் அன்றைய தினம் கூடுகின்ற பக்தர்களுக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்படும் நிலையில் உரிய சிகிச்சை அளிப்பதற்காக திருக்கோயிலுக்கு உள்ளேயும், வெளியிலும் 6 சிறப்பு மருத்துவ முகாம்கள் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றன. பக்தர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் தற்காலிக கழிவறைகள் 20 இடங்களில் ஏற்பாடு செய்யப்பட இருக்கின்றது. காவல்துறையின் சார்பில் 2 துணை ஆணையர்கள் தலைமையில் 3 ஷிப்ட்களாக, 18 உதவி ஆணையர்கள், 54 காவல் ஆய்வாளர்கள், 400 க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். எந்நேரமும் தயார் நிலையில் தீயணைப்பு வாகனங்கள் மற்றும் அவசர கால ஊர்திகள் நிறுத்தப்பட இருக்கின்றன.

இந்து சமய அறநிலைத் துறை சார்பில் 2 கூடுதல் ஆணையர்கள், 6 இணை ஆணையர்கள், 4 துணை ஆணையர்கள், 6 உதவி ஆணையர்கள், செயல் அலுவலர்கள் என 150 அலுவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவர். ஆகவே இந்த ஆண்டு, கடந்தாண்டை விட அதிகமான அளவிற்கு பக்தர்கள் விரைவாக தரிசனம் செய்வதற்கும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் வயது முதிர்ந்தவர்களுக்கு சிறப்பு தரிசனம் செய்வதற்கும், காலை 6 மணி முதல் இரவு நடை மூடுகின்ற வரை பொது தரிசனத்திற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனை பக்தர்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலை பொறுத்தளவில் ஏற்கனவே தீட்சிதர்கள் உயர்நீதி மன்றத்தில் கனக சபை தரிசனத்திற்கு தடை கோரி மனு செய்திருந்தார்கள். உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அதற்கு தடை விதிக்கவில்லை, வழக்கு தான் நிலுவையில் இருக்கின்றது. ஆகவே விசேஷ நாட்களில் கனக சபையின் மீதேறுவதில் அசௌகரியம் இருந்தால் அது தவிர்க்கப்பட வேண்டும் என்பதில் இந்து சமய அறநிலையத்துறைக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அதையே காரணம் காட்டி கனக சபை மீதேறி தரிசனம் செய்வதற்கு தடை செய்வதை இந்து சமய அறநிலையத்துறை அனுமதிக்காது. திருக்கோயில்களில் படிப்படியாக சிறப்பு தரிசனக் கட்டணங்களை ரத்து செய்ய வேண்டும் என்பதுதான் முதலமைச்சர் அவர்களின் எண்ணமும், இந்து சமய அறநிலையத் துறையின் எண்ணமும் ஆகும்.

திருக்கோயிலில் அனைவரும் சமமாகச் செல்வதற்காகவும், சிறப்பு தரிசனம் என்று வருகின்றபோது பொது வரிசையில் வருபவர்களுக்கு தரிசனத்திற்கு தாமதம் ஏற்படுவதாலும் விரைவாக தரிசனம் நடைபெற வேண்டும் என்ற நல்ல எண்ணத்திற்காகவும் இந்த சிறப்பு தரிசனக் கட்டணத்தை திருவிழாக் காலங்களில் ரத்து செய்வதென்று முடிவெடுத்தோம்.

திருவண்ணாமலையில் கூட பௌர்ணமி தினத்தன்று சிறப்பு தரிசனம் முழுவதுமாக ரத்து செய்யப்பட்டிருக்கின்றது. கடந்த நான்கு மாதங்களாக பௌர்ணமி தினங்களில் அனைவரும் பொது தரிசனத்தில் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள். இதனால் நீண்ட வரிசையில் பக்தர்கள் காத்திருக்கின்ற சூழல் தவிர்க்கப்பட்டு விரைவாக சுவாமி தரிசனம் செய்வதற்கு வசதியாக இருப்பதால் இதனை ஒரு முன்மாதிரியாக எடுத்துக்கொண்டு இந்த ஆண்டு பார்த்தசாரதி திருக்கோயில் சிறப்பு தரிசனக் கட்டணத்தை ரத்து செய்கிறோம். மேலும், எங்கெல்லாம் இதுபோன்ற சாத்தியக்கூறுகள் இருக்கின்றதோ அந்தந்த திருக்கோயில்களில் விழா காலங்களில் ஒரு குறிப்பிட்ட நேரத்தை தவிர்த்து சிறப்பு தரிசனத்தை படிப்படியாக ரத்து செய்வதற்கு துறை முயற்சிக்கும். பக்தர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வது தான் இந்த அரசின் கடமையாகும். கடந்தாண்டை போலவே இந்தாண்டும் பார்த்தசாரதி திருக்கோயிலில் மார்கழி மாதத்தில் இசைக் கல்லூரி மாணவ, மாணவிகளின் திருப்பாவை பாசுரம் நடைபெறும்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், மயிலாப்பூர் காவல் துணை ஆணையர் ரஜத் சதுர்வேதி, இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையர் திருமதி மா.கவிதா, மாநகராட்சி மண்டல அலுவலர் எஸ்.முருகதாஸ், இணை ஆணையர்கள் திருமதி கி.ரேணுகாதேவி, திருமதி ஐ.முல்லை, ராயப்பேட்டை காவல்துறை உதவி ஆணையர் மு.பாலமுருகன் போக்குவரத்து காவல் உதவி ஆணையர் ஜே.சிவக்குமார், திருக்கோயில் துணை ஆணையர்/ செயல் அலுவலர் திருமதி சி.நித்யா மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மதுரவாயல் வடக்குப் பகுதி - 92வது வட்டத்தில் பொதுமக்களுக்கு

# ரூ.6 ஆயிரம் நிவாரணம் : காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. வழங்கினார்!

## நொளம்பூர் வே.ராஜன் - எம்.எம்.ஜெயரத்தினம் - கழகத்தினர் பங்கேற்பு!

சென்னை, டிச. 19-

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்குப் பகுதி 92-வது வட்டத்தில் புயலின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு 6 ஆயிரம் ரூபாய் நிவாரணத் தொகையினை மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி மற்றும் மதுரவாயல் வடக்குப் பகுதிச் செயலாளரும், 11-வது மண்டலக்குழுத் தலைவருமான நொளம்பூர் வே.ராஜன் ஆகியோர் வழங்கினர்.

92- வது வட்டச் செயலாளர் எம்.எம்ஜெயரத்தினம், பகுதி துணைச் செயலாளர் எம்.ஏ.செந்தில்சுரேஷ், கே.குமரேசன், மாவட்டப் பிரதிநிதி எம்.சி.எழிலரசு, ஏ.ஜி.வேலன், டாக்டர் எம்.சி.அழகிரி, ஏ.சுந்தரி, எம்.எஸ்.பிரபா, டி.கலைநேசன், எம்.பி.நவராஜ், எம்.என்.ராஜ்கமல், எம்.எஸ்.சந்தானம், எம்.பி.நவக்குமார், எம்.எஸ்.தமிழ்அழகன், எம்.பி.சீனிவாசன், எஸ்.ஜமுனா, எஸ்.ராகுல், டி.ஜெயச்சந்திரன், எம்.ஜி.சுரேஷ், எஸ்.பாலாஜி, எ.லீலவாதி, டி.புகழேந்தி, எம்.எஸ்.ஜெயசிம்மன், பி.நாகராஜ், கே.முருகன், கே.பிரகாஷ், எம்.எம்.கண்ணப்பன், ஜி.நாகராஜ், எம்.சி.விமல்தாஸ், வி.ஆர்.மகேந்திரன், எம்.ஜி.எம்.புகழேந்தி, சி.காமராஜ், டி.அமுல்ராஜ், எல்.கிருஷ்ணமூர்த்தி, கே.பிரகாஷ், எம்.சபரிதாஸ், என்.மல்லியப்பன், எஸ். ஆனந்தன், எம்.பி.நவசுந்தர், வளர்மதி, டி.நிக்சன், டி.ஆல்பர்ட், எம்.எஸ்.லட்சுமணன், எம்.டி.ராஜி, வி.திரு, இளைஞர் அணி சேர்ந்த எம்.கே.நரேஷ், எம்.எஸ்.கார்த்திக், எம்.ஜி.விக்னேஷ், எம்.எம். ஜெ.ரோஷன்காந்த், எம்.சக்திவேல், மகளிர் அணி திருமதி பிரியா சாய்விரசாமி, கே.தயாநிதி, எம்.பி.எழிலரசு, வி.கலைவாணன், என்.தினேஷ், எம்.இமயவர்மன், கே.மேகநாதன், ஜேம்ஸ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இதில் கலந்து கொண்டனர்.

தென் மாவட்டங்களில் அதிக கனமழை!

# பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்கள்!

## தொடர்பு எண் - தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, டிச.19-

பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்குவது குறித்து அரசின் செய்தி வெளியீடு வருமாறு:-

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி மாவட்டங்களில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக கடந்த இரண்டு நாட்களாக அதிகனமழை பெய்து வருவதை தொடர்ந்து அங்கு பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு தேவையான நிவாரண பொருட்களை (ரொட்டி பாக்கெட்டுகள், தண்ணீர் பாட்டில்கள், பிஸ்கெட் பாக்கெட்டுகள், பால் பவுடர், உலர் பழங்கள், மளிகை பொருட்கள், பாய்கள், போர்வைகள், துண்டுகள், மெழுகுவர்த்திகள், தீப்பெட்டிகள், லுங்கிகள், நைட்டிகள், நேப்கின் பேடுகள் உள்ளிட்டவை) வழங்க விரும்பும் தன்னார்வலர்கள் மற்றும் நிறுவனங்கள் கீழ்க்கண்ட வாட்ஸ்அப் அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

வாட்ஸ்அப் அலைபேசி எண்: 73977 66651

இவ்வாறு தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.



சென்னை தென்மேற்கு மாவட்டம், 171வது மாமன்ற உறுப்பினர் திருமதி கீதா முரளி ஏற்பாட்டில். 300நபர்களுக்கு நிவாரண உதவிகளை சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. , மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ். முரளி வழங்கினர். உடன் வட்டக் கழகத்தின் செயலாளர் துரை பார்த்திபன், வட்டக் கழக நிர்வாகிகள் பக முகவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மயிலை த. வேலு எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!. டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# மயிலாப்பூர் தொகுதி மருத்துவ அணி சார்பில் சிறப்பு பொது மருத்துவ முகாம்!

## தலைமை டாக்டர் ஜனனி இளங்கோவன், முன்னிலை நந்தனம் மதி எம்.சி., எஸ். முரளி, ராஜசுரேஷ்குமார், மு. இ. ஏழுமலை!

சென்னை, டிச.19-

தி.மு.க. மருத்துவ அணி மயிலாப்பூர் தொகுதி சார்பில் மிக்ஜாம் புயல் பேரிடரால் பாதிக்கப்பட்ட, சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலாப்பூர் தொகுதி பொதுமக்களுக்கு சிறப்பு மருத்துவ முகாம், சென்னை 18 தேனாம் பேட்டை ஆலையம்மன் கோயில் வளாகத்தில், (16.12.23, சனிக்கிழமை) காலை 9 மணி அளவில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர், மயிலை த. வேலு எம்.எல்.ஏ. சிறப்பு பொது மருத்துவ முகாமினை துவக்கி வைத்தார்.

மயிலாப்பூர் தொகுதி மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் ஜனனி இளங்கோவன் தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் மதி எம்.சி., மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ். முரளி, 122 வட்ட செயலாளர் எஸ்.ஆர். ராஜ சுரேஷ்குமார், 123 வது வட்ட செயலாளர் மு. இ. ஏழுமலை ஆகியோரின் முன்னிலையில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

மருத்துவ முகாமினை தி.மு.க. மருத்துவ அணி செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. பார்வையிட்டார்.

இம்மருத்துவ முகாமில் மாநில மருத்துவ அணி துணைச் செயலாளர்கள் டாக்டர் ஜெ. அருண், டாக்டர் கலைகதிரவன், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் கோ. சக்திவிக்னேஷ், மாவட்ட தலைவர் டாக்டர் எம். எஸ். சரவணகுமார், துணைத்தலைவர் டாக்டர் எஸ். ஜெயகர், மாவட்ட துணை அமைப்பாளர்கள் டாக்டர் பா. நிவிதா, டாக்டர் எஸ். சில்வியா, டாக்டர் ஜி. விவேகானந்தன், மயிலாப்பூர் தொகுதி மருத்துவ அணி துணை அமைப்பாளர்கள் எஸ். ஷக்தி லாவண்யா, அ. முருகவேல், நா. மாறன், ஜெ. லாரன் சஷியா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த மருத்துவ முகாமில், பொது மருத்துவ பரிசோதனைகள், காலரா தடுப்பு சிகிச்சைகள் தடுப்பூசிகள், தடுப்பூசி சிகிச்சைகள், சேற்றுப் புண் தடுப்பு மருந்துகள், வயிற்றுப்போக்கு தடுப்பு சிகிச்சைகள், பருவ மழைக் கால காய்ச்சல் தொற்று மற்றும் தொற்றா நோய் சிகிச்சைகள் மயிலாப்பூர் தொகுதி மருத்துவ அணி முகாமில் மயிலாப்பூர் தொகுதி பொதுமக்களுக்கு, சிகிச்சை அளிக்கப்பட்டது.

# பீடுநடை போடும் பேராசான் நம்மோடு வாழ்கிறார்



**பே**ராசான் என்றால்நம் பேரா சானே!
பேசறியாச் சொல்லாற்றல் கருத்தாற் கள்
சீராசான் என்றால்நம் ஓராசானே!
செந்தமிழே வடிவான தமிழாசானே
வாராதே வந்தநமின் பேராடானின்
வாழ்வியலின் செம்மைநெறி தமிழர்பாடம்
யாராசான் உலகுள்ளார் அவர்க ளுள்ளே
நல்லாசான் வெல்லாசான் பேரா சானே

கோயிலுக்கோ அவர்போன தில்லை ஆனால்
கோயிலாக வேஅவரும் வாழ்ந்தா ரென்னே!
தாயினைப் போல் கழகத்திற்(கு) அவரி ருந்தார்
தந்தைவழிப் பகுத்தறிவின் தந்தை யானார்
மாயிருள்தோய் நிலை தி.மு.கழக மேற்கா
வான்கதிரோன் பேரொளியால் ஒளிப ரப்பி
சேயினைப்போல் கலைஞர்தாம் கழகம் காக்கச்
செப்பரிய ஒளிவெள்ளத் துணைநின் றாரே

அறிஞரண்ணா தி.மு.க. கண்ட போதில்
அண்ணாவின் உண்மையான தம்பி ஆனார்
அறிவார்ந்த தம்பிமார்கள் பலரும் கூட
அவர்க்கெல்லாம் ஒழுங்குமுறை அடக்கம் அன்பை
அறிவுநெறி தான்நடந்தே கழகத் தோழர்
ஆசான்போல் வழிகாட்டும் பண்பை வின்டார்
அறிந்தறிந்தே தேர்ந்துநமின் கலைஞர் கண்டார்
அன்றுமுதல் கடைசிவரை கலைஞர் தோழர்

பட்டிதொட்டி பேரூர்கள் சிற்றூர் எல்லாம்
பதித்த அந்நாள் தி.மு.க. கொள்கை வீறு
முட்டிமோதி காங்கிரசு அந்நாள் ஆட்சி
மொத்தஎதிர் புக்களங்கள் போரா டித்தான்
எட்டுதிக்கும் தமிழ்நாட்டில் வளரச் செய்த
ஈடில்லா அர்ப்பணிப்பால் கழகம் காத்தே
நட்டபயிர் நெல்மணியாய் கண்டே அன்னை
நாடுதமிழ் ஆட்சியேற்றே நிமிர்ந்தே வென்றார்

கழகத்தின் ஆட்சி யெலாம் கலைஞர் தம்மின்
கவசமாகித் தமிழ்தமிழர் காப்புத் தந்தார்
நிழல்தந்த மரம்வீழ்த்த நிழலில் வாழ்ந்தார்
நெஞ்சுநஞ்சு வஞ்சகத்தால் நிமிர்ந்து நின்றே
தழல் நெருப்பை வைத்தபோதோ அவர்தம்தீய
தகாதசெயல் கண்டித்தே கழகத்தோழர்
பழந்தமிழ்தாய் கலைஞர்க்கே துணையாய் ஆக்கிப்
பைந்தமிழர் காவல்தெய் வத்தைக் காத்தார்

தலைமைதாங் கும்தகுதி யெல்லாம் இருந்தும் கூட
தகுதியிலும் தகைத்தகுதி கழகம் காக்கும்
தலைமைக்குப் பெருந்தகுதி கலைஞர்க்(கு) உண்டே
கருத்துரைத்தே கலைஞர்தமின் தலைமை கண்டார்
தலைமைதம் நட்புகலை ஞர்தாம் போற்றி
தந்தைதாய் தம்பிள்ளை பாசம்போல
தலைமைகலை ஞர்தம்முள் கலந்தே வென்றே
தமிழ்சமுதா யத்தைதலை நிமிரச் செய்தார்

நிலம்போல அடக்கத்தின் பொறுமைமாசில்
நெறிகாக்கும் பகுத்தறிவின் நெஞ்சத் தூய்மை
நலம்தரும்வெல் செயற்கோவாய் வாழ்ந்த தன்றி
யாரெவர்க்கும் மாறுபாடு எண்ணாச் செம்மை
உலகத்துத் தமிழரெலாம் வணங்கு மாறே
ஆன்றவிந்த கொள்கைக்கோச் சான்றோ ராகி
நலம்தமிழர் அடையாள எடுத்துக் காட்டாய்
தான்வாழ்ந்த பேராசான் தமிழாய் வாழ்வார்!

இருந்தமிழ்நம் முத்தமிழ்க்கோ கலைஞர் தம்மின்
இதயமாக வாழ்ந்துநட்பின் உரிமை காத்தார்
பெருந்தமிழ்நம் புலவர்களின் நெஞ்ச கத்துப்
பொழிலெல்லாம் உலாவந்து காலம் வென்றார்
**அருந்தமிழ்மா முதல்வர்நம் இஸ்டாலின் ஓங்கு**
ஆட்சிபுகழ் பெருமைதரும் வாஞ்சை யாகி
பெருந்தமிழ்க்கோ பேராசான் தமிழர் உள்ளம்
பீடுநடை போடுகின்றார் கழகம் வெல்க!



- பெருங்கவிக்கோ
**வா.மு.சேதுராமன்**
(உலக அமைப்பாளர், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம்)

# நம்பிக்கை தரக் கூடியவர் ஸ்டாலின்!





"**இ**ன்றைக்கு ஸ்டாலின் ஒரு தனிப்பட்ட மனிதர் அல்ல: தந்தை பெரியார்: பேரறிஞர் அண்ணா. அறிஞர் அண்ணாவுக்கு கலைஞர். கலைஞருக்கு மட்டுமல்ல; எனக்கும் ஸ்டாலின் அந்த வரிசையிலே அடுத்த தலைமுறையை பாதுகாக்கவேண்டிய உணர்ச்சி உள்ள ஒரு கடமையுள்ளவராக இருக்கிறார்."

**- பேராசிரியர்**

## மழை வெள்ள பாதிப்பு குறித்து

# பிரதமர் நரேந்திர மோடியுடன் ஆலோசனை!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரம் கேட்டு கடிதம்!

சென்னை, டிச. 19-

தென் மாவட்ட மழை வெள்ள பாதிப்புகள் குறித்து ஆலோசனை மேற்கொள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை புதுதில்லியில் சந்திக்க நேரம் கோரியுள்ளார்.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அண்மையில் பெய்த மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு விரைந்து நிதி ஒதுக்க கோரவும், தற்போது தென் மாவட்டங்களில் பெய்து வரும் அதி கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள், மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் குறித்து எடுத்துக் கூறி ஆலோசிக்கவும், இன்று (19.12.2023) புதுதில்லியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களை சந்திக்க தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரம் கோரி கடிதம் எழுதியுள்ளார்.

## ஜம்மு காஷ்மீர், லடாக்கில்

### அடுத்தடுத்து 3 முறை நிலநடுக்கங்கள்!

லடாக், டிச. 19 -

லடாக்கில் நேற்று மாலை 5.5 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டதை தொடர்ந்து, 15 நிமிடங்கள் இடைவெளியில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதே நேரத்தில் ஜம்மு காஷ்மீரின் கிஷ்த்வாரில் இன்று லேசான தீவிர நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

தேசிய நிலநடுக்கவியல் மையம் கூற்றுபடி, இன்று மாலை 3.48 மணிக்கு 5.5 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து மாலை 4.01 மணியளவில் 4.8 மற்றும் 3.8 தீவிரம் கொண்ட இரண்டு நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளது. ஜம்முகாஷ்மீரில், கிஷ்த்வார் மாவட்டத்தில் இன்று மாலை 4.18 மணிக்கு 3.6 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் உயிர் சேதம் ஏற்பட்டதாக உடனடி தகவல் ஏதும் இல்லை.



முதலமைச்சர் அவர்கள் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தை துவக்கி வைத்ததைத் தொடர்ந்து, நேற்று (18.12.2023) கடலூர் மாவட்டம், கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாதிரிக்குப்பம் ஊராட்சி, கூத்தப்பாக்கம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தை துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண் தம்புராஜ், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம் , கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர் திருமதி இரா.சரண்யா, ஆகியோர் உள்ளனர்.

# "திராவிட மணிமகுடம்!"



அன்னை சொர்ணம்,
கல்யாண சுந்தரர்
அருமைத் திருமகனார்!
ஐயா, அண்ணா
வழியில் வந்த
அறிவுப் பெருமகனார்!
பொன்னெழுத் தாலே
பொறிக்கப் படுமோர்
புகழின் திருவுடையார்!
பூக்களை வெல்லும்
புன்னகை மின்னும்
பொலிவின் எழிலுடையார்!

குறைந்திட லற்றக்
குணத்தின் கடலாம்!
கொள்கைக் குறள்நெறியார்!
கொடுத்துப் பதிலைத்
தொடுக்கும் சிந்தனைக்
கூர்மை முனைமுறியார்!
அறம்தான் உயிராம்!
மறந்தும் வாழ்வில்
அரசியல் பிழையறியார்!
அன்பழ கர்! உயர்
பண்பழ கர்!தமிழ்
அமுத மொழிநடையார்!


தனக்குக் கழகம்,
தமிழ், தமிழ் நாடு
தவிர வேறறியார்!
தன்மா னத்தின்
தகைசால் ஏந்தல்!
தாடியில் லாப்பெரியார்!
"எனக்குக் கிடைத்த
இன்னோர் அண்ணன்"
என்றுரைத் தார்கலைஞர்!
"என்பெரி யப்பா"
இழந்தேன் அவரை,என்
றழுதார் தளபதியார்!

வெற்றிலை மீது
சுண்ணாம்பை அளவாய்த்
தடவும் விரல்அழகு!
வெண்கல மணிபோல்
கிண்கிணீர் ஓசை
விளையும் குரல்அழகு!
சற்றும் மங்காத
சூரிய வெளிச்சம்
பொங்கும் விழியழகு!
சட்டைப் பொத்தான்
இடத்தில் மாறித்
தங்கும் தனியழகு!

தோட்டா வைப்போல்
துளைத்துப் பகையைச்
சொல்லால் சுடும்அழகு!
தோளில் கிடக்கும்
துண்டை எடுத்துத்
தோளில் இடும்அழகு!
" காட்டு ரார்" இவர்
களத்தில் செந்தமிழ்க்
கணைகள் விடும்அழகு!
கடக்களி றொப்ப
நடக்கும் அழகு!
கண்ணே படும்அழகு!

அசையும் ஒவ்வோர்
அடியும் முட்கள்!
அனைத்தும் கடந்த திடம்!
ஆயிரம் ஆண்டுகள்
அழியாச் சுவடுகள்!
அண்ணல் நடந்த தடம்!
திசைகள் வணங்கிடும்
செம்மல்! கல்விச்
செந்தேன் நிறைந்தகுடம்!
தீட்டும் சரித்திரம்
காட்டும் வரிசையில்
" திராவிட மணிமகுடம்!"

பீடு தரும்!தனிப்
பெருமை தரும்!அவர்
பேச்சே சொரணைதரும்!
"பெருமிதம்" என்றால்
"பேரா சிரியர்"
பெயரே நினைவுவரும்!
நீடு நெடும்புகழ்
நிலைத்திருக் கும்!அவர்
நிழலும் அழகுபெறும்!
நித்திரைக் குள்ளும்
கனவாய் வருவார்!
நெஞ்சம் அமைதியுறும்!



... கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்.**

# கோவையில் ரூ.133 கோடியில் செம்மொழிப் பூங்கா!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

சென்னை, டிச. 19-

**கோயம்புத்தூரில் ரூ.133.21 கோடியில் அமைக்கப்படவுள்ள செம்மொழிப் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டி, 7945 பயனாளிகளுக்கு ரூ.110.51 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2023) கோயம்புத்தூரில் நடைபெற்ற விழாவில், காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் 165 ஏக்கர் பரப்பளவிலான செம்மொழிப் பூங்காவிற்கு, முதற்கட்டமாக 45 ஏக்கர் பரப்பளவில் 133.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள செம்மொழிப் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார். மேலும், 7945 பயனாளிகளுக்கு 110 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

**உலகத் தரத்திலான**
**செம்மொழிப் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டுதல்**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2010-ஆம் ஆண்டு கோயம்புத்தூரில் நடைபெற்ற உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில், கோயம்புத்தூரில் செம்மொழிப் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அதன் தொடர்ச்சியாக, 22.11.2021 அன்று கோயம்புத்தூர் வ.உ.சி. மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், காந்திபுரத்தில் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய நடைபாதை போன்ற அனைத்து வசதிகளும், கூட்ட அரங்கு, வெளி அரங்கு போன்ற கட்டமைப்புகளும் கொண்ட செம்மொழிப் பூங்கா இரண்டு கட்டங்களாக அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

கோயம்புத்தூர் உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டை பறைசாற்றும் வகையில், தாவரவியல் தோட்டத்தை பின்புலமாக கொண்டு பொதுமக்கள் இயற்கையை அறிந்து கொள்ளவும், தாவர இனங்களை நிலைக்கத் தக்க வகையில் பயன்படுத்துதலை ஊக்கப்படுத்தவும், நீலகிரி உயிர்கோளப்படுகையில் உள்ள அரிய வகை தாவர இனங்களை பாதுகாத்தல் மற்றும் சுற்றுச்சூழல் ஆளுமையை நிறுவி மேம்படுத்தி மேலாண்மை செய்யும் நோக்கிலும், செம்மொழிப் பூங்கா அமைக்கப்படவுள்ளது.

மேலும் உலகிலேயே இங்கிலாந்தில் உள்ள கியு பூங்கா மட்டுமே தாவர உயிரியல் வங்கியாகவும், அதன் தொடர்புடைய ஆராய்ச்சி மையமாகவும் உள்ளது. வெப்ப மண்டல நாடான இந்தியாவில் அத்தகைய பூங்கா அமைக்கப்படாத காரணத்தால் சிறப்பு மிக்க தாவரங்களைக் கொண்ட செம்மொழிப் பூங்கா காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகப் பகுதியில் 165 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படவுள்ளது.

இவற்றில் முதற்கட்டமாக 45 ஏக்கர் நிலப்பரப்பிலும், இரண்டாவது கட்டமாக 120 ஏக்கர் நிலப்பரப்பிலும் பூங்கா அமைக்கப்படவுள்ளது. தற்போது முதற்கட்டமாக 45 ஏக்கர் நிலப்பரப்பில் செம்மொழிப் பூங்கா அமைக்கும் நோக்கத்துடன் மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே இயற்கையை பாதுகாத்தல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், மாணவர்களுக்கு தாவரங்களைப் பற்றி அறிந்து கொள்ளவும், ஆராய்ச்சி மேற்கொள்ளவும், சுற்றுச்சூழல் மேலாண்மை குறித்து அறிந்திடவும், பொதுமக்கள் குழந்தைகளுக்கு சிறந்த பொழுது போக்கிற்கு ஏற்ற வகையிலும் செம்மொழி பூங்கா 133.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலகதரத்துடன் அமைக்கப்படவுள்ளது.

உலகத்தரம் வாய்ந்த இப்பூங்கா இந்தியாவிலேயே தனித்துவத்துடன் பல சிறப்புகளை உள்ளடக்கியிருக்கும். இப்பூங்காவில் செம்மொழி வனம், மகரந்த வனம், மூலிகை வனம், நீர் வனம், நட்சத்திர வனம், நலம்தரும் வனம், நறுமண வனம் போன்ற பல வகையான தோட்டங்கள் அமைக்கப்படும். இதில் இயற்கை அருங்காட்சியகம், திறந்த வெளி அரங்கம், இயற்கை உணவகம், அனைத்து நவீன வசதிகளுடன் ஆயிரம் இருக்கைகள் கொண்ட மாநாட்டு மையம் ஆகியவைகளும் அமைக்கப்படும்.

**பயனாளிகளுக்கு நலத்திட்ட**
**உதவிகள் வழங்குதல்**

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை - மகளிர் திட்டத்தின் கீழ், 3000 பயனாளிகளுக்கு கடனுதவிகள்;

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் 284 பயனாளிகள் பயன்பெறும் வகையில், வீட்டுமனைப் பட்டாக்கள், முதியோர் ஓய்வூதியத் தொகை, இபட்டாக்கள், சாலை விபத்து நிவாரணம், பழங்குடியினருக்கான சாதிச்சான்றுகள், வன உரிமைச் சட்டத்தின் கீழ் பட்டாக்கள்;

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 1149 பயனாளிகள் பயன்பெறும் வகையில் பழங்குடியினர் வகுப்பு சான்றுகள், வன உரிமைப் பட்டாக்கள், இபட்டாக்கள், தையல் இயந்திரங்கள்;

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலப்பிரிவின் கீழ் 980 பயனாளிகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள், சலவைப்பெட்டிகள் மற்றும் இ.பட்டாக்கள்;

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் முதலமைச்சரின் விரிவான காப்பீடு திட்டத்தின் கீழ் 534 பயனாளிகளுக்கு புதிதாக காப்பீடு அட்டைகள்;

தொழிலாளர் நலத்துறையின் (சமூக பாதுகாப்பு திட்டம்) சார்பில் 210 பயனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித்தொகை, இயற்கை மரண நிதியுதவி, பணியின் போது விபத்தில் மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி;

கூட்டுறவுத் துறையின் சார்பில் 200 பயனாளிகளுக்கு ஆதரவற்ற விதவைகளுக்கு கடனுதவி, மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு கடனுதவி, மாற்றுதிறனாளிகளுக்கு கடனுதவி, சிறு வியாபாரிகளுக்கு கடனுதவி, பணிபுரியும் மகளிருக்கான கடனுதவி, மகளிர் தொழில்முனைவோர் கடனுதவிகள்;

பேரூராட்சிகள் சார்பில் 302 பயனாளிகளுக்கு சாலையோர வியாபாரிகளுக்கு அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் நிதியுதவி;

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் 242 பயனாளிகள் பயன்பெறும் வகையில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் மூலம் பரப்பு அதிகரித்தல், பண்ணை பற்றாக்குறை சரிசெய்தல், வாழைத் தார் உரையிடுதல், வேளாண்மை விற்பனை மற்றம் வணிகத்துறை மூலம் தரமான கரும்பு அச்சு வெல்லம் தயாரிக்கும் மையம் அமைத்தல், புதிய உழவர் சந்தை அடையாள அட்டைகள் வழங்குதல் போன்றவையும்;

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 60 பயனாளிகள் பயன்பெறும் வகையில், பேட்டரியால் இயக்கப்படும் சக்கர நாற்காலிகள், மாற்று திறனாளிகளுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட சக்கர நாற்காலி மற்றும் வாகனம், ஸ்மார்ட் கைப்பேசிகள், தையல் இயந்திரங்கள்;

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் 20 பயனாளிகளுக்கு செல்வபுரம் அடுக்குமாடி குடியிருப்பு ஒதுக்கீட்டு ஆணைகள்;

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் சார்பில் 5 பயனாளிகளுக்கு சுற்றுலா வாகனம், பயணிகள் ஆட்டோ, பல்பொருள் அங்காடிகள் அமைக்க கடனுதவிகள், விபத்து நிவாரண நிதி;

சமூக நலத்துறை சார்பில் 3 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள்;

என பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 7945 பயனாளிகளுக்கு 110 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு. முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி.ஆர். நடராஜன், அந்தியூர் செல்வராஜ், கு. சண்முகசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வானதி சீனிவாசன், கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி கல்பனா ஆனந்தகுமார், துணை மேயர் ஆர். வெற்றிச்செல்வன், முதல்வரின் முகவரி திட்ட சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், மக்களுடன் முதல்வர் சிறப்புப் பணி அலுவலர் ப. மதுசூதன் ரெட்டி, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சிவகங்கையில் இலவச கண் மருத்துவ முகாம்!

### நகர் மன்ற தலைவர் துரைஆனந்த் துவக்கி வைத்தார்!

*சிவகங்கை. டிச. 19-*

*சிவகங்கை நகர் தி.மு.க. மற்றும் மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கத்தின் சார்பில் சிவகங்கை இந்திரா நகர் திருமணமகாலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினை முன்னிட்டு இலவச கண் மருத்துவ முகாம் நடைபெற்றது.*

*இந்த முகாமினை நகர்கழக செயலாளரும் நகர்மன்ற தலைவருமான சி.எம்.துரைஆனந் தலைமையேற்று துவக்கி வைத்தார்.*

*முகாமில் மதுரை வேலம்மாள் மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சி மருத்துவமனை மருத்துவர்கள்சிகிச்சை அளித்தார்கள். இந்த முகாமில் 500க்கும் மேற்பட்டவர்களுக்கு கண் சம்பந்தமான பரிசோதனை மற்றும் சிகிச்சைகள் அளிக்கப்பட்டது.*

*இந்த நிகழ்ச்சியில் நகர் மன்ற உறுப்பினர்கள் மதியழகன், ஜெயகாந்தன், சரவணன், இளைஞரணி அரிகரன், நிர்வாகிகள் சேகர், ராஜாசல்புதீன், இலக்கிய அணி காளீஸ்வரன், வீரகாளை, சேது, உள்பட வட்டக் கழக நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டார்கள்.*



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (18.12.2023) வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு திருவல்லிக்கேணி பார்த்தசாரதி திருக்கோயிலில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகளை ஆய்வு செய்து அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், மயிலாப்பூர் காவல் துணை ஆணையர் ரஜத் சதுர்வேதி கூடுதல் ஆணையர் திருமதி மா.கவிதா. மாநகராட்சி மண்டல அலுவலர் எஸ். முருகதாஸ், இணை ஆணையர்கள் திருமதி கி.ரேணுகாதேவி, திருமதி ஜ.முல்லை, ராயப்பேட்டை காவல்துறை உதவி ஆணையர் மு.பாலமுருகன் போக்குவரத்து காவல் உதவி ஆணையர் ஜே.சிவகுமார், திருக்கோயில் துணை ஆணையர்/ செயல அலுவலர் திருமதி சி.நித்யா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சமூக நீதியின் சகுனி பா.ஜ.க.

“When Fascism comes to America, it will be wrapped in the National Flag
and carrying the Holy cross” James Waterman.

“அமெரிக்க தேசத்தை உருக்குலைக்க வருகிற பாசிசம்,

அமெரிக்க தேசியக் கொடியைப் போர்த்திக் கொண்டு, மத அடையாள சிலுவையைத் தூக்கிக் கொண்டுதான் வரும்”

என்ற ஜேம்ஸ் வாட்டர்மேன் கருத்திற்கிணங்க, பா.ஜ.க.வின் அடுத்தக் குறி, சமூக நீதிதான் என்பதை பிரகடனப்படுத்தும் வண்ணம் இந்தியாவில் சமீபத்தில் நடந்து முடிந்த ஐந்து மாநில தேர்தல்களில் பா.ஜ.க. வெற்றி பெற்ற மூன்று மாநில முதல்வர்களின் தேர்வு நடந்தேறி இருக்கிறது. அதில் பா.ஜ.க. ஏதோ சமூக நீதியைப் பின்பற்றுவது போன்ற பித்தலாட்ட பிம்பத்தை உருவாக்க முனைந்திருக்கிறது.

ஏனெனில், பிறப்பால் உயர்வு, தாழ்வு உண்டு என்றும் பிறந்த குலத்திற்கேற்பதான் ஒருவனுக்கு சமூகத்தில் அந்தஸ்தும் மரியாதையும் உரிமையும் கொடுக்கப்படும் என்ற சனாதனக் கொள்கையை உயர்த்திப் பிடித்துக் கொண்டிருந்தது. தேர்தலுக்கு முன்னால் பா.ஜ.க. ஆண்ட 17 மாநிலங்களில் ஒரே ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்த முதல்வரைத் தவிர மற்ற அனைவரும் உயர் வகுப்பினராக கொண்டு ஆட்சி நடத்தி. தனது சனாதன கொள்கையில் தீவிரப் பற்றுதலை காட்டிக் கொண்டிருந்தது.

பா.ஜ.க.வின் இந்த அரசியல் நிலைப்பாடு சமூக நீதியை அடிப்படையாகக் கொண்ட திராவிட, திராவிட இயக்க கொள்கைகளுக்கு முற்றிலும் முரணானது. பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் இருந்த ஆண்டான் அடிமை சமூகத்தின் எச்சம் என்று திராவிட இயக்கத் தலைவர்கள் சுட்டிக்காட்டிய போதும், இந்திய பாராளுமன்றத்தில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி 20.09.2023 அன்று பாராளுமன்றத்தில் உள்ள 90 செயலாளர்களில் மூன்று பேர் மட்டுமே OBC வகுப்பை சேர்ந்தவர்கள். மற்றவர்கள் 87 பேரும் உயர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பது போன்ற தரவுகளை எடுத்து வைத்து வாதிட்ட போதும் கண்டு கொள்ளாமல் இருந்த பா.ஜ.க., தற்போது தனது கொள்கையில் அந்தர் பல்டி அடித்து மாநில முதல்வர்களின் தேர்வில் தன்நிலையை அடியோடு மாற்றிக் கொண்டு சமூகநீதியை ஏற்றுக் கொண்டது போன்ற கபட நாடகமாடுகிறது.

ராஜஸ்தானில் உள்ள 199 சட்டமன்ற தொகுதிகளில் 115 தொகுதிகளைக் கைப்பற்றி இருக்கும் பா.ஜ.க., இங்கு முதல்வராக பஜன்லால் சர்மா என்ற உயர் வகுப்பினைச் சேர்ந்தவரையும், துணை முதல்வர்களாக தியா குமாரி என்ற ராஜபுத்ர சமூகத்தைச் சேர்ந்தவரையும், மற்றொரு துணை முதல்வராக பிரேம் சந்தர் பைரவா என்ற தலித் சமூகத்தை சேர்ந்தவரையும் தேர்வு செய்துள்ளது. 1998லிருந்து குவாலியர் ராஜ குடும்பத்தை சேர்ந்தவரும், ராஜஸ்தானின் மருமகளுமான வசுந்தரா ராஜேதான் மீண்டும் மீண்டும் முதல்வராக அமர்த்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து, மத்திய பிரதேசத்தில் முதல்வராக மோகன் யாதவ் என்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவரையும், துணை முதல்வர்களாக ஜெகதீஷ் தேவ்டா என்ற தலித் சமூகத்தை சேர்ந்தவரையும், மற்றொரு துணை முதல்வர் ராஜேந்திர சுக்லா என்ற உயர் வகுப்பைச் சேர்ந்தவரையும் தேர்வு செய்துள்ளது. இங்கு கடந்த மூன்று முறையாக சிவராஜ் சிங் சவ்கானைத்தான் முதல்வராக அமர்த்தி அழகு பார்த்தது நினைவுகூறத்தக்கது.

இன்னொரு மாநிலமான சத்தீஸ்கரில் உள்ள 90 சட்டமன்ற தொகுதிகளில் 54 இடங்களை வென்று ஆட்சியைப் பிடித்த பா.ஜ.க., அங்கு முதல்வராக விஷ்ணு தியோ சாய் என்ற பழங்குடி சமூக பின்னணியைக் கொண்டவரையும், துணை முதல்வர்களாக அருண் சாகு என்ற பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவரையும், மற்றொரு துணை முதல்வர் விஜய் சர்மா என்ற உயர் வகுப்பை சேர்ந்தவரையும் தேர்வு செய்துள்ளது.

இப்படி மூன்று மாநிலத்திலும் உயர்வகுப்பு (FC) பிற்படுத்தப்பட்ட வகுப்பு (OBC), தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பு (SC&ST) என்று மூன்று பிரிவினருக்கும் அடையாள பிரதிநிதித்துவம் அளித்திருப்பதன் மூலம் தன்னை ஒரு சமூகநீதி கட்சியாக காட்டிக்கொள்ள நினைக்கிறது பா.ஜ.க.

ஆனால், ஏறத்தாழ 40 ஆண்டு கால பா.ஜ.க. அரசியலை புரிந்து கொண்ட அரசியல் ஆய்வாளர்கள் மற்றும் மூத்த பத்திரிக்கையாளர்கள் பா.ஜ.க.வின் இந்த கள அரசியல் நடவடிக்கையை, அடுத்து வரும் 2024 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தல் வெற்றியைக் கருத்திற்கொண்டே சமூகநீதியில் சகுனித்தனம் செய்திருக்கிறது என்று அடித்துக் கூறுகிறார்கள். எப்படியெனில், சத்தீஸ்கரில் பழங்குடி வகுப்பை சேர்ந்த முதல்வரை தேர்ந்தெடுத்திருப்பதன் மூலம் பாரம்பரிய காங்கிரஸ் ஆதரவாளர்களான பழங்குடி மக்களை தங்கள் வசம் ஈர்க்கவும் அண்டை மாநிலமான ஒடிசா ஜார்கண்ட் மாநிலங்களில் பெருவாரியாக வாழும் பழங்குடி மக்களின் வாக்கு வங்கியில் தாக்கத்தை ஏற்படுத்திடும் முயற்சியாகும். இதே போன்று, மத்திய பிரதேசத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மோகன் யாதவ் அங்கு காங்கிரஸ் முகங்களாக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது, அறியப்படும் கமல் நாத் மற்றும் திக் விஜய் சிங் என்ற முற்படுத்தப்பட்ட சமூக தலைவர்களுக்கு எதிராகவும் காங்கிரசுக்கு சோதனை நகர்வாகவும், கூடவே, யாதவர்கள் அதிகம் வசிக்கும் அண்டை மாநிலங்களான உத்திரபிரதேசம் மற்றும் பீகாரிலும் வாக்கு வங்கியில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகவும் அமையும்.

இதே போன்றுதான் ராஜஸ்தானில் முற்பட்ட வகுப்பை சார்ந்த பஜன்லால் சர்மா தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது, ராஜஸ்தானில் மட்டுமல்ல நாடு முழுவதும் பா.ஜ.க.விற்கு அசைக்க முடியாத அடித் தளமாக உள்ள முற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்தவர்களின் ஆதரவை வலுப்படுத்தி நிலை நிறுத்திக் கொள்ளும் உத்தி ஆகும் என்று தக்க தரவுகளுடன் விளக்குகிறார்கள்.



**பேரா.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன்**
*கழக செய்தித் தொடர்புச் செயலாளர்*

அதோடு, உண்மையிலேயே சமூக நீதியை உள்வாங்கிக் கொள்ளுமே யானால் பா.ஜ.க. ஆளும் ஏனைய மாநிலங்களிலும் இதே போன்று வகுப்பு வாரி பிரதிநிதித்துவத்தை ஏன் கொடுக்கவில்லை? ஜாதிவாரி கணக்கெடுப்பு குறித்து தெளிவான முடிவில்லாமல் ‘பாம்புக்கு வாலும் மீனுக்கு தலையும்’ என்பது போல் நடந்து கொள்வது ஏன்? நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீட்டு மசோதாவில் அதை உடனடியாக நடைமுறைப்படுத்த முடியாத அளவில் குழப்பங் களை ஏற்படுத்தி இருப்பது ஏன்? இது போன்ற பா.ஜ.க.வின் முகத்திரையை கிழித்தெறி யும் ஆணித்தரமான கேள்விகளை முன் வைக்கின்றனர்.

எதற்காக நாம் இதை சுட்டிக்காட்ட வேண்டியது இருக்கிறது என்றால், பா.ஜ.க. செய்கிற அடையாள அரசியல் சித்து வேலைகளை அதன் அடிவருடிகள் ஏதோ பா.ஜ.க. சமூகநீதியை நிலைநிறுத்த புறப்பட்டுவிட்ட சண்டி குதிரை என்பதைப் போல் ஒரு பிம்பத்தைக் கட்டமைக்க துவங்கி இருக்கிறார்கள். பா.ஜ.க.வின் ஏமாற்று வேலைக் குறித்து, ‘நான் அவன் இல்லை’ என்ற எனது கட்டுரையில் ஏற்கனவே சுட்டிக்காட்டியதைப் போல 1950இல் உயர்ந்த சாதியில் பிறந்த பிரதமர் நரேந்திர மோடியை 1999 இல் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவராக மாற்றிய கபட நாடகத்தின் தொடர் அத்தியாயந்தான் இந்த முதல்வர்கள் தேர்வு. தப்பித்தவறி 2024 தேர்தலில் பா.ஜ.க. ஜெயிக்குமேயானால், தனது சனாதன மெய் முகத்தைக் காட்டத் துவங்கிவிடும்

அதன் பிறகு இந்தியாவில் “மாநிலங்களும் இருக்காது. தேர்தலும் நடக்காது...’ என்று இந்தியத்துவத்தை நேசிக்கின்ற சமத்துவ சமுதாயத்தை விரும்புகிற அத்தனை பேரும் உறுதியாக சொல்கிறார்கள் எனவே பா.ஜ.க.வின் இந்த அடையாள சமூகநீதி சகுனித்தனத்தை இந்தியாவெங்கும் உரக்கப் பேசி மக்களை விழிப்படையச் செய்து ஜனநாயக இந்தியாவைக் காக்க வேண்டிய பெரும் பொறுப்பு நம்மைப் போன்ற உண்மையான ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் இருக்கிறது.



முதலமைச்சர் அவர்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் ”மக்களுடன் முதல்வர்” திட்டத்தினை நேற்று (18.12.2023) தொடங்கி வைத்ததையொட்டி சேலம் மாவட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேலம் மாநகராட்சி தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ”மக்களுடன் முதல்வர்” திட்டத்தின்கீழ் பொதுமக்கள் கணினி மூலம் பதிவு செய்த கோரிக்கை மனுக்களுக்கான ஒப்புகை சீட்டுகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன்,சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. அருள். மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் சீ. பாலச்சந்தர், கூடுதல் ஆட்சியர்(வளர்ச்சி) மரு. அலர்மேல் மங்கை, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, முன்னாள்அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

கோவையைத் தொடர்ந்து

# சேலம் மாவட்டத்தில் “மக்களுடன் முதல்வர்” திட்ட துவக்க விழா!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் - பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

சேலம், டிச. 19 -

மக்களுடன் முதல்வர் முகாமில் பெறப்படும் மனுக்கள் மீது 30 நாட்களுக்குள் உரிய தீர்வு காணப்படும் என இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கோவையைத் தொடர்ந்து சேலம் மாவட்டத்தில் மக்களுடன் முதல்வர் திட்ட துவக்க விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் கார்மேகம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு திட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் பொது மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை அவர் பெற்றார். இதனையடுத்து 34 பயனாளிகளுக்கு தையல் இயந்திரம், மாற்றுத் திறனாளிகளுக்கான சக்கர நாற்காலி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

சேலம் மாவட்டத்தில் 142 இடங்களில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம் மக்களுடன் முதல்வர் முகாமில் பெறப்படும் மனுக்கள் மீது 30 நாட்களுக்குள் தீர்வு எனக் கூறினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்,மக்களுடன் முதல்வர் முகாமில் பெறப்படும் மனுக்கள் மீது 30 நாட்களுக்குள் உரிய தீர்வு காணப்படும் எனக் கூறினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# “தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர்” குறும்படப் போட்டி!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

*சென்னை, டிச.19*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை கொண்டாடும் வகையில் “தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர்” எனும் குழுவின் சார்பில் குறும்பட போட்டி (Short film Competition) மற்றும் சுருள்பட போட்டி (Reels Competition) நடைபெறுகிறது.*

*இது குறித்து அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பு வருமாறு:-*

*தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் எனும் குழு, நூற்றாண்டு விழா நாயகன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ் நாட்டிற்கு ஆற்றிய அரும்பணிகளில் அவரது பரிமாணங்களை போற்றும் வகையில் பல்வேறு முன்னெடுப்புகளை செய்து வருகிறது.*

*அந்த வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில் தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் எனும் குழுவின் சார்பில் குறும்படபோட்டி (Short film Competition) மற்றும் சுருள்படபோட்டி (Reels Competition) நடத்துவது தொடர்பான செய்தி வெளியீடு 31.10.2023 அன்று வெளியிடப்பட்டது. அச்செய்தி வெளியீட்டில் இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்களுடன் கூடிய குறும்படங்கள் மற்றும் சுருள்படங்களை*

*20.12.2023க்குள் அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டது.*

*நிர்வாகக் காரணங்களால் இப்போட்டிகளுக்கான கடைசி தேதி 15.01.2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.*

*குறும்படப் போட்டியில் கலந்துகொள்ள விருப்பமுள்ளவர்கள் தொலைநோக்குச் சிந்தனையாளர் கலைஞர் (உதாரணமாக சமூக நீதி, கல்வியில் புரட்சி, சுகாதார துறையில் புரட்சி, தொழிற்துறை மேம்பாடு, மாநில அரசின் உரிமை, பெண்கள் முன்னேற்றம், கிராமப்புற/ நகர்ப்புற வளர்ச்சி) என்ற தலைப்பில் புதிய குறும்படங்களை (Short film) (அதிகபட்சம் 10 நிமிடங்கள்) உருவாக்கி அதனை விண்ணப்பங்களுடன் 15.01.2024 தேதிக்குள் (shortfilmkalaignar100@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.*

*இதேபோல் சுருள்பட போட்டியில் (Reels) கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் ‘தொலைநோக்குச் சிந்தனையாளர் -கலைஞர்’ எனும் தலைப்பில் புதிய சுருள்படங்களை 30 வினாடிகள் முதல் 1 நிமிடம் வரை இருக்கும் வகையில் உருவாக்கி விண்ணப்பங்களுடன் 15.01.2024 தேதிக்குள் (reelskalaignar100@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.*

*குறும்பட போட்டி (Short film Competition) மற்றும் சுருள்பட போட்டி (Reels Competition) களுக்கான வழிகாட்டி நெறிமுறைகள் https://dipr.tn.gov.in (செய்தி வெளியீடு (Press release) எண்.2179, நாள்:31.10.2023) என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.*

*இவ்வாறு தமிழ்நாடு அரசு செய்திக்குறிப்பில் அறிவித்துள்ளது.*

எழும்பூர் சட்டமன்றத் தொகுதி

# மிக்ஜாம் புயல் மீட்பு நடவடிக்கை - நிவாரணப் பொருட்கள்!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

*சென்னை, டிச. 19*

*எழும்பூர் தொகுதியில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்ட எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் மற்றும் கழகத்தினருக்கு உதவிடும் வகையில் பணியாற்றிய எழும்பூர் தொகுதிக்குட்பட்ட காங்கிரசு, இந்தி யக் கம்யூனிஸ்டு கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மனித நேய மக்கள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் அக்கட்சிகளின் முன்னோடிகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, அக்கட்சிகளைச் சேர்ந்த 500 பேருக்கு, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன், சேத்துப்பட்டு, ஹாரிங்டன் சாலையில் உள்ள சமுதாய நலக் கூடத்தில் நடந்த நிகழ்வில் பரிசுப் பொருட்களை வழங்கினார்.*

*எழும்பூர் தொகுதிக்குட்பட்ட காங்கிரசு கட்சியின் சர்க்கிள் தலைவர்கள் நரேஷ், சூர்யா, ஜாஃபர்; இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் பகுதிச் செயலர் ரஞ்சித்; மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பகுதிச் செயலர் தென்றல் நிசார்; மனித நேய மக்கள் கட்சியின் பகுதிச் செயலர் ஜாஃபர் இக்பால், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பகுதி துணைச் செயலாளர்கள் விஜயகுமார், மண்வீரன் ஆகியோர் முன்னிலையில், மீட்புநிவாரண நடவடிக்கைகளில் துணை நின்று பணியாற்றிய தோழமைக் கட்சியின் நிர்வாகி களுக்கும் முன்னோடிகளுகு கும் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் நன்றி தெரிவித்து பரிசுப் பொருட்களை வழங்கினார்.*

*இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் பகுதிப் பொருளாளர் ந.கலையரசன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், மாவட்டப் பிரதிநிதி மா. காந்தி, அவைத் தலைவர் வெ.மருதன், டி.விஸ்வநாதன், எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் ரா.வெற்றிவேல், எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் முத்து லெட்சுமி, 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், 108 வட்ட இளைஞரணி அமைப்பாளர் கார்த்திக், 108 (அ) வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ் குமார், 108 (அ) வட்டப் பகுதி பிரதிநிதி என்.இளஞ் செழியன், 58 (அ) வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எல்.சுகுமாரன், பாக முகவர் கவிதா உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், முன்னோடிகளும் கலந்து கொண்டனர்.*



எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணி புரிந்தோருக்கு நன்றி தெரிவித்து நிவாரணப் பொருட்களை இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் தி.மு.க. மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘மிக்ஜாம்’ புயலால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகை ரூ.6000/ வழங்கும் பணிகளை துவக்கி வைத்தார் அதனைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தாலுக்கா திருமுல்லைவாயில் நேதாஜி நகர் நியாய விலை கடைக்கு உட்பட்ட நபர்களுக்கு முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ நிவாரண உதவித் தொகை ரூ.6000/ வழங்கினார். அருகில் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், மண்டல குழு தலைவர் அமுதா பேபி சேகர், ஆவடி மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், ஆவடி கிழக்கு பகுதி செயலாளர் பேபி சேகர், மாமன்ற உறுப்பினர் பாலா பிரகாஷ் மற்றும் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்

# கொள்கைக் குன்றம் இனமானப் பேராசிரியர்!

## (பேராசிரியர் 102 ஆவது பிறந்த நாள்)

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூலவர்களில் ஒருவராக விளங்கியவர் பேராசிரியர் அன்பழகனார். கழக வளர்ச்சிக்கும், அதன் செயல்பாட்டிற்கும் வலுவான கொள்கைகளை வகுத்துச் சொல்வதில் வல்லவரான அவருடைய தொண்டு அளப்பரியதாக தொடர்ந்து இருந்தது. தன்மானத்தையும், இனமானத்தையும் ஒருங்கிணைத்து தமிழ்ச் சமுதாயத்திற்கு உணர்வுகளை ஊட்டி வந்த பெருந்தகையாளர் தாம் அப் பெருமகனார்.

தீவிர தேசிய இயக்கமான காங்கிரசில் பெரியார் தொண்டாற்றி வந்த காலத்தில், அவருடன் பேராசிரியரின் தந்தையார் கல்யாண சுந்தரம் என்பவரும் பயணப்பட்டவர். கதர் இயக்கத்தை மயிலாடுதுறை பகுதியில் பரப்பியதோடு, கதர்க்கடை வைத்து வியாபாரம் செய்து வந்ததால், அவருக்குக் கதர்க்கடை கல்யாண சுந்தரம் என்ற அடைமொழிப் பெயரும் உண்டாயிற்று. பிற்காலத்தில் 'காங்கிரசிலிருந்து வெளியேறிப் பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் 'தோற்றுவித்த போது, அவரால் ஈர்க்கப்பட்ட கல்யாணசுந்தரமும் நிழலாகத் தொடர்ந்தார். தமது கதர்க்கடையில்.. பெரியாரின் "குடிஅரசு" ஏடு, திரு.வி.க.வின் "நவசக்தி".. வரதராஜுலு நாயுடுவின் "தமிழ்நாடு" முதலான சுயமரியாதை இயக்கத் தமிழ் உணர்வு மிக்க ஏடுகளை விற்கும் முகவராக விளங்கி வந்த வரலாற்றுக்குச் சொந்தக்காரர் . "காந்தி படமும், கதரும் நாட்டுக்காக:... ஈ.வெ.இராமசாமி பெரியாருடைய படமும், குடிஅரசும், தமிழனுடைய மானத்திற்காக"…. என்று கடையில் மாட்டி வைக்கப்பட்டிருந்த காந்தி, பெரியார் படங்களைப் பற்றிக் கேட்பவர்களுக்குத் துணிச்சலாகப் பதிலளித்த சுயமரியாதை இயக்க முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்தவர் தாம் பேராசிரியரின் தந்தை கல்யாண சுந்தரனார்.

நீதிக்கட்சிக் காலத்தில் இட ஒதுக்கீடு அரசாணை பிறப்பித்த அமைச்சர் எஸ்.முத்தையா முதலியார் அவர்களின் நெருங்கிய உறவினர் கல்யாணசுந்தரம் ஆவார். வைத்தீஸ்வரன் கோயில் அருகில் கொண்டத்தூர் எனும் சிற்றூரில் டிசம்பர் 19, 1922 இல். கல்யாண சுந்தரம், சொர்ணம் ஆகியோரின் மகனாகப் பிறந்தார் இராமையா. அவருடன் திருமாறன், அறிவழகன், இராம் இராமதாஸ், பாலகிருஷ்ணன், மணிவண்ணன் ஆகியோர் உடன் பிறந்தவர்கள் ஆவர்.

தொடக்கக் கல்விக்குப் பிறகு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து இன்டர்மீடியட் (இயற்பியல், வேதியியல், பொருளாதாரம்,) பி.ஏ. ஆனர்ஸ் (தமிழ்). 1946இல் எம்.ஏ; பட்டம் எனத் தொடர்ந்து கல்வியை முடித்தவர் இராமையா. மறைமலை அடிகளாரின் தனித்தமிழ் இயக்கத்தால் பெரிதும் ஈர்க்கப்பட்டவர் அவர்; இராமையா என்ற தமது பெயரை அன்பழகன் என்று மாற்றிக் கொண்டவர்.

குடந்தை மாமாங்கம் எதிர்ப்புப் போரில் சிங்கை கோவிந்தராஜன் தலைமையில் 11வயதிலேயே இராமையா கலந்து கொண்டு "மடமையை வளர்க்காதே, '...மாமாங்கம் போகாதே' என்று பரப்புரை செய்த சிறுவன் ஆவார். 1942 ஆம் ஆண்டு சிதம்பரம் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் மாநாட்டுச் சொற்பொழிவைக் கேட்ட அண்ணாவின் பாராட்டு பெற்றவர்; 1943 ஆம் ஆண்டு சிதம்பரம் நீதிக்கட்சி மாநாட்டில் பெரியார் முன்னால் ஆற்றிய சொற்பொழிவை அவரை ஆட்கொண்டது; 1944 பிப்ரவரி 19, 20 நாள்களில் கும்பகோணம் திராவிட மாணவர் மாநாட்டில் அண்ணா முன்னிலையில், பேராசிரியரின் மடை திறந்த வெள்ளமான அம் மேடைப் பேச்சு அண்ணாவைக் கவர்ந்த சிறப்பான பேச்சாகும். அண்ணாவின் பாராட்டுடன் அச் சொற்பொழிவானது, திராவிட நாடு ஏட்டில் " தமிழா, கேள்" என்ற தலைப்பில் வெளியாகிப் பெருமை படைத்தது.

1943 ஆம் ஆண்டு திருவாரூர் விஜயபுரத்தில் இஸ்லாமிய இளைஞர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த, சிந்து மாநில முன்னாள் முதல்வர் சிக்கந்தர் ஹயாத் நினைவு நாள் விழாவிற்கு, அண்ணா வருகை தந்திருந்தார். அவர் பேசுவதற்கு முன்னால் ஒரு இளைஞரை அறிமுகப்படுத்தி, "என்னுடன் வந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் பேசுவார்" என்று சொல்லிப் பேச வைத்தார். அவர் தான் அன்பழகன். அந்நாளில் மாணவராக இருந்த கலைஞர் திருவாரூர் "தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்" என்ற ஒரு மாணவரமைப்பைத் தொடங்கி நடத்தி வந்த ஓராண்டு கடந்த நிலையில், அதன் ஆண்டு விழாவை நடத்திட எண்ணியிருந்தார். திருவாரூரில் அண்ணா பேசுகிற இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்தார். அப்போதுதான் அன்பழகனார் பேச்சைக் கேட்ட கலைஞர், "தம்மை ஆட்கொண்ட அற்புதச் சொற்பொழிவு "என்று சொல்லுகிறார்.

"அண்ணா அழைத்து வந்திருந்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒருவரை அறிமுகப்படுத்தி பேச வைத்தார். அந்த மாணவர் ஒல்லியான மெலிந்த உருவம் என்றாலும், துல்லியமான செந்தமிழ் பேச்சு ;அணை உடைந்த வெள்ளம் எனத் தடைபடா அருவி நடை; தமிழ் முழக்கம்; இவைகளால் ஈர்க்கப்பட்டுத் தன் வயம் ஆக்கிக் கொண்ட சொற்பொழிவாளர் தாம் பேராசிரியர் "…என்று கலைஞர் அவ்வப்போது பல்வேறு நிகழ்ச்சிகளில் குறிப்பிட்டுள்ளார் என்பதுடன், அடிக்கடி எழுதியும் வந்துள்ளார்.அப்போது தான் கலைஞருக்குப் பேராசிரியர் அன்பழகனைச் சந்திக்கும் வாய்ப்பு முதன் முதலில் கிடைத்தது. என்றும், அந்தச் சந்திப்பில் அவர்களுக்கு இடையில் ஏற்பட்டிருக்கிற நட்பின் காரணமாகத் தான் உருவாக்கிய "தமிழ் நாடு தமிழ் மாணவர் மன்றம்" அழைப்பிற்கு அழைத்துப் பேராசிரியரைப் பேச வைத்தார் என்றும், அப்பொழுதிலே யிருந்து எங்களுக்குள் நட்பு தொடர்ந்தது என்று அடிக்கடி நினைவு கூர்வார் கலைஞர்.

1947 நெல்லையில் தி.க. மாநாட்டில் திராவிட நாடு படத்திறப்பு, கடலூரில் "திராவிட நாடு பிரிவினை" மாநாடு;1948 இல் ஈரோடு திராவிடர்க் கழகச் சிறப்பு மாநாடு; கோவை முத்தமிழ் மாநாடு ; 1949 செப்டம்பர் 17 தி.மு.க தொடங்கப்பட்ட உரை; 1951 ஆம் ஆண்டு பிப்ரவரி சென்னை தீவுத்திடலில் நடந்த தி.மு.க முதல் மாநாடு ; ;தமிழ் இலக்கியத்தில் அரசியல் கருத்துரை எனும் தலைப்பில் குற்றால அருவியாகக் கொட்டிய அவர் பேசிய 1956 இல் நடந்த திருச்சி தி.மு.க மாநாடு என இப்படியான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அவர் நிகழ்த்திய சொற்பொழிவுகள் மிக, மிக நீளும் . கழகப் பொதுக் கூட்டங்கள்; பள்ளி, கல்லூரி ,மன்றக் கூட்டங்கள்; மாநாடுகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உரைகள் ஆகியவை பேராசிரியர் சொற்பொழிவுகள் வரலாற்றில் தனி முத்திரைகள் பதித்து வைத்திருக்கின்றன.

பேராசிரியர் இளம் வயதிலேயே சிறந்த சொற்பொழிவாளராக விளங்கியவர் பேராசிரியருக்குப் போராட்டம், சிறை என்ற நீண்ட சரிதம் படைத்த பக்கங்கள் பல உண்டு. 1956 ஆம் ஆண்டு நேருவுக்குக் கருப்புக் கொடி காட்டிய வழக்கில் ஐந்து நாள் சிறைவாசம்; 1962 ஆம் ஆண்டு விலைவாசி உயர்வுக் கண்டனப் போராட்டத்தில் மூன்று மாதம் சிறைத் தண்டனை; 1964 ஆம் ஆண்டு இந்தித்திணிப்பு எதிர்ப்பு மறியல் போராட்டத்தில் 6 மாதம் சிறைவாசம்; 1976 ஆம் ஆண்டு இந்திரா காந்திக்கு எதிராகக் கருப்புக்கொடி காட்டிய வழக்கு - மத்திய சிறையில் அடைப்பு; 1986 ஆம் ஆண்டு இந்தித் திணிப்புக்கு எதிராக அரசியலமைப்புச் சட்ட நகல் எரித்த போது,சிறை என்பதோடு, அதிமுக ஆட்சியில் சட்டமன்றப் பேரவைத் தலைவர் பி. எச். பாண்டியனால் தீர்மானம் கொண்டு வரப்பட்டுப், பேராசிரியர் உள்ளிட்ட 10 தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி பறிக்கப்பட்டது என்பது சரிதத்தில் பதிவு செய்யப்பட்ட நிகழ்வாகும்; இப்படிக் கழக வரலாற்றில் அவருக்கு அரசியல் போராட்டங்கள் பலவாக நீளும்.




பேராசிரியர் சிறைச்சாலைக்குச் செல்லும்போது அவருடன் ,கலைஞரைப் போலவே, கூடவே புத்தகங்களும் சென்று வரும். "அன்பழகனைச் சுற்றி ஒரே குறள் மயம்; அவர் குறள் ஆராய்ச்சி குறித்து உரையாடும் வாய்ப்பு எனக்குச் சிறையில் கிடைத்திருக்கிறது. திருக்குறளுக்குப் பலர் உரை எழுதி இருக்கிறார்கள் என்றாலும், நுண்ணறிவுடன் மேலும் பல உரைகள் எழுதுவதற்கு வாய்ப்பு தேவை இருக்கிறது என்று அன்பழகன் பேசும்போது தெரியும்"…. இவ்வாறாக அண்ணா அவர்களே பேராசிரியரின் சிறை வாழ்க்கையையும், இலக்கிய நூல்களைப் பற்றியும் சுட்டிக்காட்டி எழுதியிருக்கிறார்.

இனமானப் பேராசிரியருக்கு வாழ்க்கைப் பணிகள் இரண்டு அமைந்திருந்தன. ஒன்று ஆசிரியர் பணி; மற்றொன்று அரசியல் பணி: அத்துடன் எழுத்து, பணியும், பேச்சு பணியும் துணைப் பணிகளாக அவர்அமைத்துக் கொண்டு இருந்தார். பேரறிஞர் அண்ணாவின் இந்தி எதிர்ப்பு உரையை மாயூரம் நகரத்தில் 1938இல் மாணவனாக இருந்தபோது கேட்ட அன்பழகன்; சிதம்பரத்திற்கு வந்த அண்ணா அவர்கள், சி.வி. இராஜகோபாலுடன் அவரது இல்லத்தில் தங்கி, சொற்பொழிவு நிகழ்ச்சிக்கு சென்றபோதும்; 1941 இல் சிதம்பரத்தில் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சி மாநாட்டில் அண்ணா பேசும் முன் தம்மைப் பேசச் சொல்லிஅழகு பார்த்த போதும்;

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ் மன்றச் செயலாளராக இருந்து அண்ணாவை அழைத்து வரச் செய்தபோது பல தொல்லைகள் சந்தித்த போதும்; சென்னைச் சட்டக் கல்லூரியில் கம்பராமாயணம் குறித்து, சொல்லின் செல்வர் இரா.பி. சேது பிள்ளையுடன் சொற்போர் நடத்த வந்த அண்ணாவைச் சந்தித்த போதும், திருவாரூர் நிகழ்ச்சியின் போது அண்ணாவே தம்மை அறிமுகப்படுத்திக் கூட்டத்தில் பேசச் சொல்லிய போதும்; அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில், "ஆற்றோரம்." எனும் தலைப்பில் பல்கலைக்கழகப் புலவர் கா. சு. பிள்ளை அவர்கள் தலைமையில் அண்ணாவின் தமிழ் முழக்கத்தைக் கேட்ட போதும் …….இப்படியான நாள்களில் அண்ணாவை அடிக்கடி சந்தித்த பேராசிரியர், அண்ணாவின் தம்பிகளில் ஒருவராகக் கழகத்தில் தம்மை ஒப்படைத்துக் கொண்டவர்.

**கவிஞர் தமிழ்தாசன்**
*தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்*



"அண்ணா அவர்கள் எங்கே? என்று நாங்கள் தேடினால். அவர் அன்பழகன் வீட்டினை நாடிச் சென்று இருப்பார் என்ற செய்தி கிடைக்கும். அங்கேயே உணவு அருந்தி; உறங்கி, கழகத்தினரோடு உரையாடி அண்ணா கழக முடிவுகள் பலவற்றை எடுத்து இருக்கிறார்" என்றெல்லாம் கூறி அண்ணாவுக்கும், பேராசிரியருக்கும் ஏற்பட்டிருந்த அரசியல், நட்புத் தொடர்புகளை எல்லாம் 1975 இல் பேராசிரியர் பற்றி அவர் எழுதிய " தமிழ்க் கடல் அலை ஓசை" என்னும் நூலில் அணிந்துரையாகப் பட்டியலிட்டுக் கலைஞர் தெளிவுபடுத்தியுள்ளார்.

1944 ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து, டாக்டர் மு. வரதராசனாருடன் பணியாற்றி வந்த பேராசிரியர் அன்பழகன், ஆசிரியர் பணியில் மு.வ அவர்களை வழிகாட்டியாக, ஆசிரியர் பணிகள் துணைக் கொண்டு முன்னேறியவர்.

கழகம் முதன் முதலில் 1957 இல் தமிழக சட்டமன்றத் தேர்தலில் களங்கண்ட போது, பேராசிரியர் சென்னை எழும்பூர் சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றார்.1962 தொகுதி; 1971,1977, 1980 ஆண்டுகளில் சென்னை புரசைவாக்கம் தொகுதி; 1984 பூங்கா நகர் தொகுதி; 1989 அண்ணா நகர் தொகுதி; 1996: 2001; 2006 ஆகிய ஆண்டுகளில் துறைமுகம் தொகுதி என ஒன்பது முறை கழகத்தின் சார்பில் சட்டமன்ற உறுப்பினராக இருந்து மக்கள் பணியாற்றி வந்திருக்கிறார். 1962 இல் எழும்பூர் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் பேரவைத் தேர்தலில் மீண்டும் நின்ற போது, வெற்றிவாய்ப்பு இழந்த அவர்; சென்னை செங்கை ஆசிரியர் தொகுதியில் போட்டியிட்டுச் சட்டமன்ற மேலவை உறுப்பினரானார். 1991 ஆம் ஆண்டு சேப்பாக்கம் தொகுதியில் நின்று போதும் இராஜீவ் காந்தி படுகொலை காரணமாக வெற்றி வாய்ப்பு இழந்தார்.. 1967 ஆம் ஆண்டு திருச்செங்கோடு நாடாளுமன்றத் தொகுதியில் காளியண்ணன் கவுண்டரை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி பெற்று மக்களவை உறுப்பினராகி மக்கள் பணியாற்றி வந்த பெருமை அவருக்குண்டு.ஈழத் தமிழர்களுக்காக கலைஞரோடு தாமும் சட்டமன்ற உறுப்பினர் பொறுப்பை 1983 இல் உதறினார்.

அத்துடன் கலைஞருடைய அமைச்சரவையில் மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் சமூக நலத்துறை அமைச்சராகவும் (1971-76), ஒருங்கிணைந்த கல்வித்துறை மந்திரியாகவும் (1989-91), கல்வித்துறை அமைச்சராகவும் (1996-2001), நிதியமைச்சர் ஆகவும் (2006-2011) செயல்பட்டுக் கலைஞரின் அமைச்சரவைக்குத் தமது சிறப்புகளைச் சேர்த்து உள்ளார்.சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் துணைத் தலைவராகவும், ஆளுங்கட்சியில் முன்னவராகவும் இருந்து சட்டமன்றப் பணியாற்றி வந்துள்ளார். பாராளுமன்றம், சட்டமன்றத்தில் மக்களின் உண்மையான பிரதிநிதியாகவும்,தாம் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகம் எனும் இயக்கத்தின் நம்பிக்கை வாய்ந்த தளகர்த்தராகவும் பணிபுரிந்து வந்த சான்றாண்மை மிக்கப் பெருமை பேராசிரியர்க்குண்டு.

கழகத்தில் தொழிலாளர் அணிச் செயலாளராகவும் பொருளாளராகவும் பொறுப்பேற்று செயல்பட்டு வந்தவர். 10.6.1978, 25.6.1983, 2.2.1988, 2.6.1992, 27.7.1997, 8.4.2000, 2.4.2003, 27.12.2008, 9.1.2014 , 28.8.2018 ஆகிய நாள்களில் நடந்த கழகப் பொதுக்குழு மூலம் பேராசிரியர் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றி வந்தவர்.

பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது, ஒன்றிய அரசு அவரைத் தேர்வு செய்ததன் பேரில்,,1968 ஆம் ஆண்டு இலண்டனில் நடைபெற்ற காமன்வெல்த் மாநாட்டில் தி.மு.க சார்பாகக் கலந்து கொண்டார், வழியில் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா முதலான நாடுகளையும், பார்த்துவிட்டு, அமெரிக்காவில் மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த அண்ணாவையும் சென்று கண்டு நலம் விசாரித்தார்.

நெருக்கடிக் கால நிலையில் கழகத்திற்குச் சோதனை ஏற்பட்ட போது,ஒன்றிய மாநில அரசியல் சக்திகள் கலைஞரைத் தனிமைப்படுத்தவும், வழக்குகள் போட்டு ஒடுக்க நினைத்த போதும் சரி; அற்ற குளத்து அறுநீர் பறவைகளாக மாறி நாவலர் நெடுஞ்செழியன், இராஜாராம், ப.உ.சண்முகம், மாதவன், பண்ருட்டி இராமச்சந்திரன், சத்யவாணி முத்து போன்றோர் இடம்பெயர்ந்து எம்ஜிஆருடன் சென்றபோதும் சரி: இன்னும் சில துரோகிகள் பிரிந்த போது செங்குத்தாகக் கழகம் பிளந்தது என்று ஏடுகள், ஊடகங்கள் எழுதிய போதும் சரி; ஈழத் தமிழர் விவகாரத்தில் வர்மா கமிஷன்; ஜெயின் கமிஷன் போன்றவை போட்டுக் கழகத்திற்கு எதிராக நெருக்கடி கொடுத்த போதும் சரி; தாம் எந்த விதத்திலும் ஆடாமல் ,அசையாமல் ; கலைஞருக்கு உற்ற துணையாக, அண்ணனாக இருந்து, இயக்கத்தைக் காப்பாற்றிட நின்ற பெரும் பேறு பேராசிரியருக்கு உண்டு. புருடஸ்களாக மாறிச் சிலர் கழகத்தைப் பிளந்து சென்றபோதும், கலைஞரோடு நிழலாக இருந்து காப்பாற்றி, களப்பணி யாற்றிடத் துணை புரிந்தவர் பேராசிரியர். அண்ணாவால் உருவாக்கப்பட்ட பல இலட்சம் தொண்டர்கள் கொண்ட இந்த பேரியக்கத்திற்கு அரசியல் சோதனைகள் பல நேர்ந்த நேரத்தில், கலைஞரின் கவலைகளுக்கும், துன்பத்திற்கும் அருமருந்தாகவும், அணுக்கத் தொண்டர்களாகவும் இருந்தவர்கள் பேராசிரியரும் முரசொலி மாறனும் ஆவார்கள்.

கலைஞர் அவர்கள் காலங் கருதி எடுத்த இந்திய ஒன்றிய மற்றும் மாநில அரசியல் கருத்தொற்றுமை முடிவுகளுக்கு உறுதுணையாக நின்றவர் நமது பேராசிரியர். இயக்கத்திற்குப் பல்வேறு கள நடவடிக்கைகள் மூலம் வலுப்படுத்தவும், எதிர்காலம் கருதிக் கலைஞர் எடுத்த அரசியல், சமுக, பொருளாதார, சட்டத் திட்டங்கள், சீர்திருத்த நடவடிக்கைகளால் உறுதிப்படுத்திடவும், தி.மு.க.வின் பொதுச் செயலாளராகப் பத்து முறை தொடர்ந்து இருந்து பக்கபலமாகப் பணியாற்றி வந்த பெருமை பேராசிரியரைச் சாரும்.

கொள்கை முழக்கங்கள் முழங்கிட திராவிட இயக்க ஏடுகள் பல வந்த போது, பேராசிரியரும் 1948 ஆம் ஆண்டு புதுவாழ்வு, செண்பகம் எனத் தொடங்கி நடத்தி வந்தார் எனினும், பொருளாதா நெருக்கடியால் தொடர்ந்து நடத்த இயலாமல் கைவிடப்பட்டன. உரிமை வாழ்வு, கலையும், வாழ்வும்; விடுதலைக் கவிஞர், வகுப்புவாரி பிரதிநிதித்துவம், தமிழ் கடல் அலை ஓசை, சட்டம் யாருக்காக ?;இனம் ,மொழி வாழ்வுரிமைப்போர், தமிழர் திருமணமும், இனமானமும்; இவர்தான் பெரியார் திராவிட இயக்கத்தின் தோற்றமும் தேவையும் மாமனிதர் அண்ணா என்பன போன்ற கழகம் கலைஞரும் தமிழின காவலர் இன முழக்கம் திராவிடத்தின் குரல் தமிழில் மூச்சு என்பன போன்ற எழுத்தாக்கங்கள் சொற்பொழிவு பதிவுகளும் இன்னும் பிற நூல்கள் வெளியாகி வந்துள்ளன.

ஆர்ப்பரிக்கும் அலைகடல் அடக்குமுறை கண்டு அஞ்சாதவர்; பதவிகள் என்ற மத்தாப்பு வெளிச்சத்திற்கு மயங்காதவர்; சரணாலயங்களைத் தேடிச் செல்லும் சந்தர்ப்பவாதப் பறவைகள் போல இல்லாதவர். அவர் கொள்கை மாறாக் குன்றமாக விளங்கி யவர். சூரியன், சந்திரன் போலப் பேராசிரியர்; கலைஞரையும், கழகத்தையும் விட்டுப் பிரிந்தாரில்லை; சஞ்சலம் கொண்டும் வாழ்ந்ததில்லை.

"பேராசிரியர் என் போன்றோருக்கு எழுதுகிறார்; நான் மக்களுக்காக எழுதுகிறேன். நான் அடிக்கடி கூறுவதைப்போல, அத்தகைய அறிவும், ஆற்றலும் உள்ளவர் பேராசிரியர்". என்று கலைஞர் தனது வரலாற்றுப் பேழையில் பேராசிரியர் பற்றிப் பதிவு செய்திருக்கிறார்.

பெரியார் என்றால் ஈரோட்டு பகுத்தறிவுப்பகலவனைக் குறிக்கும். அண்ணா என்றால் காஞ்சித் தலைவனைத்தான் குறிக்கும். கலைஞர் என்றால் திருக்குவளை என்ற தியாகத் தலைவனை மட்டுமே குறிக்கும். அதைப்போலவே, பேராசிரியர் என்றால் அது அன்பழகனாரை மட்டுமே குறிக்கும். அப்படிப் பட்ட திராவிட இயக்க தூண்களில் ஒருவராகக் கருதப் பட்ட பேராசிரியர் இனமான பாசறையில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளவர்.

பேராசிரியர் பேராலே சென்னை அறிவாலயத்தில் நூலகமும், அவருடைய துணைவியார் வெற்றிச் செல்வி அன்பழகன் பெயரில் கண் மருத்துமனையையும் உருவாக்கித் தந்திருப்பவர் கலைஞர் அவர்கள். அதைப் போல அவரின் பெருமைகளைப் போற்றும் விதமாகக் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள், பேராசிரியர் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி அவரது பெருமைகளைப் போற்றிடக் கடந்தாண்டு கழகத்தின் சார்பில் 100 பொதுக்கூட்டங்கள், கவியரங்கங்கள் மாநில முழுவதும் நடத்தப்பட்டன. அவரது உருவப் படத்திற்குப் புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது. இனமான பேராசிரியர்க்கு தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித்துறை செயல்படும் டி.பி.ஐ வளாகத்தில் இனமான பேராசிரியர் அவர்களின் திருஉருவுச்சிலை நிறுவி,

அந்த வளாகத்திற்குப் பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம் என்று அழைக்கப்பட ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கற்றல், கற்பித்தல், ஆசிரியத்திறன் மேம்பாடு, தலைமைத்துவம், மாணவர்ள வளர்ச்சி எனப் பன்முக வளர்ச்சியினை வெளிப்படுத்தும் பள்ளிகளுக்குப் பேராசிரியர் பேரில் விருதுகள் வழங்க.. பிறப்பித்திருக்கிறார். அதனை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி செயல்படுத்தி வருகிறார். வணிக வளாகத்தில் பேராசிரியர் சிலை நிறுவப்பட்டு இருக்கிறது .சென்னை நந்தனத்தில் உள்ள ஒருங்கிணைந்த நிதித்துறை வளாகத்தில் பேராசிரியர் சிலை நிறுவி முதல்வர் தளபதி அவர்கள் திறந்து வைத்தும். பேராசிரியர் அன்பழகன் மாளிகை எனவும் பெயரைச் சூட்டி உள்ளார் .அவர் படைத்த நூல்களை நாட்டுடைமை ஆக்கி, நூல் உரிமைத்தகையையும் பேராசிரியர் குடும்பத்திற்கு வழங்கியுள்ளார். திராவிட இயக்கத்திற்கும் அப்பழுக்கற்ற பொதுவாழ்வுக்கும் புகழ்சேர்க்கும் வகையில் ரூபாய் 7,500 கோடி மதிப்பில் "பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்" ஒன்றினை அறிவித்துச் செயல்படுத்திப்பெருமைப் படுத்தி உள்ளார்.

1945 ஜனவரி 21 அன்று பெரியார் தலைமையில் பேராசிரியர் அன்பழகன் வெற்றிச்செல்வி ஆகியோரது திருமணம் சிறப்பாக நடைபெற்றது செந்தாமரை, மணமல்லி என்ற மகள்களுக்கும் அன்புச்செல்வன் என்ற மகனுக்கும் பெற்றோரானார்கள். பேரன் வெற்றியழகன் வில்லிவாக்கம் சட்டமன்றத்தொகுதி உறுப்பினராகப் பணியாற்றி வருகிறார்.

"முதலில் நான் மனிதன்; இரண்டாவது நான் அன்பழகன்: மூன்றாவது நான் சுயமரியாதைக்காரன்; நான்காவது நான் பேரறிஞர் அண்ணாவின் தம்பி! ஐந்தாவது கலைஞரின் தோழன்! இந்த உணர்வுகள் என் உயிர் உள்ளவரை என்னோடு இருக்கும் "'….என்று தன்னைத்தானே முன்மொழிந்து கொண்டவர்தான் பேராசிரியர். கொடியையும் கொள்கையையும் கட்டிக் காத்த கலைஞருடன் நடைபோட்டு வந்தவர்தான் இனமானப் பேராசிரியர். அவரைப் போற்றும் வகையில், இன்று அவரது 102ஆவது பிறந்தநாளில் நினைவு கூர்வோம்!

பேராசிரியர் வாழ்க! அவரது புகழ் ஓங்குக!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, வேளச்சேரி, சக்தி விஜயலட்சுமி நகரில், மிக்ஜாம் புயலால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத் தொகை ரூ.6000/ வழங்கும் பணிகளை துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தாலுக்கா மாதர் பாக்கம் நியாய விலை கடைக்கு உட்பட்ட 1071 நபர்களுக்கு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி நிவாரண உதவித் தொகை ரூ.6000/ வழங்கினார். உடன் மாவட்ட செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ , பாரளுமன்ற உறுப்பினர் கே.ஜெயக்குமார், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர். துரைசந்திரசேகர், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, மாவட்ட வருவாய் அலுவலர் ராஜ்குமார், இணைப்பதிவாளர் சண்முகவள்ளி, மு.மணிபாலன், பா.செ.குணசேகரன், ப.வெங்கடாசலபதி, கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், ஜி.ஸ்டாலின், ஜெ.மோகன்பாபு, மீனவரணி கே.ஆறுமுகம், டி.மணி, எஸ்.ராமஜெயம், பா.முத்துசாமி, ஊராட்சிமன்றத் தலைவர் சீனிவாசன், சிட்டிபாபு, லாரன்ஸ், க.பரத்குமார், மணிகண்டன், மனோஜ்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### இணைய வழி மூலமாகவும்

# மாதாந்திர ஆவின் பால் அட்டை!

## ஆவின் நிர்வாகம் அறிவிப்பு!

*சென்னை, டிச.19*

எளிய நடைமுறையில் காகிதமில்லா ஆவின் மாதாந்திர பால் அட்டை அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக ஆவின் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இது குறித்து அதன் அறிவிப்பு வருமாறு:

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் (ஆவின்) சமன்படுத்தப்பட்ட பால், நிலைப்படுத்தப்பட்ட பால், டிலைட் பால் மற்றும் நிறை கொழுப்பு பால் ஆகிய வகைகளை பால் அட்டை மூலம் நுகர்வோர்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது.

சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் மாதாந்திர பால் அட்டை மூலம் நாளொன்றுக்கு சுமார் 4.75 இலட்சம் லிட்டர் அளவில் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பால் அட்டை விற்பனையை ஊக்குவிக்கும் வகையிலும் மற்றும் எளிய நடைமுறையில் காகிதமில்லா பால் அட்டையை பொதுமக்களுக்கு வழங்கும் வகையில் ஆவின் வட்டார அலுவலகங்கள் மூலமாக இணையதளத்தில் பதிவு செய்து தரும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் இணையதளம் மூலமாக பதிவு செய்யும் பொழுது அவர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும். அக்குறுஞ்செய்தியை சம்பந்தப்பட்ட ஆவின் டெப்போக்களில் காண்பித்து அவர்களுக்கு உண்டான பால் வகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

எனவே பொதுமக்கள் அனைவரும் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளவாறு ஆவின் வட்டார அலுவலகங்களுக்கு நேரடியாக சென்றும் மற்றும் புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இணைய வழி மூலமாகவும் மாதாந்திர பால் அட்டையினை பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருத்தணி ஒன்றியம் சத்திரஞ்செயபுரம் ஊராட்சி சீனிவாசபுரம் கிராமத்தில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை செயல்பட்டு வருகிறது இந்த நிலையில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அப்பள்ளியில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவு தயாரிக்கும் சமையலறையை ஆய்வு மேற்கொண்டு பள்ளி மாணவர்களுக்கு உணவு பரிமாறினார். அருகில் ஒன்றிய கழக செயலாளர் ஆர்த்தி ரவி, மாவட்ட பிரதிநிதி ஷெரீப் உள்பட ஆசிரியர்கள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சங்ககிரி சி.வீரமணி
### டிசம்பர் 19 (2004)



மாணவப் பருவத்திலிருந்து பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் மீது ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

கோவை வேளாண் பல்கலைக் கழகத்தில் தேர்வுக்குழு உறுப்பினர், சேலத்தில் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் இயக்குநர், பூமி தான வாரியத்தில் உறுப்பினர், தோல் பதனிடும் தொழிலாளர் நல வாரிய உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

1968ஆம் ஆண்டு சங்ககிரி இடைத்தேர்தலில் போட்டியிட்டு, சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று, சிறப்பாக மக்கள் நலப் பணியாற்றி அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2023) கோயம்புத்தூரில் நடைபெற்ற விழாவில், காந்திபுரம் மத்திய சிறைச்சாலை வளாகத்தில் 165 ஏக்கர் பரப்பளவிலான செம்மொழிப் பூங்காவிற்கு, முதற்கட்டமாக 45 ஏக்கர் பரப்பளவில் 133.21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள செம்மொழிப் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பி.ஆர்.நடராஜன், அந்தியூர் செல்வராஜ், கு.சண்முகசுந்தரம், சட்டமன்ற உறுப்பினர் திருமதி. வானதி சீனிவாசன், கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி கல்பனா ஆனந்தகுமார், முதல்வரின் முகவரி திட்ட சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், மக்களுடன் முதல்வர் சிறப்புப் பணி அலுவலர் ப.மதுசூதன் ரெட்டி, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் மா. சிவகுரு பிரபாகரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அதி கன மழையால் பாதிக்கப்பட்டுள்ள தென் மாவட்டங்களில்

# உடனடியாக நிவாரணப் பணிகளில் ஈடுபடுவீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - கழக முன்னணியினருக்கு வேண்டுகோள்!

சென்னை, டிச. 19 -

அதி கன மழையால் பாதிக்கப்பட்டுள்ள தென் மாவட்டங்களில் கழக முன்னணியினர் உடனடியாக நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிட வேண்டும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குமரி அருகே வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக நெல்லை, தூத்துக்குடியில் 31 ஆண்டுகளுக்கு பிறகு கனமழை கொட்டி வருகிறது. தென்காசி, குமரி, நாகர்கோயில் மாவட்டத்திலும் விடிய விடிய மழை பெய்தது. தூத்துக்குடியில் 21 மணி நேரத்துக்கும் மேலாக வெளுத்து வாங்கிய கன மழை பெய்து வருகிறது. இதனால் சாலைகள், வீடுகளில் வெள்ளம் புகுந்தது. பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இதையடுத்து நெல்லை, தூத்துக்குடி, குமரி, தென்காசி மாவட்டங்களுக்கு நேற்று முன்தினம் பொது விடுமுறை அறிவித்து உத்தரவிடப்பட்டுள்ளது. கன மழையால் பள்ளி, கல்லூரிகள், தனியார் நிறுவனங்கள், வங்கி, நிதி நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்களுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டது.

கனமழை காரணமாக சிவகங்கை, தேனி, ராமநாதபுரம், விருதுநகர் மாவட்ட பள்ளிகளுக்கு நேற்று விடுமுறை அறிவிக்கப்பட்டது. கொடைக்கானல் வட்டத்தில் உள்ள பள்ளிகளுக்கும் விடுமுறை அறிவிக்கப்பட்டது. தூத்துக்குடி மாவட்டம் திருவைகுண்டத்தில் 61 செ.மீ. மழை கொட்டித் தீர்த்ததால் வெள்ளத்தில் மிதக்கிறது.

கடந்த 24 மணி நேரத்தில் தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினத்தில் 93.2 செ.மீ அதி கனமழை பதிவாகி உள்ளது. தமிழ்நாட்டின் வரலாற்றில் 24 மணி நேரத்தில் பெய்த 2வது அதிகபட்ச மழைப்பொழிவாக இது பதிவாகியுள்ளது. இதற்குமுன் 1992ம் ஆண்டு திருநெல்வேலியில் உள்ள காக்காச்சியில் 96.5 செ.மீ மழை பதிவாகி இருந்தது.

இந்நிலையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வேண்டிய மீட்புப் பணிகளையும் நிவாரண ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழக முன்னணியினரை கேட்டுக்கொண்டுள்ளார்.

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை வருமாறு: -

**தென் மாவட்டங்களில் பெய்துள்ள அதிகனமழையால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் விரைந்து இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிட, அமைச்சர்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளிட்ட கழக அமைப்புகளில் உள்ள அனைத்து நிர்வாகிகளும் அவர்களது பகுதியில் மக்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கு உதவிட வேண்டும்; நிவாரணப் பணிகளில் ஈடுபடும் அரசு அதிகாரிகளுக்குத் துணை நிற்க வேண்டும் என உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2023) கோயம்புத்தூர் மாவட்டம், ஆவாரம்பாளையத்தில், அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்றுசேரும் வகையில் ”மக்களுடன் முதல்வர் என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக மக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று, மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினை பார்வையிட்டார். உடன் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, முதல்வரின் முகவரி திட்ட சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், மக்களுடன் முதல்வர் சிறப்புப் பணி அலுவலர் ப. மதுசூதன் ரெட்டி, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும் எளிதாகவும் சென்று சேரும் வகையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது!

# ‘மக்களுடன் முதல்வர்’ - அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் மகத்தான திட்டம்!

## சேலத்தில் - திட்டத்தினைத் தொடங்கி வைத்து - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சேலம், டிச.19-**

**அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்றுசேரும் வகையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ள “மக்களுடன் முதல்வர்” திட்டம் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையிலான மகத்தானதிட்டமாகும் என்று - சேலம் மாவட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் “மக்களுடன் முதல்வர்” திட்டத்தினைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் அவர்கள் “மக்களுடன் முதல்வர்” திட்டத்தினை இன்றைய தினம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் “மக்களுடன் முதல்வர்” திட்டத்தினை, நேற்று (18.12.2023) சேலம் மாநகராட்சி, தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்கில் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிக்குப் பின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் அரசின் சேவைகள் பொதுமக்களை விரைவாகவும், எளிதாகவும் சென்றுசேரும் வகையில் தொடங்கி வைக்கப்பட்டுள்ள “மக்களுடன் முதல்வர்” திட்டம் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையிலான மகத்தான திட்டத்தினை இன்றைய தினம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொடங்கி வைத்துள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம் பொதுமக்கள் அதிகமாக அணுகும் 13 அரசு துறைகள் கண்டறியப்பட்டு, அத்துறைகள் சார்ந்த கோரிக்கைகளை பொதுமக்கள் எவ்வித சிரமமுமின்றி ஒரே இடத்தில் விண்ணப்பிக்க ஏதுவாக “மக்களுடன் முதல்வர்” திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் கீழ், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிகளைச் சுற்றியுள்ள கிராம பஞ்சாயத்து பகுதிகளில் இத்திட்டம் முதற்கட்டமாக சிறப்புடன் செயல்படுத்தப்படவுள்ளன. இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் உள்ள நகர்ப்புற உள்ளாட்சிகளில் முதற்கட்டமாக 1,745 சிறப்பு முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இம்முகாமில் சேர்க்கப்பட்டுள்ள 13 துறைகளின் மூலம் வழங்கப்படும் சேவைகளின் விவரங்கள் பொதுமக்களின் பார்வைக்காக முகாம் நடைபெறும் இடங்களில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும், இம்முகாம்கள் நடைபெறும் இடங்களில் பொதுமக்களுக்கு சேவை வழங்கும் 13 துறைகளின் சார்பில் மனுக்களை பெற துறைவாரியாக தனித்தனி மேசை முகப்புகள் பொதுமக்களின் மனுக்களைப் பெறுவதற்கான அதற்குரிய அலுவலர்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதுதவிர, இம்முகாம்களில் இணையவழியிலும் விண்ணப்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### மனுக்கள் மீது 30 நாட்களில் தீர்வு!

சேலம் மாவட்டத்தில் இன்று (18.12.2023) முதல் 06.01.2024 வரை 16 நாட்களில் 142 முகாம்களை நடத்த உரிய இடங்கள் தேர்வு செய்யப்பட்டு பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இம்முகாமானது காலை 10 மணி முதல் மாலை 3 மணி வரை நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இம்முகாமில் பெறப்படும் மனுக்கள் மீது 30 நாட்களில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்களைப் பரிசீலனை செய்ய முகாம் கண்காணிப்பு அலுவலர்கள் மற்றும் முகாம் பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, இம்முகாமில் கலந்துகொண்டு பொதுமக்கள் பயன்பெறலாம்.

இவ்வாறு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து, சேலம், தொங்கும் பூங்கா பல்நோக்கு அரங்கில் “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் கீழ் இன்று காலையில் பெறப்பட்ட மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு உடனடியாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையில் 5 நபர்களுக்கு விலையில்லா மூன்று சக்கர சைக்கிள், காதொலிக் கருவிகள், மடக்கு நாற்காலியும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையில் 5 நபர்களுக்கு விலையில்லா தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டது.

மேலும், தொழிலாளர் திறன் மேம்பாட்டுத் துறையில் இயற்கை மரண நிவாரணத் தொகை ஒரு நபருக்கும், கூட்டுறவுத் துறையில் தொழில்முனைவோர் கடனுதவி மற்றும் சிறுதொழில் கடனுதவி 5 நபர்களுக்கும், வருவாய்த் துறையில் வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ், குடியிருப்புச் சான்றிதழ்கள் 5 நபர்களுக்கும், மின்சாரத் துறையில் மின் இணைப்புப் பெயர் மாற்றம் 4 நபர்களுக்கும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் சொத்து வரி பெயர் மாற்றம் 7 நபர்களுக்கும் என மொத்தம் 32 நபர்களின் மனுக்களுக்கு உடனடித் தீர்வு காணப்பட்டு சான்றிதழ்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் செ.கார்மேகம், மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் இரா. இராஜேந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம், மாநகராட்சி ஆணையாளர் சீ. பாலச்சந்தர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு.அலர்மேல் மங்கை, மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, முன்னாள் அமைச்சர் டி.எம். செல்வகணபதி, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.12.2023) கோயம்புத்தூர் மாவட்டம், ஆவாரம்பாளையத்தில், அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்றுசேரும் வகையில் ”மக்களுடன் முதல்வர் என்ற புதிய திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக, மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டு விவரங்களை கேட்டறிந்தார். உடன் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, முதல்வரின் முகவரி திட்ட சிறப்பு அலுவலர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், மக்களுடன் முதல்வர் சிறப்புப் பணி அலுவலர் ப. மதுசூதன் ரெட்டி, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்தி குமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களை கழக ஆதிதிராவிடர் நலக்குழுச் செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி நேரில் சந்தித்து சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையத்தில் நடைபெறவுள்ள தி.மு.க. இளைஞர் அணி மாநாட்டிற்கு தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் ரூ. 25,00,000/ (இருபத்தைந்து இலட்சம்) நிதி வழங்கினார். உடன் தி.மு.க ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர்கள் மருதூர் ராமலிங்கம், வி.பி.இராஜன், துணைச் செயலாளர்கள் பி.துரைசாமி, ஆரூர் எஸ்.இராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.

# இளையோர் ஆசிரியர்
# நம் காலத்தில் கலைஞர்!

**■ நீரை.மகேந்திரன்**

முத்தமிழறிஞர் கலைஞரின் எழுத்துகளில், பேச்சுகளில், அவரது ஆளுமைப் பண்புகளில் இருந்து பல கோணங்களில் பலரும் பேசி இருக்கின்றனர். அவர்கள் கவனிக்கத் தவறியது அல்லது கலைஞர் என்கிற மாமனிதரின் இயக்கவியல் பண்புகளில் ஒன்றாக நான் கவனிப்பது அவருடைய ஆசிரியர் பண்பு.

கடந்த வாரத்தில் அதைத் தொட்டிருந்தாலும், அவருக்குள் இழையோடி இருந்த இடதுசாரித் தத்துவ விசாரணை, ஞானம் ஆகியவற்றைத் தனது மாணவர்களுக்கு அவர் எடுத்துவைக்கும் பாங்கும் சுவை மிகுந்தது. இடதுசாரி சிந்தனை மரபுக்கு இளைஞர்களைத் தயார் செய்து அனுப்பும் பட்டறையோ என்கிற அளவுக்கு, அவர் எழுத்துகள் ஆச்சர்யம் தருகின்றன.

தி.மு.கழகம் தொடங்கப்பட்ட காலங்களில் பேரறிஞர் அண்ணா மூத்தவராகவும், மற்றவர்கள் இளையவர்களாகவும் இருந்தபோது, அண்ணாவிடம் வெளிப்பட்ட பண்பு இளையோர்களை தம்பியாக அனுசரித்தது. கலைஞரின் தலைமைக் காலம் என்பது கிட்டத்தட்ட அவருடைய சமகாலத் தோழமைகளுடன் பயணிப்பது மட்டுமல்ல, முழு முற்றாக ஒரு புதிய தலைமுறையைக் கட்சிக்குக் கொண்டு வருவது, அரசியல் மயப்படுத்துவது என்கிற சவால்கள் இருந்தன.

## கட்சியில் உருவான ஜனநாயகம்

1950-களில் அல்லது அதற்கு முன்னர் எழுந்த அமைப்பியல் நோக்கம் அதன் தீவிரத்தன்மைகளில் இருந்து, 1980-களில் மெல்ல விடுபடத் தொடங்கும் காலத்தில், தி.மு.கழகத்துக்குப் புதிய ரத்தத்தை அவர் கொண்டு வந்தது வியப்பே.

அப்படி வீரியமாக வந்தவர்களே அரசியல் களத்தில், கொள்கைப் பிடிப்புக் கொண்ட, கழகத்தைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் தூண்களாக நிற்பதைக் காணலாம். அதற்கு ஒரு தலைவனாகக் கட்சியை வழிநடத்துவது மட்டும் போதுமானதாக இருந்திருக்க முடியாது. ஒரு வழிகாட்டுதலுடன் நின்று கொண்டிருக்க வாய்ப்பில்லை.

தேர்தல் அரசியல் கட்சிகளில் வெளிப்படும் மேலிருந்து கீழாக அதிகாரத்தை நிலைநாட்டுதல் என்கிற மரபு தி.மு.கழகத்தில், பேரறிஞர் அண்ணா காலத்திலே உடைக்கப்பட்டது என்றாலும், கலைஞர் காலத்தில் அது மேலும் ஜனநாயகம் கொள்கிறது. கிளைக் கழகங்களில் எடுக்கப்படும் முடிவு, தலைமைக் கழகம் வரையும் எதிரொலிக்கும் வகையிலான கட்சிக் கட்டமைப்பைத் தக்க வைப்பது கலைஞரின் முன் மிகப் பெரிய சவாலாக இருந்தது. அதில்தான் அவர் வெற்றி பெற்றார்.

அதையொட்டியே தி.மு.கழகத்தில் புதிய புதிய அணிகள் உருவாகின. இளைஞர் அணி போல, ஒவ்வொரு துறை சார்ந்தும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் , அவர்களைப் பங்களிப்புச் செய்ய வைக்கும் பெரும் பணியை எடுக்கிறார். இந்தப் பண்பு இடதுசாரி அரசியல் கட்சிகளின் கூறு.

கடந்த வார கட்டுரையில் குறிப்பிட்டதைப் போல், அவர் “பொலிவிய சாகசக்காரரை ஏகாதிபத்தியத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற வேள்வியில் ஈடுபடுகிறார்” என்று குறிப்பிடுவது அவரின் இடதுசாரி சாய்முகம் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?


2007-ஆம் ஆண்டு நெல்லை மாநாடு சமயத்தில், அவர் எழுதிய கட்டுரைகளில் “இளைஞர்கள் புகழ்மிகு வரலாற்றின் பொன்னேடுகள்” என்கிற ஒரு கட்டுரையில், அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

“இந்தக் கட்டுரை வரிசையினை நான் ஒன்றும் இளைஞர்களைப் பற்றி எழுத வேண்டும் என்ற திடீர் அக்கறை காரணமாக எழுதவில்லை. இளைஞர்களால்தான் லட்சிய வெறியோடு எதையும் சாதிக்க முடியும் என்பதை, அவர்கள் இந்தப் பரந்த உலகில் பல்வேறு நாடுகளில், இளம் வயதில் பல சாதனைகளைப் புரிந்து இருக்கிறார்கள் என்ற சான்றுகள் என் நெஞ்சில் நிழல் படங்களாக விரிந்து கொண்டிருப்பதால்தான் அவற்றை இதுபோன்ற நேரங்களில் நினைவுபடுத்துகிறேன். நான் தரும் சரித்திர குறிப்புகள் வளரும் சமுதாயத்திற்குப் புதிய ஊக்கத்தையும் உத்வேகத்தையும் அளிக்கும்” என்கிறார். அதில்தான் அவர் தத்துவச் சிந்தனைகளை முன்வைக்கிறார்.

**‘இந்த மகிழ்ச்சியைக் கொண்டாட, மாநாட்டுப் பந்தலில் குழுமி இருப்போர் அனைவரும் எழுந்து நின்று தொடர்ந்து கரவொலி செய்யுங்கள்!’**

## நெல்சன் மண்டேலா

1990-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் 11-ஆம் தேதி கழகத்தின் மாநாடு திருச்சியில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தொண்டர்கள் வெள்ளம் அலை கடலெனத் திரண்டு குழுமி இருக்கிறது. கலைஞர் ஒலிப்பெருக்கி முன் வந்து நிற்கிறார்.



‘‘தமிழ்ப் பெருங்குடி மக்களே.. கழக உடன்பிறப்புகளே... எல்லையற்ற மகிழ்ச்சியை ஏந்தி வந்துள்ள செய்தி ஒன்று” என தென்னாப்பிரிக்க நாட்டில் 27 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த கறுப்பர் இனத் தலைவர் நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்பட்ட செய்தியைப் பகிர்ந்து கொள்கிறார். ‘இந்த மகிழ்ச்சியைக் கொண்டாட, மாநாட்டுப் பந்தலில் குழுமி இருப்போர் அனைவரும் எழுந்து நின்று தொடர்ந்து கரவொலி செய்யுங்கள்’ என்கிறார். அவர் ‘போதும் போதும்’ என்கிற வரை கரவொலி ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

இந்தக் குறிப்பினை வாசிக்கிறபோது, என் அறிவுக்கு எட்டிய வகையில், நான் அறிந்த மேடைகளில் பரந்துபட்ட பார்வையுடன், உலகத் தலைவர்களின் வாழ்வை ஒரு நொடியில் லட்சம் பேருக்குக் கடத்தும் ஆற்றல் கலைஞரிடம் இருப்பதாக உணர்கிறேன். பிற்பாடு நெல்சன் மண்டேலா வரலாற்றையும் அவர் விரிவாக இளைஞர்களுக்குப் பதிவு செய்கிறார்.

## சாக்ரடீஸும் பிளேட்டோவும்

அவருக்கு மிகப் பிடித்தமான தத்துவவாதிகளில் ஒருவர் சாக்ரடீஸ். அவரைக் குறித்து, இப்படிச் சுவைபட விளக்குகிறார்.

‘ஏதென்ஸ் வழங்கிய கிரேக்கத்து அறிவு கிழவர் சாக்ரட்டீஸ்’ என்கிறார். தவிர, அவர் தயாரித்த பிளேட்டோ இன்றைய அரசியல் கருத்துகள் பலவற்றிற்கு தந்தையாக இருக்கிறார்.

காரல் மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோரால் தயாரித்து, லெனின்- ஸ்டாலின் போன்றோரால் புடம் போட்டு எடுக்கப்பட்ட பொதுவுடைமைத் தத்துவம், பிளேட்டோ என்னும் சிந்தனை உலைக் கூடத்தில் தயாரானதுதான்.

ஹெகல் என்னும் ஜெர்மன் நாட்டுத் தத்துவஞானி, பிளேட்டோவின் உலைக் கூடத்தைப் பயன்படுத்தித்தான் புளித்துப் போன நாசிச கருத்துகளுக்கு ஜாடை காட்டினான். அந்தக் கட்டாரியைக் கொண்டு தவறான வழியில் பயன்படுத்தித் தலை கொய்ய முற்பட்டனர் இட்லர், முசோலினி போன்ற எதேச்சதிகாரிகள்.

இதுபோன்ற நல்லவற்றிற்கும் தீயனவற்றிற்கும் மூலப்பொருள் உதவியவர் பிளேட்டோ. அந்த பிளேட்டோவை தயாரித்ததோ சாக்ரடீஸ்”.

## நம் காலத்துக்கு கலைஞர்!

இந்தக் குறிப்புகளில் நான் நெடுநேரம் நிற்கிறேன். ஒரு தத்துவத்தின் வரலாற்றுப் போக்கை, மிக எளிமையாக, ஆரம்ப வாசிப்பு அனுபவம் கொண்டவர் கூடப் புரிந்து கொள்ளும் வகையில், அவரால் இலக்கியத்துவத்துடன் எழுத முடிகிறது.

இந்தியாவில் சில கம்யூனிஸ்ட் அமைப்புகள்கூட மாசே-துங் மீது மாறுபட்ட பார்வை கொண்டிருக்கின்றன. ஆனால், கலைஞரோ மாவோவின் நெடும்பயணம் குறித்து விவரிக்கையில், ஒரு சித்திரத்தைக் கண் முன்னே கொண்டு வருகிறார்.

சீனாவின் மலைகள், ஆறுகள் அவற்றைக் கடந்து செல்லும் மாசே-துங், சூ-என்லாய் தலைமையிலான செம்படையின் பிரதானப் பிரிவு , கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மக்கள் படை, இரவு பகல் பாராமல் நடந்த ஓராண்டு நடைப் பயணம், எல்லாவற்றையும் இளைஞர்களுக்கு விளக்கும் அவர் “இது உலக வரலாற்றில் ஈடுஇணையில்லா நிகழ்ச்சி” எனப் புகழாரம் சூட்டுகிறார்.

சேகுவேராவை பற்றிக் குறிப்பிடுகையில் “தன்னைக் காவு கொடுத்துக் கொண்டாவது மக்களுக்கு வெளிச்சத்தைக் காட்ட வேண்டும் என்ற வெறி அவரது கண்களில் எப்போதும் ஒளி விட்டுக்கொண்டே இருந்தது”என்கிறார்.

ஒப்பிட்டுப் பாருங்கள். இதை வாசிக்கும் இளைஞர்கள் சேகுவேராவை அவரது காலத்துடன் பொருத்திப் பார்த்து புரிந்து கொள்ள முடியும். அதேநேரத்தில், கலைஞரின் இறுதிக் காலம் வரை மக்களுக்கு வெளிச்சத்தைக் காட்ட வேண்டும் என்கிற ஒரு வெறி அவரது கண்களில் இருந்துகொண்டே இருந்ததைக் காலத்தை அறிந்தவர்களாலும் , களத்தை அறிந்தவர்களாலும் உணர முடியும். அந்த ஒளிதான் இளைஞர்களின் எதிர்காலத்தை நிச்சயமிட்டுக் காட்டியது.

அவர் சொற்களிலேயே சொல்வதனில் “வால்டேர் தனது புரட்சியில் கையில் ஆயுதம் ஏந்தவில்லை, ஆயிரக்கணக்கான படை வீரர்களைக் கொண்டு சேனையை நடத்தி யுத்தம் புரியவில்லை,

**‘தலையிலே சிந்தனை...**

**கையிலே பேனா...**

**நெஞ்சிலே உறுதி!’** எனக் குறிப்பிடுவார்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டும் எனில், நம் காலத்தில் கலைஞர்.

## திராவிட இயக்க இதழ்கள் - ‘இளைய சூரியன்’




நம் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபோது, அவரால் 1993-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இதழ் ‘இளைய சூரியன்’.

தலைவர் அவர்களை ஆசிரியராகவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எழுத்தில் உருவாகி, நம் கழகத் தலைவர் நடிகராகத் தோன்றிய ‘ஒரே ரத்தம்’ திரைப்படத்தின் இயக்குநர் சொர்ணம் அவர்களை பொறுப்பாசிரியராகவும் கொண்டு, வெளிவந்தது இந்த வார இதழ்.அரசியல், திரைப்படச் செய்திகள், கதைகள், கவிதைகள் போன்றவை இடம் பெற்றிருந்தாலும், பெருமளவில் இளைஞர் அணி தொடர்பான செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அந்த இதழ் வந்ததாக அன்றைய இளைஞர் அணியில் இருந்த நிர்வாகிகள் தெரிவிக்கிறார்கள்.

வாரந்தோறும் நம் கழகத் தலைவர் அவர்களின் கேள்வி-பதில் தொடர் வெளிவந்திருக்கிறது. 1994-ஆம் ஆண்டு வரை அந்த இதழ் வெளிவந்துள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### ஈழ ஆதரவு நிதி!



நச்சினார்க்கினியன்

1980-இல் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நிதி வசூல் செய்ய, தலைவர் கலைஞர் அழைப்பு விடுத்தார். சட்டமன்றக் கட்டடத்தில் கழக அலுவலகம் இயங்கி வந்தபோது அங்கு செயற்குழுக் கூட்டம் கூட்டப்பட்டது. அதில் தலைவர் கலைஞர், பேராசிரியர், சாதிக் பாட்சா, நாஞ்சில் மனோகரன் ஆகியோர் முன்னிலையில் மாவட்டந் தோறும் வசூல் செய்யப்பட்ட நிதியை, கலைஞரிடம் வழங்கினோம். என் தந்தை குமார சுப்பிரமணியம் அவர்களும் அந்தக் கூட்டத்தில் பங்கேற்றுப் புகைப்படம் எடுத்துக் கொண்டார். கலைஞருக்கும் நாஞ்சிலாருக்கும் இடையில் என் தந்தை அமர்ந்துள்ளார்.

**-சு.நச்சினார்க்கினியன்,**
**அமைப்பாளர்,**
**மாநகர இலக்கிய அணி,**
**திருநெல்வேலி.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கர்நாடக கழகம்!

**1949-ஆம் ஆண்டு, தி.மு.க.வின் தொடக்க நாட்களிலேயே பெங்களூரு, சித்தூர், திருவனந்தபுரம் ஆகிய பகுதிகளில் கிளைகள் உருவாகின. இந்தக் கிளைகள் அந்தந்த மாநில அமைப்புகளுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருக்கும் விதமாக அமைக்கப்பட்டன. கர்நாடகத்தில் தமிழர்கள் அதிகமாக இருந்ததால், தி.மு.க.வின் வேகம் அங்கே அதிகம் இருந்தது. விளைவாக, தமிழ்நாட்டுக்கு வெளியே கழகம் கர்நாடக மாநிலத்தில் வலுவாக இருந்தது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 333




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131